# புதிய ஜனநாயகம்

மார்ச் 2014
ரூ.10.00



## மோடி:
## 24x7 தேசிய இம்சை!

# த.மு.மு.க. - தமிழக தாலிபான்!

## புரட்சிகர அமைப்பின் துணையோடு இசுலாமிய மதவெறியர்களை மண்ணைக் கவ்வ வைத்த ஒரு இளம் பெண்ணின் போராட்டம்.

**கோ**வை அரசு சட்டக்கல்லூரி மாணவியான அனீஸ் பாத்திமா, புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியில் செயல்பட்டு வருகிறார். இவர் கடந்த ஜனவரி-27 அன்று தமது சொந்த ஊரில் இருந்து கோவைக்குப் புறப்பட்டார். கோவை செல்லும் பேருந்தைப் பிடிக்க வேண்டுமென்றால் அவரது கிராமத்திலிருந்து 18 கிலோமீட்டர் தொலைவில் உள்ள சிறு நகரான மீமிசலுக்குத்தான் செல்ல வேண்டும். இரவில் தமது பெண்ணைத் தனியாக அனுப்பிவைக்கத் தயங்கிய அவரது வயதான பெற்றோர்கள், அதே கிராமத்தைச் சேர்ந்தவரும் பு.மா.இ.மு.வின் உறுப்பினரும் தமது குடும்ப நண்பருமான தோழர் முத்துக்கிருஷ்ணனை உடன் அனுப்பி வைத்தனர்.

''ஒரு இசுலாமியப் பெண் இந்து பையனுடன் பேருந்து நிலையம் வந்திருப்பதை''க் கண்டு இசுலாமிய மதவெறித் தலைக்கேறிப் போன தமிழக முசுலீம் முன்னேற்றக் கழகத்தை சேர்ந்த கும்பலொன்று அவர்களைப் பின்தொடர்ந்து சென்று, அனீஸ் பாத்திமாவையும் முத்துக்கிருஷ்ணனையும் தரக்குறைவாகப் பேசி இழிவுபடுத்தியது. அனீஸ் பாத்திமாவைப் பேருந்தை விட்டு கீழே இறங்குமாறு மிரட்டிய அக்கும்பல், அப்பெண்ணுக்கு ஆதரவாகப் பேசிய பேருந்து ஓட்டுநரிடமும் தனியார் பேருந்து நிர்வாகத்திடமும் கொலை மிரட்டல் விடுமளவிற்குச் சென்றது.

பேருந்து ஏற்றிவிடவே தான் வந்திருப்பதாக எடுத்துக்கூறிய தோழர் முத்துக்கிருஷ்ணன், பாத்திமாவின் அண்ணனுடைய தொலைபேசி எண்ணைக் கொடுத்து அவரிடமே விசாரித்து உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு பதிலளித்தார். அனீஸ் பாத்திமாவின் அண்ணனும் பு.மா.இ.மு.வைச் சேர்ந்த வழக்குரைஞருமான அலாவுதீன் தனது சொந்த விசயத்தில் த.மு.மு.க.வினர் தலையிட உரிமையில்லையென்று தொலைபேசி வழியாக எச்சரித்தார். இதற்கிடையில் பேருந்தும் கோவைக்குப் புறப்பட்டது.

ஆனாலும், அம்மதவெறிக் கும்பல் அடங்க மறுத்து, தமக்கு ஆதரவாக மேலும் சிலரைத் திரட்டிக் கொண்டு, பத்துக்கும் மேற்பட்ட ''பைக்''குகளில் பேருந்தைத் துரத்திச் சென்று வழிமறித்தது. பேருந்துக்குள் திமுதிமுவென்று நுழைந்த அக்கும்பல், ''உன் காலேஜ் ஐ.டி.யைக் காண்பி, நீ உத்தமியான்னு பாக்குறோம்'' என்று பாத்திமாவை மிரட்டியது. ''இந்த தேவடியா இஸ்லாத்தைக் கெடுக்க வந்தவள், இவளையெல்லாம் கொல்லணும், படிக்கிற திமிருல விபச்சாரம் பண்ணுரா'' என்று மிகவும் கீழ்த்தரமான முறையில் கூச்சலிட்டது.

''உன்னிடம் அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டிய அவசியம் இல்லை, போலீசை வரச்சொல், அவர்களிடம் காண்பிக்கிறேன்'' என்று முகத்திலறைந்தாற்போல் கூறி எதிர்த்து நின்றார் பாத்திமா. இப்பதிலால் அவமானப்பட்டுப் போன அக்கும்பல் அவரைத் தாக்க முயற்சித்த போது, ''அடித்துப் பாருடா'' என்று துணிவோடு எதிர்கொண்டார் அவர். அசாதாரணமான இத்துணிவைக் கண்டு திகைத்துப் போன அக்கும்பல், பாத்திமாவின் உடைமைகளை பேருந்திலிருந்து கீழே வீசியெறிந்து, அவரையும் தரதரவென்று இழுத்துக் கீழே தள்ளியது.

கூட்டம் கூடிவிடவே, ''ஒரு பொண்ணு அதுவும், முஸ்லீம் பொண்ணு இப்படியெல்லாம் ஆம்பளைக்கு சமமாகப் பேசக் கூடாது'' என்று கூறி, பஞ்சாயத்துப் பேசும் சாக்கில் அருகில் உள்ள வீட்டிற்கு பாத்திமாவைக் கொண்டு செல்ல முயற்சித்தது, அக்கும்பல். ''பஸ்ஸை மறித்து நடு

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...



**புதிய ஜனநாயகம்**
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 29 இதழ்: 5
மார்ச் 2014

உள்நாடு
தனி இதழ்: ரூ.10.00
ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

### ராஜீவ் கொலை வழக்கு – எழுவர் விடுதலை:

# பார்ப்பன ஜெயாவின் கபடத்தனமும் பாசிச காங்கிரசின் தமிழின விரோதமும்

**ரா**ஜீவ் கொலையைத் தொடர்ந்து அன்று கிளப்பி விடப்பட்ட அனுதாபம், ராஜீவ் கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டோருக்கு ஆதரவாக இன்று எழுந்திருக்கும் அனுதாபம் - என்ற நேரெதிரான இரண்டு விசயங்களையும் தனது அரசியல் ஆதாயத்துக்குப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் ஜெயலலிதா. மூவர் தூக்கு மட்டுமல்ல, ஈழப் பிரச்சினை என்பதே ஜெயலலிதாவைப் பொருத்தவரை, அவர் விரும்பிய படியெல்லாம் ஆதாயங்களைக் கறந்து கொள்ளக் கிடைத்த காமதேனுவாகத்தான் அன்று முதல் இன்று வரை பயன்பட்டு வருகிறது. அவ்வாறு கறந்து கொடுக்கும் பணியைத் தமிழகத்தின் இனவாதிகள் செய்து வருகிறார்கள் என்று கூறுவது மேலும் பொருத்தமாக இருக்கும்.

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரின் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கின்ற உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்தவுடனே, அம்மூவர் உள்ளிட்டு ராஜீவ் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 7பேரையும் விடுதலை செய்ய இருப்பதாகவும், மூன்று நாட்களுக்குள் மத்திய அரசு தனது கருத்தைத் தெரிவிக்கத் தவறினால், மூவரையும் தமிழக அரசு விடுவித்துவிடும் என்றும் அதிரடியாக அறிவித்தார் ஜெயலலிதா.


நோயாளியான தந்தையைப் பார்ப்பதற்குக்கூட நளினிக்கு பரோல் தர முடியாது என்று அனுமதி மறுத்த ‘‘மனிதாபிமானி’’யும், நளினியின் தூக்கு தண்டனையைக் குறைத்ததற்காகவும், நால்வரையும் தூக்கிலிடுவதைத் தாமதித்ததற்காகவும் கருணாநிதியைச் சாடிய ‘‘சுப்பிரமணிய மாமி’’ யுமான ஜெயலலிதா, மூன்றே நாளில் அனைவரையும் விடுவிக்க வேண்டும் என்று மத்திய அரசுக்குக் கெடு வைத்து கர்ச்சிக்கிறார் என்றால், அதன் நோக்கம் நேர்மையானதாக இருக்குமென்று அரசியல் மூடர்கள் கூட நம்ப இயலாது.

நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரசுடனான தி.மு.க., தே.மு.தி.க.-வின் கூட்டணி வாய்ப்புகளை முறியடிப்பது ஜெயலலிதாவின் முதல் நோக்கம். மூவர் விடுதலைக்காகப் போராடிய - குரல் கொடுத்த அனைவரையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அதன் பெருமையையும் புகழையும் களவாடிக் கொள்வது இரண்டாவது நோக்கம். மூவர் விடுதலையை முன்மாதிரியாகக் கொண்டு தருமபுரியில் மாணவிகளை எரித்துக் கொன்ற ரத்தத்தின் ரத்தங்களையும் விடுவிப்பதற்கான ஏற்பாடு செய்வது மூன்றாவது நோக்கம். தனது அதிரடி அறிவிப்பின் காரணமாக மூவர் விடுதலை தடைப்பட்டு விடுமோ என்ற கவலை ஜெயலலிதாவுக்கு இல்லை. ஏனென்றால், அவர்களை விடுவிக்கக் கூடாது என்பதும் தூக்கிலிட வேண்டும் என்பதும்தான் ஜெயலலிதாவின் கொள்கையாக இருந்து வந்திருக்கிறது.


தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்த தீர்ப்புக்கும், எழுவரை விடுதலை செய்வது என்ற தமிழக அரசின் முடிவுக்கும் எதிராக உச்ச நீதிமன்றத்தில் அடுத்தடுத்து மனுச் செய்திருக்கிறது மத்திய காங்கிரசு அரசு. இம்மனுக்களை அனுமதித்திருக்கும் உச்ச நீதிமன்றம், ‘‘எழுவர் விடுதலை எனும் முடிவை மேற்கொள்வதற்கு முன்னர் பின்பற்றியிருக்க வேண்டிய வழிமுறைகளைத் தமிழக அரசு பின்பற்றியதாகத் தெரியவில்லை’’ என்றும் கூறியிருக்கிறது. இவையனைத்தும் ஜெயலலிதா எதிர்பார்த்த எதிர்வினைகள்தாம்.

ஜெயலலிதாவின் தந்திரங்கள் ஒரு புறமிருக்கட்டும். ஈழப் போராட்டத்தைக் கருவறுத்ததுடன், இராஜபக்சேயுடன் இணைந்து இனப்

படுகொலையையும் நடத்தி முடித்திருக்கும் காங்கிரசுக்கு, பழிவாங்கும் ரத்த வெறி இன்னமும் அடங்கவில்லை என்பதையே அதன் நடவடிக்கைகள் காட்டுகின்றன. மத்திய அரசின் மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்ட மறுகணமே, காங்கிரசார் அதனை வெடிவெடித்துக் கொண்டாடி, தாங்கள் நசுக்கி ஒழிக்கப்பட வேண்டிய நச்சுப்பூச்சிகள் என்பதை மீண்டும் நிரூபித்திருக்கின்றர்.


முருகன்


பேரறிவாளன்


சாந்தன்

‘‘கருணை மனுவின் மீது முடிவெடுப்பதில் நடந்திருக்கும் கால தாமதம் என்ற காரணத்துக்காக தூக்கு தண்டனையை ரத்து செய்வதென்பது பிற வழக்குகளுக்கு வேண்டுமானால் பொருந்தலாம்; ஒரு பிரதமரைக் கொலை செய்த வழக்கிற்குப் பொருந்தாது; அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்பியது ராஜீவ் என்ற தனிநபரல்ல, இந்திய அரசு. எனவே, இந்தக் கொலை தனிநபருக்கு எதிரானது அல்ல, தேசத்துக்கு எதிரான குற்றம் என்பதால் இதனை மன்னிக்கவே கூடாது’’ என்பதுதான் காங்கிரசின் வாதம். சுப்பிரமணிய சாமி, சோ, பாரதிய ஜனதா உள்ளிட்டோரின் வாதமும் இதுவேதான்.

ஆனால், 1999-இல் 19 பேரை விடுதலை செய்து நால்வரின் தூக்கு தண்டனையை உறுதி செய்த உச்சநீதி மன்றத் தீர்ப்பு, ‘‘இந்தக் கொலை ஒரு பயங்கரவாத நடவடிக்கையோ, தேசத்துக்கு எதிரான தாக்குதலோ அல்ல; ராஜீவ் என்ற தனிநபருக்கு எதிரான பழிவாங்கும் நடவடிக்கை மட்டுமே’’ என்றும் கூறியிருக்கிறது. மேலும், சிறீபெரும்புதூரில் கொல்லப்படும்போது ராஜீவ் பிரதமரல்ல; தனது ஊழல்கள் மற்றும் பாசிச நடவடிக்கைகளின் காரணமாகத் தோற்றுப்போய் மதிப்பிழந்த ஒரு முன்னாள் பிரதமர். இந்த உண்மைகளையெல்லாம் வேண்டுமென்றே இருட்டடிப்பு செய்துவிட்டுத்தான், ‘‘ராஜீவ் கொலை என்பது தேசத்துக்கு எதிரான தாக்குதல்’’ என்ற தனது பிரச்சாரத்தைத் தொடர்ந்து நடத்துகிறது பார்ப்பனக் கும்பல். ராஜீவால் இலங்கைக்கு அனுப்பப்பட்ட இந்திய இராணுவம் தோற்றுப்போய் மதிப்பழந்து திரும்பி வந்த பின்னரும், அந்த ஆக்கிரமிப்பையும் படுகொலையையும் ‘‘தேசத்தின் முடிவு’’ என்று கூறி நியாயப்படுத்துகின்றது.

இந்த அடிப்படையில்தான் ‘‘தூக்கு தண்டனையை ரத்து செய்த தீர்ப்பே தவறு’’ என்கிறார் அருண் ஜேட்லி. ‘‘இவர்களுக்கெல்லாம் கருணை காட்டுவது என்ற பேச்சுக்கே இடமில்லை’’ என்கிறார் ரவிசங்கர் பிரசாத். ‘‘அரசியல் சட்டப்பிரிவு 256-இன் கீழ் இம்முடிவை அமல்படுத்த விடாமல் தமிழக அரசை பிரதமர் தடுக்க வேண்டும்’’ என்கிறார் சு.சாமி. இவர்கள் அனைவரும் பாரதிய ஜனதாவின் தலைவர்கள். ஆனால், தமிழக பா.ஜ.க. தலைவர் பொன்.இராதாகிருஷ்ணனோ, எழுவரை விடுவிப்பது என்ற ஜெ.அரசின் முடிவை பாரதிய ஜனதா ஆதரிக்கிறது என்று தைரியமாகப் புளுகுகிறார். ஜெயலலிதா நடத்துவது நாடகம் என்று தெரிந்தவரான ஒப்பனைக்காரர் சோ, கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் இதனை, ‘‘இதெல்லாம் அரசியல்’’ என்கிறார். திராவிட அரசியலுக்கு ஜெயலலிதா பலியாகி விட்டதாகவும், இத்தகைய அணுகுமுறை அவர் தேசிய அரசியலில் இறங்குவதற்கு உதவாது என்றும் அங்கலாய்த்துக் கொள்கிறது எக்ஸ்பிரஸ் நாளேடு.


நளினி


ரவிச்சந்திரன்


ராபர்ட் பயஸ்


ஜெயக்குமார்

மூவர் தூக்கு ஆகட்டும், ஈழப் பிரச்சினையாகட்டும், காஷ்மீர் பிரச்சினையாகட்டும் - இவையனைத்தையும் பொருத்தவரை காங்கிரசு, பாரதிய ஜனதா போன்ற வெறியர்கள் மட்டுமின்றி, வட இந்தியக் கட்சிகள், ஊடகங்கள் முதல் அரவிந்த் கேஜ்ரிவால் வரையிலான அனைவரின் கருத்தும் ஒன்றுதான். அமைதிப் படையை அனுப்பியது முதல் இனப் படுகொலையை உடனிருந்து நடத்தியது வரையிலான எல்லா நடவடிக்கைகளும், காஷ்மீர் மற்றும் வடகிழக்கிந்திய மாநிலங்களில் இந்திய அரசு மேற்கொள்ளும் இராணுவ ஒடுக்குமுறைகளும் சரியானவை, கட்சி அரசியல் மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டவை, தேசிய நலனின் பாற்பட்டவை என்பதுடன், இவற்றை எதிர்ப்பவர்கள் அனைவரும் தேசவிரோத சக்திகள் என்பதுதான் இவர்களது கண்ணோட்டம்.



நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரசுடனான தி.மு.க., தே.மு.தி.க.-வின் கூட்டணி வாய்ப்புகளை முறியடிப்பது ஜெயலலிதாவின் முதல் நோக்கம். மூவர் விடுதலைக்காகப் போராடிய - குரல் கொடுத்த அனைவரையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அதன் பெருமையையும் புகழையும் களவாடிக் கொள்வது இரண்டாவது நோக்கம். மூவர் விடுதலையை முன்மாதிரியாகக் கொண்டு தருமபுரியில் மாணவிகளை எரித்துக் கொன்ற ரத்தத்தின் ரத்தங்களையும் விடுவிப்பதற்கான ஏற்பாடு செய்வது மூன்றாவது நோக்கம்.

சுருங்கக்கூறின், பார்ப்பன இந்து தேசியமும், இந்திய ஆளும் வர்க்கத்தின் பிராந்திய நலனும், அரசியல் சட்டத்துக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் முடிவுக்கும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்துக்கும் உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கும் அப்பாற்பட்டவை என்பதுதான் காங்கிரசு, பாரதிய ஜனதா உள்ளிட்ட கட்சிகளின் கருத்து. நாட்டின் பாதுகாப்பு, இறையாண்மை என்ற பெயரில், ஆக்கிரமிப்பு முதல் இன அழிப்பு வரை எதையும் செய்யலாம் என்ற பாசிச அரசியலை அவர்கள் ஆணவமாகப் பேசுகிறார்கள்.

அதே நேரத்தில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும், எழுவரின் விடுதலை செய்வது என்ற ஜெ.அரசின் முடிவையும் வரவேற்று கொண்டாடுவோர் இதனை எப்படி எதிர்கொள்கிறார்கள்? இராஜபக்சேவின் இன அழிப்புப் போருக்குத் துணை நின்ற இந்திய அரசுக்கு எதிராகவும், அமைதிப் படையின் அட்டூழியங்களுக்கு எதிராகவும் மற்ற சந்தர்ப்பங்களில் சண்டமாருதம் செய்யும் வைகோ, சீமான், நெடுமாறன், தமிழருவி மணியன் உள்ளிட்டோர், ''ஈழத்தின் மீதான இந்திய ஆக்கிரமிப்புப் போரின் எதிர்விளைவுதான் இராஜீவ் கொலை; ஆகவே, அது போர்க்குற்றவாளிக்கு எதிரான ஒரு நடவடிக்கை'' என்று பேசுவதில்லை. இலங்கை அரசின் இறையாண்மை கொண்ட அதிகாரத்தின் பெயரால் இன அழிப்புப் போரை ராஜபக்சே நியாயப் படுத்துவதைப் போலத்தான், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைக் காட்டி இந்திய அமைதிப் படையின் போர்க் குற்றங்களை இந்திய அரசு நியாயப்படுத்துகிறது என்று பதிலடி கொடுப்பதில்லை.

நசுக்கி ஒழிக்கப்படவேண்டிய நச்சுப்பூச்சிகள்:
மத்திய அரசின் மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொண்ட மறுகணமே, அதனை வெடி வெடித்துக் கொண்டாடும் காங்கிரசாரின் வக்கிரம்.



ராஜீவ் கொலை என்பது பயங்கரவாத நடவடிக்கை அல்ல என்று உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியிருந்த போதிலும், பயங்கரவாத தடை சட்டத்தின் (தடா) கீழ், போலீசே எழுதிக்கொண்ட வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் இந்தத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது. அதிலும் பித்தலாட்டம் செய்த தியாகராசனின் ஒப்புதல் வாக்குமூலமும் இப்போது வெளிவந்திருக்கிறது. இத்தனைக்குப் பின்னரும் தனது தீர்ப்பை மீளாய்வுக்கு உட்படுத்த மறுக்கும் உச்சநீதிமன்றத்தின் நேர்மையை இவர்கள் கேள்விக்குள்ளாக்குவதில்லை. அப்சல்

குரு முதல் வீரப்பன் கூட்டாளிகள் வரையிலான பலருக்கும் உச்ச நீதி மன்றம் விதித்த தண்டனைகள் அனைத்தும் அரசியல் ரீதியான முடிவுகளேயன்றி, சாட்சியங்கள் அடிப் படையில் வழங்கப்பட்ட தீர்ப்புகளல்ல என்ற உண்மையை மூவர் பிரச்சினையுடன் இவர்கள் இணைத்துப் பேசுவதில்லை.







மாறாக, ''ராஜீவைக் கொலை செய்தது தவறு; உண்மையான குற்ற வாளிகளைப் பிடித்து தண்டியுங்கள்; மூவரும் நிரபராதிகள் என்பதால் விட்டு விடுங்கள்'' என்று கெஞ்சுகிறார்கள். அல்லது, ''மூவருக்காக மட்டும் கேட்கவில்லை, மரணதண்டனையே கூடாது என்பதால் கேட்கிறோம்'' என்று மேலும் ஒரு அடி பின்வாங்குகிறார்கள். மூன்று பேரின் உயிரை எப்பாடுபட்டேனும் காப்பாற்றுவதுதான் தங்களது நோக்கம் போலவும், அதன் பொருட்டுத்தான் மேற்கூறிய கேள்விகளை எழுப்பாமல் தம்மைக் கட்டுப் படுத்திக் கொண்டு இருப்பது போலவும் இவர்கள் காட்டுவது வெறும் பம்மாத்து.

> இராஜபக்சேவின் இன அழிப்புப் போருக்குத் துணை நின்ற இந்திய அரசுக்கு எதிராகவும், அமைதிப் படையின் அட்டூழியங்களுக்கு எதிராகவும் மற்ற சந்தர்ப்பங்களில் சண்டமாருதம் செய்யும் வைகோ, சீமான், நெடுமாறன், தமிழருவி மணியன் உள்ளிட்டோர், ''ஈழத்தின் மீதான இந்திய ஆக்கிரமிப்புப் போரின் எதிர்விளைவுதான் இராஜீவ் கொலை; ஆகவே, அது போர்க்குற்றவாளிக்கு எதிரான ஒரு நடவடிக்கை'' என்று பேசுவதில்லை.

இனவாத பிழைப்புவாதிகளைப் பொருத்தவரை, இது மூவரைக் காப்பாற்றுவது பற்றிய பிரச்சினையல்ல; தங்கள் சொந்த அரசியல் எதிர்காலத்தைக் காப்பாற்றிக் கொள்வது குறித்த பிரச்சினை. அதனால்தான் மூவரையும் தூக்கிலிடவேண்டும் என்று கூறும் அருண் ஜெட்லிக்கு எதிராக வைகோ உள்ளிட்டோர் பேச மறுக்கின்றனர். இப்பிரச்சினையில் பாரதிய ஜனதாவின் நிலைப்பாடு தெரிந்தேதான் அனைவரும் கூட்டணி அமைக்கின்றனர். பொன். இராதாகிருஷ்ணன் பேசுவது பித்தலாட்டம் என்று தெரிந்தேதான் தமிழருவி மணியன் உள்ளிட்ட அனைவரும் மோடிக்கு காவடி எடுக்கிறார்கள்.

ஜெயலலிதா இப்பிரச்சினையைத் தனது அரசியல் சதுரங்கத்தில் பகடைக்காயாகப் பயன்படுத்துவதைக் கண்டு மனம் குமுறியபோதிலும், ஜெயலலிதாவின் இரட்டை வேடத்தைத் தோலுரிக்க இவர்கள் மறுக்கிறார்கள். அவ்வாறு இவர்கள் அம்பலப்படுத்துவதன் காரணமாக ஜெயலலிதா தனது முடிவிலிருந்து பின்வாங்கிவிடவும் முடியாது என்பதையும் இவர்கள் அறிவார்கள். ஈழத்தைப் பகடைக்காயாகப் பயன் படுத்திக் கொள்ள ஜெயலலிதாவுக்கு உதவியவர்களே இவர்கள்தான் என்பதுதான் இவர்கள் வாய்திறக்க முடியாத நிலையின் இரகசியம்.

1991-இல் ராஜீவ் கொலையைத் தொடர்ந்து புலி ஆதரவாளர்கள், ஈழத் தமிழ் அகதிகள், தமிழ் உணர்வாளர்கள், புரட்சிகர அமைப்புகள் உள்ளிட்ட அனைவரின் மீதும் ஜெ.அரசு அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது. இன்று எழுவர் விடுதலையை ஓட்டு வங்கி அரசியல் என்று பேசும் பார்ப்பனக் கும்பல், அன்று ராஜீவின் மரணத்தைப் பயன்படுத்தித் தமிழகத்தைத் தனது ஓட்டு வங்கியாக்கிக் கொண்டது. ஈழப் போராட்டத்தையும் ஈழத்தமிழ் மக்களையும் எதிரிகளாகப் பார்க்கும் மனோபாவத்திற்கு தமிழக மக்கள் ஆட்படுத்தப்பட்டிருந்தனர்.

ராஜீவ் மரணத்துக்கு மொட்டை போட்டு ஒப்பாரி வைக்கும் அளவுக்கு சீரழிந்திருந்த தமிழக மக்களின் மனோபாவம், குறிப்பிடத்தக்க அளவிற்கு மூவர் தூக்குக்கு எதிரானதாக மாறியிருக்கிறது என்று சொன்னால், அதனைச் சாதித்திருப்பது மரணதண்டனை ஒழிப்பு மனிதாபிமான அரசியல் அல்ல. ''இந்திய அரசு ஈழப்போராட்டத்தின் எதிரி'' என்ற அரசியல் கருத்து எந்த அளவுக்குத் தமிழக மக்கள் மத்தியில் விதைக்கப் பட்டதோ, அந்த அளவுக்குத்தான் தூக்கு தண்டனை எதிர்ப்புக் குரலும் தமிழகத்தில் எழுந்தது. எழுவர் விடுதலை குறித்த ஜெ.அரசின் அறிவிப்பு என்பது அதன் விளைவுதான்.

இனவாத பிழைப்புவாதிகள் இந்த உண்மையை இருட்டடிப்பு செய்து தமிழக மக்களை அரசியல் மொன்னைகளாக மாற்றுவதற்கான நோக்கம், மோடிக்கும் ஜெயலலிதாவுக்கும் காவடி தூக்கும் அவர்களது அரசியல் பிழைப்புவாதமே அன்றி, வேறல்ல. இந்த அரசியல் பிழைப்புவாதிகளும் பார்ப்பன பாசிஸ்டுகளும் இன்னொரு முறை ஈழப் பிரச்சினையைத் தமது அரசியல் ஆதாயத்துக்குப் பயன்படுத்திக் கொள்வதை நாம் அனுமதிக்கப் போகிறோமா என்பதே நம்முன் இருக்கும் கேள்வி.

# தரகு முதலாளிகளின் சேவையில் . . .

# மோடி - ராகுல் போட்டாபோட்டி!

**விலைவாசி உயர்வு, வேலைவாய்ப்பின்மையால் மக்கள் அவதிப்படும்பொழுது, மோடியும் ராகுலும் ஹைடெக் சிட்டி, பிராண்ட் பேண்ட் இணைப்பு என ஜிகினா காட்டுகிறார்கள்.**

எதிர்வரவுள்ள நாடாளுமன்றத் தேர்தல்களையொட்டி, ''முதல்முறையாக வாக்களிக்கப் போகும் இளைஞர்கள் கவலைகொள்ளும் பிரச்சினை என்ன?'' என்ற தலைப்பில் இந்தியா-டுடே இதழ் 28மாநிலங்களில் ஐயாயிரத்துக்கும் மேற்பட்டோரிடம் நடத்திய கருத்துக் கணிப்பில், 76.3 சதவீதம் பேர் நல்ல வேலையைத் தேடிக் கொள்வதை முக்கிய பிரச்சினையாகக் குறிப்பட்டுள்ளனர். 73.7 சதவீதம் பேர் கல்வியையும், 62.7 சதவீதம் பேர் வறுமையையும் முக்கிய பிரச்சினைகளாகக் குறிப்பிட்டுள்ளனர். இதே கருத்துக் கணிப்பில், ''மக்களவைத் தேர்தலில் முக்கிய பிரச்சினை எது?'' என்ற கேள்விக்கு அவர்கள் அளித்த பதிலில் விலைவாசி உயர்வு முதலிடத்தையும், வேலை வாய்ப்புகள், பெண்களின் பாதுகாப்பு, கல்வி ஆகியவை அடுத்தடுத்த இடங்களையும் பெற்றுள்ளன.

இதே போன்று ஜூனியர் விகடன் இதழ் தமிழகம் முழுவதும் 4,490 பேர் மத்தியில் நடத்திய கருத்துக் கணிப்பில், 1,867 பேர் விலைவாசி உயர்வையும், 1,411 பேர் பெட்ரோல், சிலிண்டர் விலை உயர்வையும் அதிக பாதிப்பை ஏற்படுத்திய பிரச்சினைகளாகக் குறிப்பிட்டுள்ளனர். இவ்விரண்டு கருத்துக்கணிப்புகளும் மிகமிகக் குறைவான மக்கள் மத்தியில் எடுக்கப்பட்டிருப்பினும், விலைவாசி உயர்வு, வேலை வாய்ப்பு, வறுமை, கல்வி, மருத்துவம், பெண்களின் பாதுகாப்பு ஆகியவைதான் அடித்தட்டு மக்களை மட்டுமின்றி, ஓரளவிற்கு நடுத்தர வர்க்கத்தினரைக்கூட வாட்டியெடுக்கக்கூடிய பிரச்சினைகளாக இருந்து வருவதை மறுத்துவிட முடியாது.

ஓட்டுக்கட்சிகள் ஒவ்வொன்றும் மக்கள் தங்களைத் தேர்ந்தெடுத்தால், அவர்கள் வாழ்க்கையில் அளப்பரிய மாற்றங்களைக் கொண்டுவந்துவிடுவோம் என்றவாறு பல கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை அள்ளி வீசி வருவதால், இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அக்கட்சிகளிடம் என்ன திட்டம் உள்ளது? அதை நடைமுறைப் படுத்துவதற்கான வழிமுறை என்ன? என்ற கேள்விகளை முன் வைப்பது அவசியமானதாக உள்ளது. குறிப்பாக, தற்போதைய பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் அர்விந்த் கேஜ்ரிவால், மம்தா, மாயாவதி, ஜெயா உள்ளிட்ட மற்ற ஓட்டுக்கட்சித் தலைவர்களை விடப் பிரதமர் பதவிக்குத் தகுதி வாய்ந்த 'நாயகர்களாக' ஊடகங்களாலும், முதலாளித்துவ அறிவுத்துறையினராலும் முன்னிறுத்தப்படும் ராகுல் காந்தி, நரேந்திர மோடி ஆகிய இருவரும் இந்தப் பிரச்சினைகள் குறித்துச் சொல்வதென்ன என்பதை அறிந்துகொள்வது இன்னும் முக்கியமானது.

''100 புதிய நகரங்களை உருவாக்குவேன்; நதிகளை இணைப்பேன்; வர்த்தகம் (டிரேட்), தொழில்நுட்பம் (டெக்னாலஜி), சுற்றுலா (டூரிஸம்), திறன் (டேலண்ட்), பாரம்பரியம் (டிரேடிஷன்) ஆகிய ஐந்து ''டி''-களின் மூலம் இந்தியாவைச் சர்வதேச அளவிற்கு முன்னேற்றப் போவதாக''த் தனது பொருளாதார திட்டத்தை அறிவித்திருக்கிறார், மோடி.

''பஞ்சாயத்துக்களின் வறுமை என்பது தகவலின் வறுமையாகும். தகவல் பெறுவதற்கான வழிவகை இல்லாததுதான் உடல் நலம், கல்வி உள்ளிட்ட சேவைகளையும் ஆதாரங்களையும் பெறவிடாமல் தடுக்கிறது. பிராண்ட் பேண்ட் இணைப்பைக் கிராமங்களுக்கு எடுத்துச் செல்வதுதான் இதற்குத் தீர்வு'' எனத் தனது திட்டத்தை முன்வைக்கிறது, ராகுலின் அணி. மேலும், அதிகாரப்பரவலாக்கம், திறன் மேம்பாடு, இரண்டாவது பசுமைப் புரட்சி ஆகியவற்றின் மூலம் வேறு எந்த நாட்டுக்கும் பின்தங்கிவிடாமல் உலகின் பெரிய பொருளாதாரமாக இந்தியாவை மாற்றுவது அவரின் தொலைநோக்காகக் கூறப்படுகிறது.

இவர்கள் இருவரும் முன்வைத்துள்ள திட்டங்களுக்கும் மக்கள் முன்வைக்கும் பிரச்சினைகளுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா? கிராமப்புற விவசாயிகள் தங்களின் விளைபொருட்களுக்கு உரிய விலை கொடுக்கக் கோரிப் போராடுகிறார்களா, இல்லை, பிராண்ட் பேண்ட் இணைய தள இணைப்பைக் கேட்கிறார்களா? மோடி அறிவித்திருக்கும் 100 புதிய நகரங்கள் என்ற திட்டம் விவசாயிகளுக்கு இன்னொரு கொடுந்தீமையாகவே அமையும். ஏழை-நடுத்தர விவ

சாயிகளிடமிருந்து நிலங்களைப் பறிமுதல் செய்யாமல், வானத்திலா 100 நகரங்களை உருவாக்க முடியும்? இந்தியாவை உலகின் பெரிய பொருளாதாரமாக, சர்வதேச அளவில் முன்னேறிய நாடாக மாற்றிவிட்டால், வேலையில்லாத் திண்டாட்டமும், விலைவாசி உயர்வும் ஒழிந்துவிடுமென நம்புவதைவிட, ‘‘கடவுள் மீது பாரத்தைப் போட்டுவிடுவது’’ எவ்வளவோ உத்தமமானது. நாட்டின் பொருளாதாரம் வளர்ந்தால், மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்ந்துவிடும் என்ற கருத்தின் மூலம் பெரும்பான்மையான மக்கள் மூளைச்சலவை செய்யப்பட்டிருப்பதால், ராகுலால், மோடியால் இப்படிபட்ட மோசடியான, நயவஞ்சகமான தீர்வுகளை, வெவ்வேறுவிதமாக ஜோடனை செய்து முன்வைக்க முடிகிறது.

கேட்பதற்கு வெவ்வேறாகத் தோன்றினாலும், ராகுலும் மோடியும் அறிவித்திருக்கும் இந்தத் திட்டங்கள் அடிக்கட்டுமான வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பது என்பதைத் தாண்டி, வேறெதையும் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வாக முன்வைக்கவில்லை. இந்தத் தீர்வு கீறல் விழுந்த ரிக்கார்டுக்குச் சமமானது. பொருளாதார வளர்ச்சியைச் சாதிப்பதற்கு விரைவுச் சாலைகள், அடுக்குப் பாலங்கள், நவீன விமான நிலையங்கள், நகரமயமாக்கம் போன்ற அடிக்கட்டுமான திட்டங்களில் அரசு முதலீடு செய்ய வேண்டுமென்று தனியார்மயம்-தாராளமயம் புகுத்தப்பட்ட காலத்திலிருந்தே இந்தியத் தரகு முதலாளிகள் கோரி வருகிறார்கள். குறிப்பாக, பொருளாதாரம் மந்த நிலையை அடையும்பொழுது இந்தக் கோரிக்கையை அவர்கள் வலுவாக அரசிடம் வைக்கிறார்கள். அந்நிய முதலீடு, வர்த்தகத்திற்கு உள்ள தடைகளை அறவே நீக்க வேண்டும் என வலியுறுத்துகிறார்கள்.

கார்ப்பரேட் முதலாளித்துவ வர்க்கம் முன்வைத்துள்ள இந்தத் தீர்வுகளைத்தான் ராகுலும் மோடியும் எதுகை மோனையோடு தமது சொந்த சரக்குகளைப் போல எடுத்துவிடுகிறார்கள். இதன் மூலம் கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்தின் பிரச்சினைகளை நாட்டின் பிரச்சினையாக, அவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதையே மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதாக மடைமாற்றும் வேலையைத்தான் ராகுலும் மோடியும் செய்கிறார்கள்.



இந்தியத் தரகு முதலாளிகளின் சங்கமான ஃபிக்கியின் பொதுக்குழுக் கூட்டத்தில் உரையாற்றும் ராகுல் காந்தி. (கோப்புப் படம்)

கார்ப்பரேட் முதலாளி வர்க்கத்திற்கு கொழுத்த இலாபத்தை வாரிக் கொடுக்கும் அடிக்கட்டுமான திட்டங்களை உருவாக்கும்பொழுது ஒரு நூறு பேருக்காவது வேலைவாய்ப்பு கிடைப்பதில்லையா என இவர்கள் இதனை நியாயப்படுத்தி வருகிறார்கள். நெல்லுக்குப் பாயும் நீர் ஆங்கே புல்லுக்கும் புசிவது போல, முதலாளிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் கொஞ்சம் கொஞ்சமாகக் கசிந்து அடித்தட்டு மக்களைச் சென்றடையும். அதுவரை காத்திருங்கள் என்பதுதான் இதன் மூலம் இவர்கள் விடுக்கும் செய்தி.

ஆனால், கடந்த இருபது ஆண்டுகளில் ஒரு சிறு துளியாவது கசிந்து அடித்தட்டு உழைக்கும் மக்களின் கைகளில் விழுந்திருக்கிறதா? வாஜ்பாய் ஆட்சியிலும், அதனைத் தொடர்ந்து வந்த ஐக்கிய முன்னணி ஆட்சியிலும் சாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் 8 சதவீதப் பொருளாதார வளர்ச்சி அம்பானி, அசிம்பிரேம்ஜி உள்ளிட்ட கையளவேயான தரகு முதலாளிகளை உலகக் கோடீசுவரர்களாக உயர்த்திய அதே சமயம், கோடிக்கணக்கான மக்களை முன்னெப்போதும் இல்லாத வறுமையிலும் ஏழ்மையிலும்தான் தள்ளிவிட்டது. நாடெங்கிலும் விவசாயிகளின் தற்கொலைச்சாவுகளைத்தான் தீவிரப்படுத்தியது. சிறுதொழில்களை அழிவின் விளிம்பில் கொண்டுவந்து நிறுத்தியது. கிராமப்புற ஏழைகளை, வேலை தேடி உள்நாட்டிலேயே அகதிகளாக அலையும்படி துரத்தியடித்தது. நிரந்தர மற்றும் பாதுகாப்பான வேலைவாய்ப்பு என்பதையே இல்லாது ஒழித்துக் கட்டியது.

> ‘‘கிராமப்புற விவசாயிகள் தங்களின் விளைபொருட்களுக்கு உரிய விலை கேட்டுப் போராடுகிறார்களா, இல்லை, பிராண்ட் பேண்ட் இணையதள இணைப்பைக் கேட்கிறார்களா? ஏழை-நடுத்தர விவசாயிகளிடமிருந்து நிலங்களைப் பறிமுதல் செய்யாமல், வானத்திலா 100 நகரங்களை உருவாக்க முடியும்?’’




புது தில்லியில் நடந்த ஃபிக்கியின் பெண் தொழிலதிபர்கள் கூட்டத்தில் உரையாற்றும் நரேந்திர மோடி. (கோப்புப் படம்)

ராகுலும் மோடியும் அறிவித்திருக்கும் திட்டங்கள், இந்திய மக்களை மரணக் குழிக்குள் தள்ளிவிட்டுள்ள இந்த நிலையை மேலும் தீவிரமாக்குமேயொழிய, எள்ளளவும் அவர்களுக்கு நன்மை செய்துவிடப் போவதில்லை. இந்திய ஊடகங்களுள் பெரும்பாலானவை கார்ப்பரேட் நிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால், அவை இந்தத் திட்டங்களைப் பெயரளவுக்குக்கூட விமர்சிப்பதில்லை. இந்தத்திட்டங்களை விமர்சிப்பது தமது சொந்த நலன்களையே விமர்சிப்பதாகும் என்பதால், ஊடகங்கள் வெளக்குமாறுக்குப் பட்டுக்குஞ்சம் கட்டும் வேலையைத்தான் செய்து வருகின்றன. மேலும், இந்த கார்ப்பரேட் ஊடகங்கள் மிகவும் வெளிப்படையாக ராகுல் கோஷ்டி, மோடி கோஷ்டி எனப் பிரிந்து நின்று கொண்டு, அவர்கள் இருவருக்கும் காவடி தூக்கும் வேலையையும் செய்து வருகின்றன. அவர்கள் இருவருக்கு மட்டுமே பிரதமர் பதவியில் அமருவதற்கான தகுதி இருப்பது போலவும்; அவர்கள் சார்ந்துள்ள கட்சிகளில் ஆயிரம் ஓட்டைகள் இருப்பினும், மோடியும் ராகுலும் அப்பழுக்கற்றவர்களாகவும் இந்தியாவை முன்னேற்றியே தீருவது என்ற இலட்சியத்திற்காகவே வாழும் கர்ம வீரர்கள் போலவும் ஊடகங்களால் தூக்கி நிறுத்தப்படுகின்றனர்.

மோடியும் ராகுலும் அறிவித்திருக்கும் திட்டங்களுக்கு இடையே மட்டுமல்ல, காங்கிரசு, பா.ஜ.க. என்ற இரு ஆளும் வர்க்கக் கட்சிகளுக்கும் இடையேகூட எந்த வேறுபாடும் கிடையாது. காங்கிரசின் ஊழல்களை பா.ஜ.க. பட்டியல் இடும்பொழுது, பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில் இருந்தபொழுது நடந்த கார்கில் சவப்பெட்டி ஊழல், பெட்ரோல் பங்க் ஒதுக்கீடு ஊழல் மற்றும் எடியூரப்பா, ரெட்டி சகோதரர்களின் சுரங்க ஊழல்கள் நினைவுக்கு வருகின்றன. பா.ஜ.க. வெளிப்படையான இந்து மதவெறிக் கட்சி என்றால், காங்கிரசோ இந்து மதவெறியை மட்டுமல்ல, முசுலீம் மத அடிப்படைவாதத்தையும் தனது அரசியல் ஆதாயத்துக்காகப் பயன்படுத்திக் கொள்ளும் நயவஞ்சகக் கும்பலாகும். தனியார்மய-தாராளமயப் பொருளாதாரக் கொள்கையை எப்படி அமல்படுத்துவது என்பதில் வேண்டுமானால் இவர்களுக்கு இடையே வேறுபாடு இருக்குமே தவிர, அந்தக் கொள்கைதான் இந்தக் கட்சிகளின் உயிர்நாடி.

வேலைவாய்ப்பின்மை, விலைவாசி உயர்வு, விவசாயம் மற்றும் சிறுதொழில் நசிவு உள்ளிட்டு மக்கள் அன்றாடம் சந்திக்கும் பிரச்சினைகள் அனைத்திற்கும் அடிப்படையாக இருப்பது இந்த நாசகார மறுகாலனியாதிக்கக் கொள்கைதான். இந்தப் பிரச்சினைகள் நாளும் நாளும் தீவிரமடைந்துவருவது இந்தக் கொள்கையின், இந்த அரசியல்-பொருளாதாரக் கட்டுமானத்தின் தோல்வியைத்தான் குறிக்கிறது. ஆனால், ஆளுங்கும்பலும், அவர்களது கைத்தடிகளான ஊடகங்களும், முதலாளித்துவ அறிவுஜீவிகளும் அதிகாரத்தில் ஆட்களை/கட்சிகளை மாற்றி உட்கார வைப்பதன் மூலம் இப்பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியும் என்ற மோசடித் தீர்வையே மீண்டும் முன்வைக்கிறார்கள். பழைய கள்ளைப் புதிய மொந்தையில் ஊற்றிக் கொடுப்பதைப் போல, ஏற்கெனவே அமலில் உள்ள கொள்கைகள்/திட்டங்களுக்குப் புதிய ஜோடனை செய்து, அதனைப் பொருளாதார நெருக்கடிகளுக்கான தீர்வாகக் காட்டுகிறார்கள். இப்படி ஆளையோ, கட்சியையோ மாற்றிமாற்றி அதிகாரத்தில் உட்காரவைப்பதன்மூலம் இப்பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பதற்கு கடந்த கால அனுபவங்கள் நம் கண் முன்னே உள்ளன. எனவே, இப்பிரச்சினைகளுக்கான தீர்வை, இந்த அமைப்பு முறைக்கு வெளியே, தேர்தல் அரசியல், நாடாளுமன்றம் ஆகியவற்றுக்கு வெளியே தேட வேண்டும் என்பதை உழைக்கும் மக்கள் உணர வேண்டிய தருணம் வந்து விட்டது.

● செல்வம்

> நெல்லுக்குப் பாயும் நீர் ஆங்கே புல்லுக்கும் பொசிவது போல, முதலாளிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் கொஞ்சம் கொஞ்சமாகக் கசிந்து அடித்தட்டு மக்களைச் சென்றடையும். அதுவரை காத்திருங்கள் என்பதுதான் ராகுலும் மோடியும் விடுக்கும் செய்தி.

# மோடி: 24x7 தேசிய இம்சை!


> ஆளும் வர்க்கம் தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள பாதி கிரிமினல் புத்தியும் பாதி முட்டாள்தனமும் கலந்து உருவாக்கப்பட்ட நபர்களையே விரும்புகிறது.

**ஆ**யிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணியான ஒரு கொலைகாரனை, ஒரு முட்டாளாகவோ கோமாளியாகவோ கருத முடியுமா என்று வாசகர்கள் எண்ணலாம். ‘‘கிரேட் டிக்டேடர்’’ என்ற திரைப்படத்தில் இட்லரையும் முசோலினியையும் பற்றிய சார்லி சாப்ளினின் சித்தரிப்பு, ஒரு பாசிஸ்டின் ஆளுமைக்குள் முட்டாள் தனமும் கோமாளித்தனமும் பிரிக்கமுடியாமல் பிணைந்திருப்பதை நமக்குக் காட்டியது.

பின்னர் நாம் ஜார்ஜ் புஷ்ஷைப் பார்த்தோம். ஆப்கானிஸ்தான் மீதும், ஈராக் மீதும் போர் தொடுத்துப் பல இலட்சம் மக்களின் பேரழிவுக்குக் காரணமாக இருந்த புஷ் ஒரு அடி முட்டாள் என்பது, அவருடைய மனைவி லாரா புஷ் ஒருவரைத் தவிர, அநேகமாக மற்றெல்லோரும் அறிந்த உண்மையாகத்தான் இருந்தது. அதன்பின் ஒரு பாசிஸ்டு முட்டாளாக இருக்க முடியுமா என்ற கேள்வி மறைந்து, பாசிஸ்டுகளுக்கு முட்டாள்தனம் ஒரு முன்நிபந்தனையோ வென்று தோன்றத் தொடங்கியது. புஷ் இரண்டாவது முறை அமெரிக்க அதிபராவதற்கு அவரது முட்டாள் தனமே ஒரு தகுதியாக மாறி விட்டது.

தற்போது மோடியின் ‘‘அபரிமிதமான வளர்ச்சி’’யைப் பார்க்கும்போது, ஆளும் வர்க்கம் தனது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள பாதி கிரிமினல் புத்தியும் பாதி முட்டாள்தனமும் கலந்து உருவாக்கப்பட்ட நபர்களையே விரும்புகிறது என்பது உறுதியாகத் தெரிகிறது. முன்னர் 23-ஆம் புலிகேசி போன்ற பென்சன் ராஜாக்களை ‘‘யுவர் எக்சலன்சி’’ என்று அழைத்து ஏற்றி விட்டு, நாட்டை அடிமை கொண்ட பிரிட்டிஷ்காரர்களின் உத்தியை இந்தியத் தரகு முதலாளி வர்க்கம் அச்சுப் பிசகாமல் கடைப்பிடிக்கிறதென்பது தெளிவாகி விட்டது.

தொலைக்காட்சி, இணையம் எங்கும் மோடி விளம்பரம். நாளேடுகள், வாரப் பத்திரிகைகளைப் பிரித்தால் மோடி பற்றிய செய்தி. பிரிக்காவிட்டாலும் அட்டையில் மோடி. ஊடகங்களில் மோடிக்கு எதிரான செய்திகளைப் பிரசுரிக்க வேண்டாமென்று கார்ப்பரேட் முதலாளிகள் நேரடியாகவே அழுத்தம் கொடுப்பதும், மீறி விமர்சிப்போர்களையெடுக்கப்படுவதும் தற்போது சந்தி சிரிக்கத் தொடங்கி விட்டது. தமிழகத்திலோ தினமணி, தினமலர், தினத்தந்தி முதல் ஜூனியர் விகடன், குமுதம் வரையிலான எல்லா பத்திரிகைகளும் பா.ஜ.க.வுக்கு கூட்டணி அமைத்துக் கொடுக்க புரோக்கர் வேலை பார்க்கின்றன. பிரபலமான 11 கருத்துக் கணிப்பு நிறுவனங்கள், காசு வாங்கிக் கொண்டு தேர்தல் கருத்துக் கணிப்பு செய்து கொடுக்கத் தயாராக இருப்பதை ‘‘நியூ எக்ஸ்பிரஸ்’’ என்ற தொலைக்காட்சி வீடியோ ஆதாரத்துடன் அம்பலப்படுத்தியிருக்கிறது. தமிழகத்தில்





> மோடியின் பிரச்சாரம் ஒரு பிரம்மாண்டமான மசாலா சினிமாவின் தயாரிப்பை நினைவுபடுத்துகிறது; மேடைகளில் மோடி உச்சரிக்கின்ற ஒவ்வொரு சொல்லும் மண்டபத்தில் எழுதிக் கொடுக்கப்பட்டது என்ற உண்மையையும் அறியமுடிகிறது.

41% வாக்காளர்கள் பா.ஜ.க.வுக்கு ஆதரவு அளிப்பதாக ஜூ.வி.-யில் திருமாவேலன் வெளியிட்ட கருத்துக் கணிப்பை வாசகர்கள் இங்கே நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இந்த வரிசையில் ''மோடியின் பிரச்சார பீரங்கி'' என்ற தலைப்பில் சமீபத்திய இந்தியா டுடே வார இதழ் ஒரு அட்டைப்படக் கட்டுரை வெளியிட்டிருக்கிறது. அதில் கண்டுள்ளபடி பார்த்தால், மோடியின் பிரச்சாரம் ஒரு பிரம்மாண்டமான மசாலா சினிமாவின் தயாரிப்பை நினைவுபடுத்துவதுடன், தற்போது மேடைகளில் மோடி உச்சரிக்கின்ற ஒவ்வொரு சொல்லும் மண்டபத்தில் எழுதிக் கொடுக்கப்பட்டது என்ற உண்மையையும் நமக்கு அறியத் தருகிறது.

மோடியின் ஒவ்வொரு பேச்சுக்கான தரவுகளையும் 250 பேர்களைக் கொண்ட அணி மேற்கு அகமதாபாத்தில் உள்ள ஒரு பாசறையில் உருவாக்குகிறதாம். பிறகு அதை வைத்து 12 பேர் அடங்கிய ஒரு ஆராய்ச்சிக் குழுவினர் பேச்சைத் தயாரிக்கிறார்களாம். பிறகு அதனை மோடியின் நிர்வாக செயலர் கைலாஷ் நாதன் ஐ.ஏ.எஸ். சரி செய்து மோடியிடம் ஒப்படைப்பாராம். அப்புறம் அதில் மோடி கேட்கும் சந்தேகங்களுக்குப் பதில் சொல்ல ஒரு தனிச்செயலர், அந்தந்த மாநிலத்துக்குரிய மக்கள் தொடர்பு ஆலோசகர் ... என இந்தப் பட்டாளம் விரிகிறது. போதாக்குறைக்கு மோடியின் வெற்றிக்கு உழைப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து பல நிதிமூலதன நிறுவனங்களின் உயரதிகாரிகள் தம் வேலையை ராஜினாமா செய்து விட்டு வந்திருக்கிறார்களாம்.

''கூட்டங்களின் செய்தி வேண்டுமானால் விவாதத்துக்கு உரியதாக இருக்கலாம். ஆனால், அது ஒரு கலையாக வடிவமைக்கப்பட்டுள்ளதில் எந்த சந்தேகமும் இல்லை'' என்கிறது இந்தியா டுடே. இதைவிடத் தெளிவாக யாரேனும் உண்மையை உரைக்க முடியுமா?

ஆக, மோடியின் பேச்சு என்பது இவ்வளவு ''அறிஞர் பெருமக்கள்'' சேர்ந்து வைத்த குழம்பு! இதில் மோடியின் பாத்திரம் என்ன என்று கேட்டால், பாத்திரம் என்பதுதான் பதில். அந்த குழம்பைத் தாங்கி நிற்கும் சட்டிதான் மோடி. எம்.ஜி.ஆர். வாயசைத்த காரணத்தினால் பட்டுக்கோட்டையார் பாட்டு எம்.ஜி.ஆர். பாட்டாக மாறியதைப் போல, மண்டபத்தில் எழுதிக் கொடுத்த பேச்சு, மோடியின் பேச்சாகி, அதுவே பத்திரிகைகளின் தலைப்பு செய்தியாகவும் மாற்றப்பட்டு வருகிறது.

மோடியின் ஒவ்வொரு மேடைப்பேச்சும் எப்படி அமைக்கப்படுகிறது என்பதை நமக்கு விளக்குகிறது இந்தியா டுடே. முதலில் கூட்டத்தினரின் மொழியில் பேசி, கேட்க வந்த மக்கள் பெருமைமிக்கவர்கள் என்பதை அவர் உணர்த்துவாராம். பிறகு உள்ளூர் பிரச்சினைகள் சிலவற்றைப் பற்றி பேசிவிட்டு, அப்படியே குஜராத்தில் எப்படி பாலாறும் தேனாறும் ஓடுகிறது என்று மறைமுகமாகக் கோடி காட்டுவாராம். அப்புறம் காங்கிரசு அரசின் திறைமையின்மை பற்றி நக்கலாகப் பேசி, தனக்கு வாய்ப்பு கொடுத்தால் உன்னதமான எதிர்காலம் இருக்கிறது என்று கூறிவிட்டு, இறுதியில் கூட்டத்துக்கு வந்த மக்களின் அருமை பெருமையை இன்னொரு முறை கூறி பேச்சை முடிப்பாராம்.

இதைத்தானே தேர்தல்தோறும் நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். நைந்துபோன இந்த சரக்கைத் தயாரித்து மேடையேற்றுவதற்குத்தான் 250+12 வல்லுநர்கள், பாசறைகள், கணினி, லேப்டாப், தனி விமானம், கருப்புப் பூனை, ஐ.டி பட்டாளமாம்! ''இந்திய வரலாறு காணாத அதிரடியான பிரதமர் வேட்பாளர் பிரச்சாரம்'' என்று இந்தியா டுடே - வால் வியந்துரைக்கப்படும் மோடியின் பிரச்சார உரைகளுடைய யோக்கியதையைக் கொஞ்சம் உரசிப் பார்ப்போம்.

வட இந்திய அரசியல்வாதிகள் உள்ளூர் மொழியில் இரண்டு வார்த்தை பேசி தமது பேச்சைத் தொடங்குவதும், பழங்குடியின மக்கள் வாழும் பகுதிக்குப் போனால், கோழி இறகு, மயில் இறகு போன்றவற்றைத் தலையில் செருகிக் கொண்டு அவர்களுடன் போட்டோவுக்கு போஸ் கொடுப்பதும் காலாவதியாகிப்போன ஒரு பழைய உத்தி. இது போதாதென்று கருதியதனாலோ என்னவோ மோடி படைப்பூக்கத்துடன் சிந்தித்து தன் உரையைத் தொடங்குகிறார்.

சமீபத்தில் அருணாசலப் பிரதேசத்துக்கு சென்றிருந்த மோடி, அம்மாநிலத்தில் உள்ள ஆடி என்ற இனக் குழுவில் மோடி என்றொரு வம்சத்தினர் இருப்பதைச்



சுட்டிக்காட்டி, ''உங்களுக்கும் என் குடும்பத்துக்கும் ஏதோ தொடர்பு இருக்கிறது; அதை வரலாற்று ஆய்வாளர்கள்தான் கண்டு பிடிக்க வேண்டும்'' என்றார். அப்புறம், ''கிருஷ்ணன் எங்கள் ஊர், ருக்மணி உங்கள் ஊர், ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்டது நமது உறவு'' என்று அடித்துவிட்டார். ருக்மணி ஜென்ம பூமி என்று ஏதாவது இடத்தை வளைத்துவிடப்போகிறார்கள் என்று அந்த மக்கள் பீதியடைந்திருக்கக்கூடும். அப்புறம், ''சூரியன் உங்கள் ஊரில் உதயமாகி எங்கள் ஊரில்தான் மறைகிறது'' என்று ஒரு அறிவியல் கண்டுபிடிப்பை அடித்துவிட்டார். லேகிய வியாபாரியின் பேச்சை ஒத்த இந்த நாலாந்தரப் பேச்சுகளெல்லாம் உள்ளூர் மக்களுடன் ஐக்கியமாகும் மோடி வித்தைகளாம்.

அடுத்து ஒரிசாவுக்குச் சென்றார். எங்கள் ஊரில் சோம்நாத். உங்கள் ஊரில் ஜெகந்நாத். ''ஜெய் ஜெகந்நாத்'' என்று கூவி ஒரே வரியில் ஒருமைப்பாட்டை நிலை நாட்டினார். கருமை மூன்றெழுத்து, அருமை மூன்றெழுத்து, எருமை மூன்றெழுத்து என்ற விளங்காத அடுக்குமொழியை எத்தனை காலமாக நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதே டெக்னிக்தான்.

அத்தோடு முடித்துக் கொண்டிருந்தால் பரவாயில்லை. வருங்கால பாரதப் பிரமர் என்ற முறையில் வரலாற்றையும் அவர் ஒரு கை பார்க்க வேண்டியிருக்கிறதே. பீகாருக்குப் போனார். தன்னைக் கூட்டணியிலிருந்து கழற்றி விட்டுவிட்ட நிதிஷ்குமாரிடமிருந்து பீகார் மக்களைத் தன் பக்கம் கவர்ந்திழுக்க வரலாறைக் கையில் எடுத்தார். ஆர்.எஸ்.எஸ்.காரன் கையில் சிக்கிய வரலாறு கழுதை வாயில் சிக்கிய காகிதம் என்பது தெரிந்த கதைதானே. ''பிகாரிகளாகிய நீங்கள் உலகத்தையே வென்ற அலெக்சாண்டரை கங்கைக் கரையில் வைத்து முறியடித்த மாவீரர்கள்'' என்றார். ''பஞ்சாபின் சட்லெஜ் நதிக்கரையோடு வந்தவழியே திரும்பிப் போன அலெக்சாண்டர், எப்போது கங்கைக்கரையில் நம்மோடு சண்டை போட்டான்?'' என்று மக்கள் யோசித்து முடிப்பதற்குள், அடுத்த குண்டை வீசினார். ''மாபெரும் கல்வி மையமான தட்சசீலம் உங்கள் ஊரில் இருக்கிறது'' என்று கூறி பிகாரிகளை பாகிஸ்தானியர்களாக்கினார். மவுரிய வம்சத்தை சேர்ந்த சந்திரகுப்தனை குப்த வம்ச மன்னன் என்று அடித்துக் கூறினார்.

''கிருஷ்ணன் எங்கள் ஊர், ருக்மணி உங்கள் ஊர், ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்டது நமது உறவு'' என்று அருணாச்சலப் பிரதேசத்தில் அடித்து விட்டார், மோடி. ருக்மணி ஜென்ம பூமி என்று ஏதாவது இடத்தை வளைத்துவிடப் போகிறார்கள் என்று அந்த மக்கள் இதைக் கேட்டுப் பீதியடைந்திருக்கக்கூடும்.

''மாபெரும் கல்வி மையமான தட்சசீலம் உங்கள் ஊரில் இருக்கிறது'' என்று கூறி பீகாரிகளை பாகிஸ்தானியர்களாக்கினார், மோடி. மவுரிய வம்சத்தை சேர்ந்த சந்திர குப்தனை குப்த வம்ச மன்னன் என்று அடித்துவிட்டு, தனது வரலாற்று ஞானத்தைப் பறைசாற்றிக் கொண்டார்.


இதுபோன்ற பிதற்றல்கள் அதிகரிக்கவே மோடி விவரம் புரியாமல் வரலாற்றுடன் விளையாடுவதாக காங்கிரசுக்காரர்கள் கேலி செய்தனர். ஆத்திரமுற்ற மோடி, ''யார் வரலாறுடன் விளையாடுகிறார்கள்? 1930-இல் இலண்டனில் இறந்துபோன, விவேகானந்தரின் நெருங்கிய நண்பரான சியாமா பிரசாத் முகர்ஜியின் சாம்பலைக் கொண்டு வர நேரு ஏன் முயற்சிக்கவில்லை? அதை நான் அல்லவா கொண்டு வந்தேன்'' என்று குஜராத்தில் முழங்கினார். சியாமா பிரசாத் முகர்ஜி என்பவர் பாரதிய ஜனதாக் கட்சியின் தாய்க்கழகமான ஜனசங்கத்தை 1951-இல் நிறுவியவர். 1901-இல் பிறந்து 1953-இல் காஷ்மீரில் இறந்தவர். விவேகானந்தரோ 1902-இல் இறந்தவர். மோடியின் வாயில் சிக்கிய அவருடைய சொந்தக் கட்சியின் வரலாறும், தலைவரின் வரலாறும் கழுதை வாய்க் காகிதமாகிவிட்டது. ஒரே வரியில் எண்ணிலடங்காத உளறல்கள்! இதைத் தயாரித்துக் கொடுப்பதற்கு பாசறையாம், வல்லுநர்களாம்!



''என் வேட்டி அவுந்ததுகூடத் தெரியாம நீங்க என்னடா பண்ணிக்கிட்டிருந்தீங்க?'' என்று தனது கைத்தடிகளைக் கேட்கும் வடிவேலுவைப் போல, வல்லுநர்களை மோடி வறுத்திருக்கக்கூடும். மோடிக்காக போலி என்கவுன்டர்களை நடத்திவிட்டுச் சிறையில்

கிடக்கும் வன்சாராவைப் போல, இப்படி உரை தயாரித்துக் கொடுத்து தனது மானத்தை வாங்கிய ''கொல்லர்களை''ப் புலிகேசி நாளை சிறையில் அடைக்கவும் கூடும்.

போகின்ற மாநிலங்களிலெல்லாம் உள்ளூர் பிரச்சினைகளைக் கூறி, அப்படியே நாசூக்காக குஜராத்தின் அருமை பெருமைகளை அடித்து விட வேண்டும் என்று மோடிக்கு ஆசைதான். இருந்தாலும், காங்கிரசு ஆளும் மாநிலங்களைத் தவிர வேறு எங்கும் அப்படிப் பேசமுடியாத ஒரு நிலைமை! தனிப்பெரும்பான்மை கிடைக்காதென்பதால், பிரதமராவதற்கு எப்படியும் பலர் காலில் விழ வேண்டியிருக்கும் என்பது மோடிக்குத் தெரியாததல்ல. அதனால்தான் மே.வங்கத்துக்கு சென்ற மோடி மம்தாவைப் பாராட்டிவிட்டு, போதாக்குறைக்கு ''2004- இல் பிரணாப் முகர்ஜியை காங்கிரசு கட்சி பிரதமராக்காதது ஏன்?'' என்று கேட்டு வங்காளி உணர்வையும் தட்டிவிட்டு ஓட்டாக்கப் பார்த்தார். ''வங்கத்தில் மம்தா, டில்லியில் நான், தலைமையில் பிரணாப் முகர்ஜி இருந்தால் எப்படி இருக்கும்?'' என்று வாயில் எச்சில் ஒழுகப் பேசினார். ''மொழிவாரி மாநிங்களைப் பிரித்ததே காங்கிரசின் பிரித்தாளும் சூழ்ச்சிதான்'' என்று அவர் திருச்சியில் பேசியது நினைவிருக்கிறதா? அது வேறவாய்; வங்காளத்தில் பேசியது நாறவாய்!



> மோடியின் பிம்பத்தை மாற்றி அவரும் ''ஆம் ஆத்மிதான்'' (எளிய மனிதன்தான்) என்று நம்ப வைக்க வேண்டுமானால், ''மோடி டீ குடிப்பதை உலகமே பார்க்கச் செய்வதுதான் ஒரே வழி'' என்று முடிவு செய்த அவருடைய வல்லுநர் குழு, ''சாய் பே சர்ச்சா'' (டீக்கடை பெஞ்சு) என்ற ''லைவ் டெலிகாஸ்டை'' அரங்கேற்றியது. அன்று மோடி குடித்த ஒரு டீக்கான செலவு ரூ.250 கோடி.

தனது எதிர்காலக் கூட்டாளியாகப் போகின்ற ஜெயலலிதாவை அனுசரித்துப் போகவேண்டும் என்பதில் மோடி எவ்வளவுதான் கவனமாக இருந்தாலும், பிரதமர் பதவியில் மட்டுமின்றி, வேறு பல விசயங்களிலும் இருவருக்குமிடையே பலத்த போட்டியும் இருக்கத்தான் செய்கிறது.

''நான் ஒரு நாளைக்கு 4 மணி நேரம்தான் தூங்குகிறேன்'' என்று எல்லா கூட்டங்களிலும் சொல்வார் மோடி. ''உங்கள் அன்புச் சகோதரி நாளொன்றுக்கு 22 மணி நேரம் உங்களுக்காக உழைக்கிறாள்'' என்று அ.தி.மு.க. பொதுக்குழுவில் தன்னுடைய தூக்கம் பற்றி அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறார் ஜெயலலிதா. ''குஜராத்தின் லோக் ஆயுக்தா நீதிமன்றத்துக்கு நான் சொல்கின்ற ஆளைத்தான் நீதிபதியாகப் போட வேண்டும். அந்த நீதிபதிக்கும் என்னை (முதல்வரை) விசாரிக்கும் அதிகாரம் இருக்கக் கூடாது'' என்று கூறி, 2002 முதல் வழக்கு நடத்தி இழுத்தடித்து வருகிறார் மோடி. அம்மாவோ 1997- இலிருந்து சொத்துக் குவிப்பு வழக்கை இழுத்தடிக்கும் வரலாறு படைத்தவர். ''நான் சொல்கின்ற அரசு வக்கீல்தான் எனக்கு எதிராக வழக்கு நடத்த வேண்டும். நான் சொல்கின்ற நீதிபதிதான் என்னை விசாரிக்க வேண்டும்'' என்று உச்ச நீதிமன்றத்தில் வாதிட்டு வெற்றி கண்டவர்.

''குஜராத்தான் நம்பர் ஒன்'' என்று மோடி ஒருபுறம் சொல்லிக் கொண்டிருக்க, ''முதலீடுகளை ஈர்ப்பதில் கடந்த 4 ஆண்டுகளில் குஜராத்தை விடத் தமிழகம் முன்னணியில் இருக்கிறது'' என்று நைசாகக் குத்தியிருக்கிறார் ஜெயலலிதா. இது கிரேட் டிக்டேட்டர் படத்தில் வரும் இட்லர், முசோலினி சந்திப்பு காட்சியில் இரண்டு அற்பர்களும் போட்டி போட்டுத் தத்தம் நாற்காலிகளின் உயரத்தை அதிகரித்துக் கொண்டு, ''உன்னை விட நான் பெரியவன்'' என்று காட்டிக்கொள்ளும் காட்சியை நமக்கு நினைவூட்டுகிறது.

மம்தா, ஜெயாவை மட்டுமல்ல; யார் தயவு தேவைப்படும் என்று அனுமானிக்க முடியாதாகையால், எந்த மாநிலக் கட்சியையும் மோடியால் தாக்கிப் பேச முடியாது. காங்கிரசுக்கும் பாரதிய ஜனதாவுக்கும் எந்த கொள்கை வேறுபாடும் இல்லாத காரணத்தால், காங்கிரசின் கொள்கைகளையும் தாக்க முடியாது. ஆகவே, ''க-வுக்கு க, ப-வுக்கு ப'' என்ற டி.ராஜேந்தர் பாணியில் பஞ்ச் டயலாக்குகளை இறக்குகிறார் மோடி.

''ஹார்வர்டா, ஹார்டு ஒர்க்கா பார்த்து விடுவோம்'' என்று சிதம்பரத்துக்குச் சவால் விடுகிறார். ''60 ஆண்டுகள் காங்கிரசிடம் ஆட்சியைக் கொடுத்தீர்கள், 60 மாதங்கள் என்னிடம் கொடுங்கள்'' என்று கெஞ்சுகிறார். மோடியின் வாயில் விழுந்த எல்லா புள்ளிவிவரங்களும் லாரியில் சிக்கிய நாயின் கதிக்கு ஆளாகின்றன. ''வாஜ்பாயி 6 ஆண்டு ஆட்சியில் 6 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்கினார்'' என்று கான்பூரில் பேசினார் மோடி. இதற்கெல்லாம் எந்த ஆதாரமும் கிடையாது. ''ஆறுக்குஆறு'' - அவ்வளவுதான். (இதே

6 ஆண்டுகளில் வாஜ்பாயி 1.16 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்கினார் என்று சென்னையில் மோடி கூட்டத்தில் பேசியிருக்கிறார், எச்.ராசா)



> ஆர்.எஸ்.எஸ். அரை டிரவுசர்கள் முதலில் மோடி டீக்கடை திறந்தார்கள்; அடுத்து மோடி மீன்கடை. வாக்காளர்களில் குடிமகன்களின் எண்ணிக்கை அதிகம் என்பதால், ‘‘மோடி சாராயக் கடை’’யையோ, குறைந்தபட்சம் ‘‘மோடி சாக்கனாக் கடை’’யையோ விரைவில் எதிர்பார்க்கலாம்.

காங்கிரசு அரசு சி.பி.ஐ. மூலம் தனது அரசியல் எதிரிகளை வேவு பார்க்கிறது என்றும், சி.பி.ஐ. என்பது, ‘காங்கிரசு பீரோ ஆப் இன்வெஸ்டிகேஷன்’ என்றும் போகுமிடம் எல்லாம் பொளந்து கட்டிக் கொண்டிருந்தார் மோடி. மான்சி சோனி என்ற பெங்களூரு பெண்ணுடன் மோடி கள்ளத் தொடர்பு வைத்திருந்ததும், அந்தப் பெண்ணைத் துரத்தி, அவள் தொலைபேசியை ஒட்டுக்கேட்டு, வேறு ஆணுடன் பழகுகிறாளா என்று மோப்பம் பிடித்துத் தனக்குத் தகவல் சொல்லுகின்ற (மாமா) வேலைக்கு, குஜராத்தின் பயங்கரவாத தடுப்பு அதிரடிப்படை, குற்றப்பிரிவு, உளவுத்துறை ஆகியவற்றின் ஏட்டு முதல் எஸ்.பி. வரையிலான அதிகாரிகளையும் மோடி பயன்படுத்தினார் என்பதை நிறுவும் தொலைபேசி ஒலிப்பதிவுகளும் வெளிவந்து சந்தி சிரித்துவிட்டன. அத்தோடு முடிந்தது சி.பி.ஐ. பேச்சு.

‘‘சும்மா ஊழல், ஊழல் என்று பேசிக் கொண்டிருப்பதால் பயனில்லை. நடவடிக்கை எடுக்கவேண்டும். வெளிநாட்டில் பதுக்கி வைத்திருக்கும் கருப்புப் பணத்தைக் கொண்டு வந்து ஏழைகளுக்கு விநியோகிக்க வேண்டும்’’ என்று ஆம் ஆத்மி கட்சியைச் சமாளிக்க உதார் விட்டார். ‘‘அம்பானியின் சுவிஸ் வங்கி கணக்கு எண் இதோ இருக்கிறது. என்ன சொல்கிறாய்?’’ என்று மோடிக்கு கேள்வி எழுப்பினார் கேஜ்ரிவால். அத்தோடு கருப்புப் பணம் பற்றிய பேச்சையும் தலைமுழுகி விட்டார் மோடி.

டில்லி வெற்றியைத் தொடர்ந்து ஆம் ஆத்மியின் செல்வாக்கு பரவத்தொடங்கவே, தானும் ஒரு ஆம் ஆத்மி தான் என்று நிரூபிக்க வேண்டிய இக்கட்டான சூழலுக்கு மோடி தள்ளப்பட்டுவிட்டார். ‘‘மோடிக்கு அரசியலும் தெரியாது, பொருளாதாரமும் தெரியாது; டீ விற்கத்தான் தெரியும்’’ என்று மணி சங்கர் ஐயர் பேசியதை கப்பென்று பிடித்துக் கொண்டார் மோடி. ‘‘பாசி மணி ஊசியெல்லாம் விப்போமுங்க, காசுக்காக மானத்தையே விக்கமாட்டோம்’’ என்ற பாட்டைப் போல, ‘‘நான் டீ விற்பேனே தவிர, நாட்டை விற்க மாட்டேன்’’ என்று பஞ்ச் டயலாக்கை எடுத்து விட்டார். ‘‘நாட்டின் எரிவாயுவை அடிமாட்டு விலைக்கு அம்பானிக்கு விற்றதைப் பற்றி மோடி என்ன சொல்கிறார்?’’ என்று கேட்டது ஆம் ஆத்மி. அத்தோடு பஞ்ச் டயலாக்குக்கும் இறங்கியது ஆப்பு.

அம்பானி, டாடாக்களுடன் டிசைனர் உடை, டிசைனர் தாடியில் தோன்றிக் கொண்டிருந்த மோடியின் பிம்பத்தை மாற்றி அவரும் ‘‘ஆம் ஆத்மிதான்’’ (எளிய மனிதன்தான்) என்று நம்பவைக்க வேண்டுமானால் ‘‘மோடி டீ குடிப்பதை உலகமே பார்க்கச் செய்வதுதான் ஒரே வழி’’ என்று முடிவு செய்த அவருடைய வல்லுநர் குழு, ‘‘சாய் பே சர்ச்சா’’ (டீக்கடை பெஞ்சு) என்ற ‘‘லைவ் டெலிகாஸ்டை’’ அரங்கேற்றியது. அன்று மோடி குடித்த ஒரு டீக்கான செலவு 250 கோடி ரூபாய்.

உடனே இந்த ‘‘கான்செப்டை’’ காக்கி அரை டவுசர்கள் பிடித்துக் கொண்டார்கள். கார்கில் விநாயகர், கசாப் விநாயகர் என்று விநாயகரை டெவலப் செய்தது போல, ஆங்காங்கே மோடி டீக்கடை திறந்தார்கள். அடுத்து மோடி மீன்கடை. மோடி பிரதமரானால், ‘‘சிங்களப் படையின் தாக்குதலிலிருந்து தமிழக மீனவர்களைக் காப்போம்’’ என்று கையில் வஞ்சிர மீனுடன் மூக்கைப் பிடித்துக் கொண்டு முழங்குகிறார் இல. கணேசன். வாக்காளர்களில் குடிமகன்களின் எண்ணிக்கை அதிகம் என்

> ‘‘கோயிலைவிட கக்கூசுதான் முக்கியம்’’ என்று அதிரடியாகப் பேசி, தான் மாறி விட்டது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த முயன்றார், மோடி. ‘‘அப்புறம் 2500 கோடி ரூபாய்க்கு படேலுக்கு எதற்குச் சிலை வைக்கிறாய்? அந்தக் காசுக்கு கக்கூசு கட்ட வேண்டியதுதானே’’ என்று அடித்த பந்து மோடிக்கே திரும்பி வந்தது.



பதால், அடுத்து ''மோடி சாராயக்கடை''யையோ, குறைந்தபட்சம் சாக்கனாக் கடையையோ விரைவில் எதிர்பார்க்கலாம்.

ஏழைப்பங்காளன் அவதாரம் ஒரு புறம், இன்னொருபுறம் சூத்திர அவதாரம். 1980-களின் துவக்கத்தில் குஜராத்தில் இட ஒதுக்கீட்டு எதிர்ப்புப் போராட்டத்தையும், தலித்துகளுக்கு எதிரான வன்முறையையும் தலைமை தாங்கிய நடத்திய மோடி, ''அம்பேத்கர் அளித்த உரிமைகளைப் பறிக்க சதி நடக்கிறது. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் தலித்துகள், ஆதிவாசிகள், பிற்படுத்தப்பட்டோரின் குரல் ஓங்கி ஒலிக்கும்'' என்று கொச்சியில் புலையர் சங்க மாநாட்டில் தேனொழுகப் பேசியிருக்கிறார். உ.பி.யில் பிற்படுத்தப்பட்ட சாதியினரிடம் ஓட்டுப் பொறுக்குவதற்காக, மோடி மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதிக்காரர் என்ற பிரச்சாரம் நடக்கிறது. அது மட்டுமல்ல, கன்சிராமுக்கு பாரத ரத்னா தர வேண்டும் என்ற கோரிக்கையையும் உ.பி. மாநில பாரதிய ஜனதாக் கட்சி முன்வைத்துள்ளது.



தான் முஸ்லிம்களின் எதிரி அல்ல என்று காட்டிக் கொள்வதற்காக, வாடகைக்குப் பிடித்த ஆட்களுக்கு குல்லா போட்டு விட்டு முன்வரிசையில் உட்கார வைத்தார். ஹோல் சேலில் குல்லா கொள்முதல் செய்த பில் வெளி வந்து குட்டு உடைந்து விட்டது. ''கோயிலைவிட கக்கூசுதான் முக்கியம்'' என்று அதிரடியாகப் பேசி, தான் மாறி விட்டது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த முயன்றார். ''அப்புறம் 2500 கோடி ரூபாய்க்கு படேலுக்கு எதற்கு சிலை வைக்கிறாய்? அந்தக் காசுக்கு கக்கூசு கட்ட வேண்டியதுதானே'' என்று அடித்த பந்து மோடிக்கே திரும்பி வந்தது. ''இனி வெக்கமானம் பார்த்தால் வேலைக்கு ஆகாது'' என்று முடிவு செய்த ராஜ்நாத் சிங், ''கடந்த காலத்தில் செய்த எல்லா தவறுகளுக்கும் முஸ்லிம்களிடம் மன்னிப்பு கேட்பதாக'' இப்போது அறிவித்திருக்கிறார்.

மோடியின் வல்லுநர் படை அவருக்கு மட்டும் வேசம் போடவில்லை. அசந்தால் ஒபாமாவுக்கே பவுடர் போடுகிறது. எகிப்து அதிபர் ஹோஸ்னி முபாரக்கின் உரையைத் தொலைக்காட்சியில் ஒபாமா பார்த்துக் கொண்டிருப்பது போன்ற புகைப்படத்தை உல்டா செய்து, மோடியின் உரையை ஒபாமா பார்க்கிறார் என்று பரப்பியது. குட்டும் உடைந்தது. எம்.ஜி.ஆர். - சிவாஜி போன்ற எல்லா நட்சத்திரங்களுக்கும் ரேகை பார்க்கும் படத்தை மாட்டி வைத்திருக்கும் ஜோசியக்காரனைப் போல, அமிதாப்பும் ரஜினியும் மோடியை ஆதரிப்பது போல வீடியோ, புகைப்பட உல்டாக்களை இறக்கவே, அவர்களே அதனை மறுத்தார்கள். இதற்காகவெல்லாம் காக்கி அரைடவுசர்கள் வெட்கப்படவில்லை. அடுத்தது டென்டுல்கரின் மகள் பெயரில் டிவிட்டர் தளத்தை உருவாக்கி, மோடியை அவர் ஆதரிப்பதாக அதில் எழுதினார்கள். ''என் மகளுக்கு டுவிட்டர் தளமே இல்லை'' என்று டென்டுல்கரே அறிவிக்க வேண்டியதாயிற்று.

''வளர்ச்சி நாயகன், டீக்கடைக்காரர், பிற்படுத்தப்பட்டோரின் பிரதிநிதி என்று எந்த தரப்பினருக்கு எது பொருத்தமாக இருக்குமோ, அதற்கேற்ப மோடி பல முகங்களைப் பிரித்துக் கொண்டுள்ளார்'' என்று மோடியின் இத்தகைய அருவெறுப்பான கழைக்கூத்துகளுக்கு சென்ட் அடித்து, ஜிகினா சொற்களில் விவரிக்கிறது, இந்தியா டுடே.

தனது ஆண்மையைப் பறைசாற்றிக் கொண்டார் மோடி. ''எல்லோராலும் குஜராத்தை உருவாக்கி விட முடியாது. அதற்கு 56 அங்குலம் கொண்ட மார்பு தேவைப்படுகிறது'' என்று உ.பி.யில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பீற்றிக் கொண்டார் மோடி. எத்தனை கிராம் எடையுள்ள மூளை தேவை என்பது பற்றி அவர் அதிகம் கவலைப்படவில்லை. ஏனென்றால், பயில்வானின் உடல் மீது தன் தலையை ஒட்ட வைத்து வரலாற்றில் இடம்பெற முயற்சிக்கும் 23-ஆம் புலிகேசியின் நடவடிக்கைக்கும் மோடியின் பிரச்சார உத்திகளுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை.

''எல்லோராலும் குஜராத்தை உருவாக்கி விட முடியாது. அதற்கு 56 அங்குலம் கொண்ட மார்பு தேவைப்படுகிறது'' என்று உ.பி.யில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பீற்றிக் கொண்டார் மோடி. எத்தனை கிராம் எடையுள்ள மூளை தேவை என்பது பற்றி அவர் அதிகம் கவலைப்படவில்லை.

''சரி, நீங்கள் பிரதமரானால் என்ன செய்வீர்கள்?'' என்ற கேள்விக்கு ''ஐந்து டி'' (technology, talent, tourism, trade, tradition – தொழில்நுட்பம், திறமை, சுற்றுலா, வர்த்தகம், பாரம்பரியம்) என்று கையை விரித்துக் காட்டுகிறார் மோடி. அதில், தொழில்நுட்பம், திறமை, சுற்றுலா, வர்த்தகம் என்ற முதல் நான்கு விரல்களும் தரகு முதலாளிகளின் நலனுக்கானவை. ஐந்தாவதாகக் கூறப்படும் பாரம்பரியம் என்பது கட்டைவிரல் - அது பார்ப்பனியத்துக்கானது. மோடி ஆட்சிக்கு வந்தால் இந்த ஐந்து விரல்களும் உழைக்கும் மக்களுக்கு எதிராக மடக்கப்படும். அதுதான் பார்ப்பன பாசிசம்.

● தொரட்டி

# வழக்கறிஞர்களுக்கு, நீதியரசர்களுக்கு
# கிரிமினல் சட்டமேதை ஜெயலலிதாவின் சவால்கள்!

**நாட்டின் சட்டத்துறை-நீதித்துறை மாணவர்கள் ஜெயலலிதாவின் கிரிமினல் சட்ட சாகசங்களில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டியவை நிறையவே உள்ளன. அவை சட்டப் பல்கலைக்கழகங்களில் ஆராய்ச்சிக்கு வைக்கத் தகுந்தன. இந்த உண்மையை சட்ட – நீதி வல்லுநர்கள் எப்படிக் கவனிக்கத் தவறினர் என்பது வியப்பாகவே இருக்கிறது!**

பெங்களூருவில் நடந்து வரும் ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கில் அடுத்தடுத்துப் பல வினோதங்கள்! வழக்கை ''நடத்தும்'' அரசுத்தரப்பின் கண்களில் இவ்வளவு காலமும் விரல்விட்டு ஆட்டிவந்த ஜெயலலிதா தரப்பினர் இப்போது திருட்டு ''முழிமுழிக்கின்றனர்.'' காரணம், அவர்கள் பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கைப் பிடித்து விட்டதுதான்!

ஜெயலலிதாவின் ஆலோசகராக இருந்தவர் வி.பாஸ்கரன். இவர் ஒரு தணிக்கையாளர், கருத்துக்கணிப்பு நிபுணர். ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கிற்காக 1996-ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்ட பொருட்களில் 55 இலட்சம் ரூபாய் மதிப்புடைய வெள்ளிப் பொருட்களை அரசுக் கருவூலத்தில் இருந்து 2003-ஆம் ஆண்டு ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது, நிபந்தனையுடன் இவர் வாங்கிப் போயுள்ளார். ''அவற்றை மீட்டுச் சிறப்பு நீதிமன்றத்தில் ஒப்படைத்த பிறகுதான் வழக்கைத் தொடரவேண்டும், அதுவரை வழக்கைத் தள்ளிப் போடவேண்டும்'' என்று அரசுத் தரப்பு வழக்கறிஞர் பவானிசிங் கடந்த மாதம் ஒரு மனுப் போட்டார்.

ஆனால், அந்த நபரோ மூன்று மாதங்களுக்கு முன்பே செத்துப் போய்விட்டவர். வழக்கில் அரசுத் தரப்புக்கு உதவுவதற்காகத் தானே முன்வந்து சேர்ந்துகொண்ட தி.மு.க. வழக்கறிஞர் இந்த உண்மையைப் போட்டுடைத்த பிறகு, சிறப்பு நீதிமன்றம் ஜெயலலிதாவுக்குச் சம்மன் அனுப்பியது. அவர் உயிருடன் இருக்கிறாரா, இல்லையா என்று ஜெயலலிதாவின் கைக்கூலியான அரசு வழக்கறிஞருக்குத் தெரியவில்லையாம்! 10 நாட்கள் விசாரணைக்குப் பிறகும் மாநிலப் போலீசுக்கும் உளவுத்துறைக்கும் தெரியவில்லையாம்! குற்றவாளிக்கும் அவரது வழக்கறிஞர்களுக்கும்கூடத் தெரியவில்லையாம்! அந்த வி. பாஸ்கரன் வேலூர் மருத்துவமனையில் புற்று நோயால் இறந்துபோனதற்கான இறப்புச் சான்றிதழை தி.மு.க. வழக்கறிஞர் சிறப்பு நீதிமன்றத்தில் ஒப்படைத்த பிறகு மாநிலப் போலீசும் உளவுத்துறையும் அதை நம்புவதாகச் சொன்னபோதும் ஜெயலலிதாவின் கைக்கூலியான அரசு வழக்கறிஞர், தான் இன்னமும் நம்பவில்லை என்று சாதிக்கிறார்.

வி.பாஸ்கரன் மரணமடைந்த செய்தி அப்போதே பிரபல ஆங்கில நாளிதழ் ''தி இந்து''வில் கொட்டை எழுத்துகளில் வந்திருக்கிறது. ஏதாவது ஒரு குக்கிராமத்தில் தனது கழக இரத்தத்தின் இரத்தம் ஒருவர் செத்துப்போனால் ''நமது எம்ஜியாரில்'' இரங்கலைப் பெட்டிச்செய்தியாகப் போடும் ஜெயாவின் பாசிசப் பரிவாரங்களுக்கு அவரது ஆலோசகராக இருந்தவர், ''அவரது'' 55 இலட்சம் ரூபாய் மதிப்புடைய வெள்ளிப் பொருட்களை வாங்கிக்கொண்டு போனவர் உயிருடன் இருக்கிறாரா, இல்லையா என்று தெரியவில்லையாம்! நம்பமுடிகிறதா? இதைச் சிறப்பு நீதிமன்ற நீதிபதி கேட்டபோது தலைகுனிந்து மவுனமாக இருந்தது, ஜெயலலிதாவின் வழக்கறிஞர் பட்டாளம்.

கேப்பையில் நெய் வடிகிறதென்றால் கேட்பவன் முட்டாள்தான். ஆனால் சொல்பவன் ஏய்ப்பவன் இல்லையா! 55 இலட்சம் ரூபாய் மதிப்

ஜெயாவின் போயஸ் தோட்டக் குகையிலிருந்து கைப்பற்றப்பட்ட தங்க-வைர நகைகள், வெள்ளிச் சாமான்கள் மற்றும் கைக்கடிகாரங்கள். (கோப்புப் படம்)



புடைய அந்த வெள்ளிப் பொருட்களோ ஜெயலலிதாவின் வீட்டில்தான் இருக்கின்றன என்று செத்துப்போனவரின் வாரிசான மகன் கூறுகிறார்! என்னவொரு கிரிமினல் புத்தி! ஒப்படைக்கக் கோரும் பொருட்களும் தம்மிடமேயுள்ளது; ஒப்படைக்க வேண்டியவரும் உயிரோடில்லை. அவற்றை பத்தாண்டுகளுக்கு முன்பு வாங்கிப்போய், மூன்று மாதங்களுக்கு முன் செத்துப் போனவர், அவற்றை ஒப்படைத்த பிறகுதான் வழக்கைத் தொடரவேண்டும், அதுவரை வழக்கைத் தள்ளிப் போட வேண்டும் என்று அரசுத் தரப்பு வழக்கறிஞர் மூலமாகவே ஒரு மனுப் போடவைக்கிறார்கள். இதன் நோக்கம் யாவரும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியது தான்!



தங்க-வைர நகைகளை அணிந்து கொண்டு அலங்காரப் பதுமைகளாக ''போஸ்'' கொடுக்கும் ஜெயா-சசிகலா: அடித்த கொள்ளைக்கு ஆதாரப்பூர்வமான சான்று! (கோப்புப் படம்)

வருமானத்திற்கு மேல் 66 கோடி ரூபாய்க்கு மேல் சொத்துக் குவித்தது மற்றும் 48 கோடி ரூபாய்க்கு மேல் இலண்டனில் நட்சத்திர ஓட்டல் வாங்கியது ஆகிய வழக்குகளில் 1997-இல் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு 17 ஆண்டுகளாகி விட்டன. ''குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது; ஆனால், இன்னமும் அது நிரூபிக்கப்பட்டுத் தண்டிக்கப் படவில்லையே!'' என்ற வழக்கமான வாதத்தை வைத்துத்தான் ஜெயலலிதா போன்ற பெருச்சாளிகள் சுதந்திரமாகத் திரிகிறார்கள். மேற்கண்டவாறான கிரிமினல் சட்ட மோசடிகள் மூலம் ஜெயலலிதாவும் அவரது கூட்டாளிகளும் இத்தனை காலமும் தப்பித்து வருகின்றனர். ஆனால், குற்றப்பத்திரிக்கை எதுவும் இல்லாமலேயே, விசாரணை எதுவும் நடத்தப்படாமலேயே பல ஆயிரக்கணக்கான அப்பாவிகள் பல ஆண்டுகளாக இந்தியச் சிறைகளில் சும்மா இல்லை, போலீசு, சிறைத்துறை, நீதித்துறை அதிகாரிகளுக்குக் கொத்தடிமை ஊழியம் செய்வற்கென்றே அடைக்கப் பட்டுக் கிடக்கிறார்கள்.

ஜெயாவின் கூட்டுக் களவாணிகள்:
ஜெயாவின் முன்னாள் வளர்ப்புப் பிராணி சுதாகரன் மற்றும் சசிகலாவின் அண்ணி இளவரசி. (கோப்புப் படம்)





ஜெயலலிதா போன்ற பெருச்சாளிகளோ, இலஞ்ச-ஊழல், அதிகாரமுறைகேடுகள் போன்ற கிரிமினல் குற்றங்கள் புரிந்துவிட்டு, கிரிமினல் சட்ட மோசடிகள் செய்து தொடந்து சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும், மேலும் சொகுசாகவும் வாழ்கிறார்கள். இந்த நிலையிலேயே தேர்தல்களில் நின்று, மீண்டும் மீண்டும் பதவிக்கு வந்து, அதிகாரமும் வசதியும் பெற்று வாழ்வதோடு, தாங்கள் எதிர்கொள்ளும் வழக்குகளிலிருந்து விடுபடுவதற்காக அந்த அதிகாரத்தையும் கேடாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

இந்த வகையில்தான் ஜெயலலிதா கும்பல் மீது 1997-ஆம் ஆண்டு மூன்று சிறப்பு நீதி மன்றங்களில் தொடுக்கப்பட்ட 48 இலஞ்ச-ஊழல், அதிகார முறைகேடுகள் வழக்குகளில் சொத்துக் குவிப்பு மற்றும் இலண்டன் ஓட்டல் வழக்கு தவிர, 47- வழக்குகளில் இருந்து விடுபட்டுக் கொண்டது.

1998-நாடாளுமன்றத் தேர்தல்களில் பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்து வாஜ்பாய் அமைச்சரவையில் பங்கேற்ற ஜெயலலிதா கும்பல், அப்போதைய தி.மு.க. ஆட்சியைக் கலைக்கவும் சொத்துக் குவிப்பு வழக்கிலிருந்து விடுபடவும் நிர்பந்தித்தது. வாஜ்பாய் தலைமையிலான கூட்டணி அரசுடனான பேரங்கள் படியாததால், சுப்பிரமணிய சாமியின் தூண்டுதலால் காங்கிரசை நம்பி ஜெயலலிதா கும்பல் ஆட்சியைக் கவிழ்த்தது. அதன் இந்த சந்தர்ப்பவாத, பிழைப்புவாத அரசியல் காரணமாக 1999 நாடாளுமன்றத் தேர்தல்களில் தோல்வியுற்றது.

2001-இல் காங்கிரசுடன் கூட்டணி சேர்ந்து, இரண்டாம் முறையாக அதிகாரத்தைப் பிடித்த ஜெயலலிதா கும்பல் தானே நியமித்த அரசுத் தரப்பு வழக்கறிஞரையும் ஊழல் தடுப்புப் போலீசையும் பயன்படுத்தி, சொத்துக் குவிப்பு வழக்கில் ஏற்கெனவே சாட்சியமளித்துவிட்ட 74 நபர்களை மீண்டும் வழக்கு மன்றத்துக்கு அழைத்து, 63 பேரை பிறழ் சாட்சியமாக மாற்றிவிட்டது. இந்தக் குற்றச்சாட்டை உறுதிசெய்து



ஜெயா-சசி கிரிமினல் கும்பலின் ஆலோசகரான இறந்துபோன பாஸ்கரன்.

தான், அதிகாரத்தில் இருந்து கொண்டு இவ்வாறான கிரிமினல் சட்ட மோசடிகளில் ஜெயலலிதா ஈடுபடுவார் என்பதற்காகத்தான், உச்ச நீதிமன்றம் 2001 மே மாதம் சொத்துக் குவிப்பு வழக்கை சென்னையிலிருந்து பெங்களூருவிற்கு மாற்றியது. அப்போது 6 மாதங்களில் அதை முடிக்கும்படி உச்சநீதி மன்றம் உத்திரவுபோட்டது. ஆனாலும், மேலும் 13 ஆண்டுகளுக்கு மேலாக வழக்கை இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது, ஜெயலலிதா கும்பல். இந்த வழக்கில் மட்டும் சுமார் 500 தள்ளிவைப்புகள் வாங்கி சாதனை படைத்து, ''வாய்தா ராணி'' என்று பட்டமும் பெற்றுள்ளார், ஜெயலலிதா.

சில மாதங்களுக்கு ஒருமுறை இந்த வழக்கிலிருந்து தம்மை/தன்னை விடுக்கும்படித் தனித்தனியாகவும் கூட்டாகவும் மனுப்போட்டு விசாரணை-வாதங்கள் நடத்துவது; நீதிபதிகள் மற்றும் அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தில் முறைகேடுகள் நடந்து விட்டதாகத் தனித்தனியாகவும் கூட்டாகவும் மனுப்போட்டு விசாரணை-வாதங்கள் நடத்துவது; வழக்குப் போடுவதற்கு முன் உரியவர்களிடமிருந்து முன்அனுமதி பெறவில்லை என்று தனித்தனியாகவும் கூட்டாகவும் மனுப்போட்டு விசாரணை-வாதங்கள் நடத்துவது; ஆவணங்கள் கேட்டும், அவற்றை மொழிபெயர்த்துத் தரும்படியும், மொழிபெயர்ப்பு சரியில்லையென்றும் மனுப் போட்டு விசாரணை- வாதங்கள் நடத்துவது; பல சட்ட நுட்பக் கேள்விகள் எழுப்பி வழக்கைத் தடுத்து வைப்பது, தமது வழக்கறிஞர்களை மாற்றுவது - புதியவர்கள் ஆவணங்களைப் படிக்க அவகாசம் கேட்டுத் தள்ளிவைக்கக் கோருவது; இவை ஒவ்வொன்றுக்கும் உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் வரைமேல் முறையீடு செய்து விசாரணை-வாதங்கள் நடத்துவது என்று வழக்கை இழுத்தடித்தது, ஜெயலலிதா கும்பல்.

2011 தமிழக சட்டமன்றத் தேர்தல்களில் மூன்றாம் முறையாக ஆட்சியைப் பிடித்ததும் பல கிரிமினல் வேலைகளில் இறங்கியது. தமிழக இலஞ்ச ஒழிப்புப் போலீசை வைத்து வழக்கை மீண்டும் விசாரிக்கும் முடிவைப் புகுத்தியது. உச்ச நீதிமன்றம் வரை போய் தி.மு.க. அம்முயற்சியை முறியடித்தது. பின்னர், ஏற்கெனவே சாட்சியளித்தவர்களை மீண்டும் விசாணைக்கு அழைத்து, பிறழ் சாட்சியங்களாக்கும் சதி நோக்கில் மனுப் போட்டது. அதையும் உச்ச நீதிமன்றம் வரை போய் தி.மு.க. முறியடித்தது.

பெங்களூரு சிறப்பு நீதிமன்ற நீதிபதியும் அரசுத் தரப்பு வழக்கறிஞர் பி.வி. ஆச்சார்யாவும் தமக்குச் சாதகமாக மாறமாட்டர்கள் என்பது உறுதியானவுடன் நேரடியாகவே அவர்களைத் துரத்தியடிக்கும் முயற்சியில் ஈடுபட்டது. மல்லிகார்ஜுனையாவின் நியமனத்தில் விதிமுறைகளைப் பின்பற்றவில்லை என்று மனுப்போட்டு வாதாடியது. அது பொய்யென நிரூபிக்கப்படும் நிலையில் மனுவை விலக்கிக் கொண்டது. பி.வி. ஆச்சர்யாவைப் பதவி விலகும்படி மிரட்டியது, ஜெயா கும்பல். இது தொடரவே வேறு வழியின்றி, தான் நிர்பந்திக்கப்படுவதாகப் பகிரங்கமாகவே அறிவித்து, அவர் பதவி விலகினார்.

இப்படிப் பல ஆண்டுகளாகச் சொத்துக் குவிப்பு வழக்கை இழுத்தடித்த ஜெயலலிதா கும்பல், கடந்த ஆண்டு பி.வி.ஆச்சார்யா பதவி விலகியும் மல்லிகார்ஜுனையா ஓய்வு பெற்றும் போனவுடன், தனக்குச் சாதகமான பி.எஸ்.பாலகிருஷ்ணாவை சிறப்பு நீதிமன்ற நீதிபதியாகவும், பவானிசிங்கை அரசுத் தரப்பு வழக்கறிஞராகவும் கர்நாடகா பா.ஜ.க ஆட்சியைப் பயன்படுத்தி நியமிக்கச் செய்தது. இந்தத் தில்லுமுல்லுகள் உச்சநீதிமன்றத்தில் பின்னர் நடந்த வழக்கின் போக்கில் அம்பலமாகிப்போயின.

பி.எஸ். பாலகிருஷ்ணாவும் பவானிசிங்கும் சேர்ந்து கொண்டு ஜெயலலிதா கும்பலுக்குச் சாதகமாகத் வழக்கைத் திருப்பிவிட்டு, அவசர அவசரமாக நடத்தி முடிக்க எத்தனித்தனர். பவானி சிங், அரசுத் தரப்புச் சாட்சியங்களாக இருந்த 166 பேரை 99-ஆகக் குறைத்துக் கொண்டார். அரசுத் தரப்புச் சாட்சியமாக இருந்த தமிழக இலஞ்ச ஒழிப்பு போலீசு அதிகாரியை குற்றவாளிகளின் சாட்சியமாக அழைத்து விசாரித்தார். அவரைப் பிறழ் சாட்சியமாக அறிவித்துக் குற்ற நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. ஜெயலலிதா கும்பலின் மனுக்கள்-கோரிக்கைகள் எதையும் மறுத்துரைக்கவில்லை. இதை நீதிபதி பாலகிருஷ்ணாவும் எதிர்க்கவில்லை. (தில்லைக் கோவில் வழக்கிலும் இப்படித்தான் அரசு வக்கீலையும் நீதிபதிகளையும் தம் கைக்குள் போட்டு

ஜெயா-சசி கும்பலால் மிரட்டப் பட்டதால் அரசு வழக்குரைஞர் பதவியிலிருந்து விலகிக் கொண்ட பி.வி.ஆச்சார்யா. (கோப்புப் படம்)



கொண்டு, தீட்சிதர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்புப் பெற்றனர், சு.சாமியும் ஜெ.மாமியும்.)

வழக்கில் ஏற்படுத்தப்பட்ட சட்டவிரோதப் போக்கைப் புரிந்துகொண்ட தி.மு.க. அரசுத் தரப்புக்குத் துணையாக தலையீடு செய்யும் உரிமையைப் பெற்றது; பின்னர், குற்றவாளிகளுக்குச் சாதகமாகப் பவானிசிங் செயல்படுவதை அம்பலப்படுத்தியது. அவரை வழக்கிலிருந்து கர்நாடகா அரசு விலக்கிக் கொண்டதும், இதை சட்டவிதிப்படி உயர்நீதிமன்ற அனுதியுடன் செய்யவில்லை என்ற காரணத்தைக் காட்டி பவானிசிங்கே அரசுத் தரப்பு வக்கீலாக நீடிக்கவேண்டும்; வழக்கை விரைந்து முடிப்பதற்காக ஓய்வுபெறும் நீதிபதி பாலகிருஷ்ணாவின் பதவிக் காலத்தை நீட்டிக்கவேண்டும் என்று உச்சநீதி மன்றத்துக்குப்போய் ஜெயலலிதா கும்பல் வாதிட்டது. (எதிர்த் தரப்பு வக்கீலாக யார் வாதாட வேண்டும், யார் நீதிபதியாக அமர வேண்டும் என்று கோரி, உச்சநீதிமன்றத்தில் வழக்குப்போட்டு உரிமையும் பெற்ற அதிசயத்தையும் நிகழ்த்திக் காட்டினார், ஜெயலலிதா.)

பவானிசிங் நியமனமே முறைகேடாக நடந்துள்ளது. சட்டவிதிப்படி அரசுத் தரப்பு வக்கீல் நியமனத்துக்கு உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு அனுப்பப்பட்ட பரிந்துரைப் பட்டியலில் பவானிசிங் பெயரே கிடையாது. ஆனாலும், தற்காலிகத் தலைமை நீதிபதி அவரை அரசுத் தரப்பு வக்கீலாக நியமித்துவிட்டார். இந்த முறைகேடு தன் முன்வைக்கப்பட்டபோதும் உச்சநீதிமன்றம் அதைக் கண்டுகொள்ளாமல், பவானிசிங்கையே மீண்டும் அரசுத் தரப்பு வக்கீலாக நீட்டிக்கும்படி உத்திரவு போட்டது. ஓய்வுபெற்ற நீதிபதி பாலகிருஷ்ணாவுக்கு சட்டவிதி முறைக்கு மாறாகப் பதவி நீட்டிப்பு வழங்கும்படியும் கர்நாடகா அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்திரவு போட்டது.

நீதிபதிகள் பாப்டே, சௌகான் அடங்கிய உச்ச நீதிமன்ற அமர்வு ஏன் இப்படி நடந்து கொள்கிறது? தில்லைக்கோவில் வழக்கு, சேதுசமுத்திரம் வழக்கு, ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கு என்று சுப்பிரமணிய சாமி-ஜெயலலிதாமாமி கும்பல் தொடர்புடைய உச்ச நீதிமன்ற வழக்குகளில் எல்லாம் இந்த அமர்வுதான் விசாரித்து ''நல்ல தீர்ப்பு'' வழங்க வேண்டும் என்று திட்டமிட்டு காய்கள் நகர்த்தப்படுகின்றன. அதனால்தான் அங்கே அந்தக் கும்பல் உரிமையுடனும் துணிவுடனும் வாதிடுகிறது.

ஜெயா-சசி கும்பலுக்குத் தொண்டூழியம் செய்து வரும் தற்போதைய அரசு வழக்குரைஞர் பவானிசிங்.



நீதிபதி பாலகிருஷ்ணாவோதானே பதவி நீட்டிப்பை ஏற்காது போய்விட்டார். மீண்டும் அரசுத் தரப்பு வக்கீலாகப் பொறுப்பேற்ற பவானிசிங்கோ வழக்கம் போல ஜெயலலிதா கும்பலுக்கு ஊழியம் செய்கிறார். ஓய்வுபெற்ற நீதிபதி பாலகிருஷ்ணாவையே சொத்துக் குவிப்பு வழக்கில் மீண்டும் நியமிக்கவேண்டும் என்ற ஜெயலலிதா தொடுத்துள்ள வழக்கு உச்சநீதி மன்றத்தில் இன்னமும் ஒருபுறம் நடந்து கொண்டிருக்கையில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள குன்ஹா என்ற நீதிபதி சொத்துக் குவிப்பு வழக்கை மறுபுறம் விசாரித்து வருகிறார்! இவர் முன்புதான், ஜெயலலிதாவின் ஆலோசகர் பாஸ்கரன் வாங்கிப்போன பொருட்களை சிறப்பு நீதிமன்றத்தில் ஒப்படைத்த பிறகுதான் வழக்கைத் தொடர வேண்டும், அதுவரை வழக்கைத் தள்ளிப் போட வேண்டும் என்ற பவானிசிங்கின் வினோதமான மனு-கோரிக்கை-வாதம் நடக்கிறது.

இப்போது ஊழலுக்கு எதிராகப் பெருங்கூச்சல் போடும் அன்னா ஹசாரே, கேஜ்ரிவால் மற்றும் ஊடகங்கள் உட்பட எவரும் ஜெயலலிதா இலஞ்ச-ஊழல்கள் செய்து கையுங்களவுமாகப் பிடிபட்டுள்ள இத்தனை ஆண்டுகளாக, இத்தனை தகிடுதத்தங்கள் செய்வதைக் கண்டுகொள்வதில்லை. கேஜ்ரிவால் வெளியிட்டுள்ள ஊழல்வாதிகள் பட்டியலில் ஜெயலலிதாவின் பெயரில்லை. யாரும் ஆட்டவோ, அசைக்கவோ முடியாத ஜெயலலிதாவுக்குள்ள அவரது சமுதாயச் செல்வாக்கும் ஒட்டுமொத்த சமூகத்தின் விழிப்புணர்வின்மையும்தான் இவை எல்லா வற்றுக்கும் காரணம்! இல்லையென்றால் அம்பலப்பட்டு போன இவ்வளவு பெரிய இலஞ்ச- ஊழல் பெருச்சாளியை மீண்டும், மீண்டும் அதிகாரத்தில் வைப்பார்களா!

● ஆர்.கே.

## ஊறுகாய் பானைக்குள் ஊறும் வழக்குகள்!

பெங்களூரு சிறப்பு நீதிமன்றம் நடத்தும் வழக்கு அல்லாமல், இதே 17 ஆண்டுகளாக மேலும் மூன்று வழக்குகள் ஜெயலலிதாவுக்கு எதிராக நடந்து வருகின்றன. அவை, தனக்கு வரும் பரிசுப் பொருட்களை அரசுக் கருவூலத்தில் முதலமைச்சர் ஒப்படைக்கவேண்டும் என்ற விதியை மீறி அவற்றை அமுக்கிக்கொண்ட ''பரிசுப்பொருள் வழக்கு''; வெளிநாட்டிலிருந்து அடையாளம் தெரியாத நபரிடமிருந்து மூன்று கோடி ரூபாய்களை ஜெயாவும் சசியும் தம் கணக்கில் போட்டுக்கொண்ட ''அந்நியச் செலாவணி மோசடி வழக்கு''; 1991,92, 93 ஆகிய ஆண்டுகளில் ஜெயாவும் சசியும் தமது வருமானக் கணக்கு அறிக்கையை ஒப்படைக்காத ''வருமான வரிமோசடி'' வழக்கு. ''அந்த ஆண்டுகளில் தமக்கு வருமானமேயில்லை. அதனால்தான் வருமானக் கணக்கு அறிக்கை ஒப்படைக்கவில்லை'' என்கிறார்கள், ஜெயாவும் சசியும். வருமானமேயில்லை என்றால் எப்படி இவ்வளவு சொத்துக்களைக் குவித்தார்கள்?

# “புரட்சிகரப் போராட்டமின்றி பார்ப்பன-பாசிசத்தை முறியடிக்க முடியாது!”

## தில்லை கோயில் மீட்பு–ஆலயத் தீண்டாமை ஒழிப்பு மாநாடு விடுத்த அறைகூவல்

தில்லைக்கோயிலைத் தீட்சிதனுக்கே பட்டா போட்டுக் கொடுத்த உச்சநீதிமன்றத் தீர்ப்பு ஒருபுறம்; இந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டிலிருந்து அனைத்துக் கோயில்களும் விடுவிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கும் சு.சாமி மற்றும் இன்னபிற பார்ப்பன பாசிசக் கும்பலின் கூப்பாடு மறுபுறம் - எனத் தமிழகத்தில் மீண்டும் பார்ப்பன பாசிசக் கும்பல் தலையெடுக்கத் துணியும் இந்தப் பின்புலத்தில், ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகளின் பங்கேற்புடன் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் ஒருங்கிணைப்பில் **தில்லைக் கோயில் மீட்பு – ஆலயத் தீண்டாமை ஒழிப்பு மாநாடு** கடந்த 16.02.2014 அன்று சிதம்பரத்தில் நடைபெற்றது.

தில்லைக் கோயிலை அரசே ஏற்று நடத்த தனிச்சட்டம் இயற்றக் கோரியும், தில்லைக் கோயிலில் நந்தன் நுழைந்த தெற்கு வாயிலை அடைத்து தீட்சிதர்கள் எழுப்பியிருக்கும் தீண்டாமைச் சுவரைத் தகர்க்கக் கோரியும் நடைபெற்ற இம்மாநாட்டின் நோக்கத்தை விளக்கி சிதம்பரம் மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களில் புரட்சிகர அமைப்புகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான தோழர்கள் பேருந்துப் பிரச்சாரம், தெருமுனைப் பிரச்சாரம், குடியிருப்புப் பிரச்சாரம், சுவரெழுத்துப் பிரச்சாரம் - என விரிவான அளவில் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டனர். சிதம்பரம் நகரில் திரும்பிய பக்கமெல்லாம் பார்ப்பன பாசிசத்தை அம்பலப்படுத்தி விவாதத்தைத் தூண்டும் முழக்கங்களுடன் மாநாட்டு அறிவிப்பு சுவரெழுத்துப் பிரச்சாரம் விரிவான அளவில் செய்யப்பட்டிருந்தது.

ஜி.எம். வாண்டையார் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திறந்தவெளி மாநாட்டு அரங்கிற்கு ‘‘முதல் ஆலய நுழைவுப் போராளி நமது முப்பாட்டன் நந்தனார் அரங்கம்’’ எனப் பெயரிடப்பட்டிருந்தது. இம்மாநாட்டுக்குத் தலைமையேற்றிருந்த மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் சி.ராஜு, ‘‘சாதித் தீண்டாமைக்கு எதிராகவும், ஆலயத் தீண்டாமைக்கு எதிராகவும் போராட வேண்டிய அவசியத்தை’’ விளக்கிப் பேசினார்.

அடுத்து, வாழ்த்துரை வழங்கிய முன்னாள் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.வி.வி.சாமிநாதன், ‘‘சோழர்கள் காலத்தில் கண்காணிப்பு சபை அமைக்கப்பட்டு அரசு கட்டுப்பாட்டில்தான் ஆலயங்கள் இருந்துள்ளன’’ என்பதைச் சுட்டிக்காட்டியதோடு, ‘‘கனகசபையின் முன் நின்று தமிழில் பாடியதற்கான ஆதாரங்களைப் பட்டியலிட்டு, நடராசனுக்கும் சமஸ்கிருதத்துக்கும் சம்பந்தமில்லை’’ என்பதை நிறுவினார்.

அதைத்தொடர்ந்து, அண்ணாமலைப் பல்கலைக் கழக ஊழியர் சங்கத் தலைவர் மதியழகன், ‘‘தில்லைக் கோயிலை அரசே ஏற்று நடத்துவதற்கேற்ப தனிச்சட்டத்தை இயற்ற வேண்டும்; இது அரசின் கொள்கை முடிவாக அறிவிக்கப்பட வேண்டும்’’ என்றார்.

மாநாட்டு மேடையில் அமர்ந்திருக்கும் (இடமிருந்து) அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர் சங்கத் தலைவர் ரெங்கநாதன், ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் வழக்குரைஞர் ராஜு, சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் சகாதேவன், முன்னாள் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் வி.வி.சாமிநாதன், சிவனடியார் ஆறுமுகசாமி, புலவர் மூ.சொக்கப்பன், மா.பெ.பொ.கட்சியின் சென்னை மாவட்டச் செயலர் வாலசா வல்லவன், ம.க.இ.க. மாநிலப் பொதுச் செயலர் தோழர் மருதையன், அண்ணாமலைப் பல்கலைக் கழக ஊழியர் சங்கத் தலைவர் மதியழகன்.



சைவ சமய அர்ச்சகர் பயிற்சிப் பள்ளியின் தலைமையாசிரியர் புலவர் மூ.சொக்கப்பன் பேசுகையில், அர்ச்சகர் பயிற்சி பெறும் பார்ப்பனர் அல்லாத மாணவர்களுக்குச் செய்முறைப் பயிற்சியளிப்பதற்காக அரசு அனுமதியுடன் திருவண்ணாமலை கோயிலுக்குச் சென்றதையும், பார்ப்பனர் அல்லாதவர்கள் என்பதற்காகவே அக்கோயிலின் பார்ப்பனர்களால் தாங்கள் அவமானப்படுத்தப்பட்டதையும் குறிப்பிட்டு, ஆலயங்களில் கடைபிடிக்கப்படும் ஆலயத் தீண்டாமையின் பல்வேறு பரிமாணங்களை தம் சொந்த அனுபவத்திலிருந்து விளக்கினார்.

இதனைத் தொடர்ந்துப் பேசிய, சிவனடியார் ஆறுமுகசாமி, ''தமிழ்ல பாடினா சாமி செத்துடும்னு சொல்றான் தீட்சிதன். தமிழ் தமிழ்னு பேசுறவனெல்லாம், தமிழ் அறிஞர்களெல்லாம் எங்கே போனான்? ஒரு தீட்சிதனையாவது கேள்விகேட்டானா? தமிழை இழிவுப்படுத்துற ஒரு தீட்சிதனையாவது அடிச்சானா? அய்யரைப் பார்த்து கிலி கொண்டு நிக்கிறான். தீட்சிதன் கழுத்தப்புடுச்சி தள்ளினாலும், தள்ளாடுற வயசுல நானே கனகசபை மேலேறி தமிழ்ல பாடுறேன். தமிழ்னு பேசுறவனெல்லாம் கீழே நின்னு கேட் கம்பியை புடிச்சிகிட்டே தேவாரம் பாடுறான். தீட்சிதன் சாபம் விட்ருவான்னு பயப்படுறான். வம்பு தும்புனு பன்னுனாதான் பிரச்சினை தீரும்'' என்றார்.

மாநாட்டு வாழ்த்துரைகளைத் தொடர்ந்து, மாநாட்டின் காலை அமர்வு தொடங்கியது. **''போராடிப் பெற்ற வழிபாட்டு உரிமையை பார்ப்பனியத்திடம் பறிகொடுப்பதா?''** என்ற தலைப்பில் பேசிய மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சென்னை மாவட்ட செயலர் வாலசா வல்லவன், 1872-இல் ஆலயத்தில் நுழைய முயன்ற 2000 நாடார்கள் படுகொலை செய்யப்பட்டது; 1917-இல் சிதம்பரம் கோயிலின் 4 ராஜவீதிகளிலும் தாழ்த்தப்பட்டோர்கள் நுழைவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை அகற்றக் கோரி நடைபெற்ற ஆலய நுழைவுப் போராட்டம்; குத்தூசி குருசாமி தலைமையில் ஈரோட்டில் நடைபெற்ற ஆலய நுழைவுப் போராட்டம்; திருவண்ணாமலை கோயில் நுழைவுப் போராட்டம் உள்ளிட்ட தமிழகத்தின் பார்ப்பன எதிர்ப்பு மரபைப் பட்டியலிட்டு, இவ்வாறு போராடிப் பெற்ற உரிமையை மீண்டும் பார்ப்பனியத்திடம் பறிகொடுப்பதா என்றுக் கேள்வி எழுப்பினார்.

காலை அமர்வின் இறுதியாக **''உச்சிக்குடுமி மன்றத் தீர்ப்பும் தில்லைக் கோயில் மீட்பும்''** என்றத் தலைப்பில் பேசிய உயர் நீதிமன்ற வழக்குரைஞர் ரா.சகாதேவன், 1877 தொடங்கி இன்று வரையில் அதிகாரத் தாழ்வாரங்களில் முன்குடுமியைக் காட்டியே கீழ்த்தரமான முறையில் தீட்சிதர்கள் தமக்கு சாதகமான உத்தரவுகளை எவ்வாறெல்லாம் பெற்று வந்திருக்கின்றனர் என்பதை வரலாற்று ஆதாரங்களிலிருந்தும் இவ்வழக்கிற்காக தாம் உச்ச நீதிமன்றத்தில் வாதாடிய சொந்த அனுபவத்திலிருந்தும் அம்பலப்படுத்திப் பேசினார். மேலும், ''இனி நீதிமன்றத்தை நம்பிப் பயனில்லை, ஒரு வழக்குரைஞராகவும் இந்த வழக்கில் வாதிட்ட அனுபவத்திலிருந்தும் இதனைச் சொல்கிறேன். மக்கள் போராட்டங்களின் மூலம்தான் இந்த சமூகக் கொடுமைக்கு முடிவு கட்ட முடியும்'' என்று அறைகூவினார்.

விழுப்புரம் தமிழர் நய்யாண்டி மேளத் தப்பாட்டக் குழுவின் பறைமுழக்கத்தோடு தொடங்கியது மதிய அமர்வு. **''கோயில்கள் – மடங்கள் உள்ளிட்ட எல்லா மத நிறுவனங்களின் சொத்துக்களையும் மக்கள் உடமையாக்கு!''** என்ற தலைப்பில் பேசிய ம.உ.பா.மையத்தின் மாநிலத் துணைச் செயலர் வழக்குரைஞர் வாஞ்சிநாதன், அம்பானி, டாடா, பிர்லாக்களிடம் இருக்கும் சொத்துக்களின் மதிப்பையும் பத்மனாப சுவாமி கோயில், திருப்பதி ஏழுமலையான் கோயில், சாயிபாபா, சங்கர மடங்கள், மதுரை ஆதீனங்களிடம் பலநூறு கோடிக் கணக்கில் செல்வங்கள் கொட்டிக் கிடப்பதையும் ஒப்பிட்டுப் பட்டியலிட்டார். இராஜராஜ சோழன் காலத்தில் மட்டும் 400 விதமான வரிகள் வசூலிக்கப்பட்டதை குறிப்பிட்ட அவர், இது போன்று மக்களிடமிருந்து வரியாகப் பறித்துச் சேர்த்தவைதான் இந்த கோயில் சொத்துக்கள் என்பதை ஆதாரங்களுடன் நிறுவினார். இந்தச் சொத்துக்களையெல்லாம் மக்கள் உடமையாக்க வேண்டும் என்றார்.

பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் திரளின் ஒரு பகுதி.



மதிய அமர்வின் இறுதியாக **''முதல் ஆலய நுழைவுப் போராளி நந்தனாரும் சாதி தீண்டாமை ஒழிப்பும்''** என்ற தலைப்பில் பேசிய ம.க.இ.க.வின் மாநிலப் பொதுச் செயலர் தோழர் மருதையன், ''கி.பி.6-ஆம் நூற்றாண்டில் முதன் முதலில் தில்லை மண்ணிலிருந்துதான் தீண்டாமைக்கெதிரான குரல் எழுந்திருக்கிறது. பார்ப்பன மனுநீதி கோலோச்சிய அந்தக் கால



(இடமிருந்து) ம.உ.பா.மையத்தின் மாநிலத் துணைச் செயலர் வழக்குரைஞர் வாஞ்சிநாதன், சிதம்பரம் நகர்மன்றத் தலைவர் வி.எம்.எஸ்.சந்திரபாண்டி, எழுத்தாளர் இமயம் மற்றும் ம.க.இ.க.வைச் சேர்ந்த தோழர் துரை.சண்முகம்.

கட்டத்தில், கோபுர தரிசனத்தைத் தவிர வேறு உரிமை யற்ற நந்தன் தன்னந்தனியாகத் தில்லைக் கோயிலுக்குள் நுழைந்தது சாதாரண விசயமில்லை. தமிழகத்திற்கு மட்டுமே உரிய மரபு இது. இத்தகைய தீண்டாமை எதிர்ப்புப் பாரம்பரியம் கொண்ட தமிழகம் இன்று தீட்சிதனிடம் தோற்றிருக்கிறது. தமிழ் வழி பாட்டுரிமையை இழந்திருக்கிறது. இது வெட்கக்கேடு!'' எனச் சுட்டிக் காட்டினார்.

''தில்லைக் கோயிலை அரசே ஏற்று நடத்த தனிச் சட்டம் இயற்ற வேண்டும்; நந்தன் நுழைந்த சிதம்பரம் கோயிலின் தெற்கு வாயிலை அடைத்து நிற்கும் தீண்டாமைச்சுவரைத் தகர்த்தெறிய வேண்டும்; ஆலயத் தீண்டாமைக்கு முடிவு கட்ட வேண்டும்'' என்பது உள்ளிட்ட 13 தீர்மானங்கள் மாநாட்டு அரங்கில் பலத்த கரவொலிகளுக்கிடையே நிறைவேற்றப்பட்டன.

சட்டம் - ஒழுங்கைக் காரணம் காட்டிப் பேரணிக்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டது, சிதம்பரம் நகர போலீசு. மாநாடு நடைபெற்ற ஜி.எம்.வாண்டையார் மண்டபத்திலிருந்து பொதுக்கூட்டத் திடலான அனந்தீஸ்வரன் கோயில் தெருவைச் சென்றடைய இரண்டு கிலோமீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டும். பயணக் களைப்பையோ, அரைநாள் அரங்கில் அமர்ந் திருந்த சோர்வையோ பொருட்படுத்தாமல், ஒருவர்பின் ஒருவராய் அணிவகுத்துச் சென்றனர், தோழர்கள். இதனை, அறிவிக்கப்படாத பேரணி என்றே சொல்ல வேண்டும்.

இதனைத் தொடர்ந்து, வி.வி.மு.வின் விழுப்புரம் மாவட்ட அமைப்பாளர் தோழர் அம்பேத்கர் தலைமையில் தொடங்கியது பொதுக் கூட்டம். ''தமிழையும் தமிழர்களையும் இழிவு படுத்தும் பார்ப்பனக் கும்பலை அம்பலப் படுத்தி''ப் பேசினார் பு.ஜ.தொ.மு.வின் புதுவை மாநிலப் பொதுச்செயலர் தோழர் கலை. ''மாணவர்கள் உள்ளிட்ட அனைத்துப்பிரிவு உழைக்கும் மக்களையும் அணிதிரட்டி ஆலயத் தீண்டாமைக்கு எதிராகப் போராட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி''ப் பேசினார் பு.மா.இ.மு.வின் விழுப்புரம் மாவட்டச் செயலர் தோழர் செல்வக்குமார்.

நந்தனார் ஆய்வு மையத்தைச் சேர்ந்த காவியச் செல்வன் பேசுகையில், ''ம.உ.பா.மையமும் அதன் ஒருங்கிணைப்பில் புரட்சிகர அமைப்புகள் பங்கேற்று நடத்தும் அனைத்துப் போராட்டங்களுக்கும் தமது அமைப்பு துணைநிற்கும்'' என்றார்.

''தில்லைக் கோயில் பிரச்சினைக்காக தி.க. வீரமணியும் தி.மு.க.வும் ஏன் வாதாடவில்லை'' எனக் கேள்வி எழுப்பிய சிதம்பரம் முன்னாள் நகர்மன்றத் தலைவர் **வி.எம்.எஸ். சந்திர பாண்டியன்**, ''காவிரி பிரச்சினையில் கர்நாடாகவும், முல்லைப்பெரியாறு பிரச் சினையில் கேரளாவும், சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவும் உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை மதிக்காத போது, நாம் மட்டும் இந்த உச்சிக்குடுமிமன்றத் தீர்ப்புக்கு ஏன் கட்டுப்பட வேண்டும்'' என்று கேள்வி எழுப்பினார்.

உழைக்கும் மக்களுக்கு எதிரான தீர்ப்பு என்றுச்சாடிய **எழுத்தாளர் இமயம்**, ''எனது காலத்தில் ஏதாவது நன்மை செய்துவிட்டுச் செல்கிறேன்'' என்று தில்லை வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி பேசியதைக் குறிப்பிட்டு, ''பிறப் பின் அடிப்படையில் நீதிமுறை நடைபெறும் நிலையில் இத்தகைய நீதிமன்றங்கள் அவசியமா?'' என்று கேள்வி எழுப்பினார்.

பேரணிக்கு அனுமதி மறுத்ததோடு மட்டுமின்றி, மாநாடு நடைபெற்ற ஜி.எம்.வாண்டையார் மண்டப

ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி.



நிர்வாகிகளை மிரட்டிய சிதம்பரம் நகரபோலீசின் அடாவடித்தனத்தை அம்பலப்படுத்திய ம.உ.பா. மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் சி.ராஜு, ''மக்கள் போராட்டத்தின் மூலம் உச்ச நீதிமன்றத் தீர்ப்பைச் செல்லாததாக்கவேண்டும்'' என்று அறைகூவினார்.

சமூகம், இலக்கியம், இசை எனப் பல்வேறு தளங்களிலும் தமிழகம் கண்டிருந்த பார்ப்பன எதிர்ப்பு மரபைப் பட்டியலிட்டுப் பேசிய ம.க.இ.க.வைச் சேர்ந்த தோழர்துரை.சண்முகம், ''சிறப்புப் பொருளாதார மண்டலங்களைப் போலசிறப்புப்புரோகித மண்டலங்களாக பார்ப்பன ஆதிக்கத்தின் கீழுள்ள கோயில்கள் மாறி வருவதையும், தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு பார்ப்பன மயமாக்கப்படும் அபாயத்தையும்'' அம்பலப்படுத்திப் பேசினார்.

சொரணையற்றுக் கிடக்கும் தமிழனைத்தட்டியெழுப்பிய ''எப்ப உனக்கு சொரணை வரும்'' என்ற பாடல்; தீட்சிதர்களை அம்பலப் படுத்திய ''சிவன் சொத்து குல நாசம்'' என்ற பாடல்; தில்லானா மோகனாம்பாள் வைத்தி கதாபாத்திரத்துடன் சு.சாமியை ஒப்பிட்டுப் பாடிய ''சு.சாமி... சப்ளை அண்ட் சர்வீஸ்'' என்ற பாடல்; நீதிமன்றத்தை அம்பலப் படுத்திய ''நீதிமன்றமா? பார்ப்பன சாதி மன்றமா?'' என்ற பாடல் - எனப் பார்வையாளர்களின் உணர்வைத் தட்டியெழுப்பியது ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி.

''இது கோயில் விவகாரம் அல்ல; அரசியல் ரீதியில் பார்ப்பன பாசிசஅபாயத்தை எதிர்கொண்டிருக்கிறோம். திருப்பித்தாக்குவதொன்று தான் நம்முன் உள்ள ஒரே வழி'' என்று தோழர் மருதையன் தனது மாநாட்டு உரையில் சுட்டிக் காட்டினார். தில்லைக் கோயில் மீட்பு - ஆலயத் தீண்டாமை ஒழிப்பு மாநாடு உணர்த்தும் செய்தியும் அதுதான்!

● இளங்கதிர்

# “நமது நாட்டுக்குத் தேவை ஒரு புரட்சி!”

**மாருதி சுசுகி நிர்வாகத்தின் முதலாளித்துவப் பயங்கரவாதத்திற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ள தொழிலாளர்களின் போராட்ட அனுபவங்கள் உணர்த்திய உண்மை.**

கடந்த 2012, ஜூலை 18 அன்று குர்கானிலுள்ள மாருதி கார் நிறுவனத்தின் முதலாளித்துவப் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடிய 546 தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு வீதியில் வீசியெறியப்பட்டனர். நிர்வாகமே சதி செய்து மனிதவள அதிகாரியைக் கொன்றுவிட்டு, தொழிலாளர் மீது கொலைவழக்கைச் சோடித்து 148 தொழிலாளர்களைச் சிறையிலடைத்தது. ஒன்றரை ஆண்டுகளான பின்னரும் இத்தொழிலாளர்களுக்கு பிணை மறுக்கப்பட்டு வருகிறது. மாருதியின் அடியாளாக அரசும் போலீசும் நீதித்துறையும் இயங்குகின்றன. இம்முதலாளித்துவப் பயங்கரவாதத்தை எதிர்த்துத் தொடர்ந்து போராடி வரும் மாருதி தொழிலாளர்கள், தமது சொந்த அனுபவத்தின் மூலமாக இன்றைய அரசியலமைப்பு முறையானது தொழிலாளர்களுக்கு எதிரானது என்ற உண்மையைப் பிரகடனப் படுத்துகின்றனர்.

மாருதி தொழிலாளர்கள் மீதான கொலைக் குற்றத்துக்கு எதிராகப் போராடிவரும் வழக்குரைஞர் ராஜேந்திர பதக் தனது பேட்டியில், ''நாம் முதலாளித்துவ உலகில் வாழ்கிறோம். முதலாளிகள் ஓரணியில் இருக்கிறார்கள். அவர்கள் போராடும் தொழிலாளர்களைச் சிறையிலிட்டு வதைக்கிறார்கள். அவர்கள் நீதிபதிகளுக்கு இலஞ்சம் கொடுப்பது உள்ளிட்டு எல்லா வகையான பஞ்சமாபாதங்களையும் செய்யத் தயங்காதவர்கள். இதனால்தான், சிறையிலுள்ள தொழிலாளர்களின் உடல்நலக் குறைவைக் காரணம் காட்டிப் பிணை கேட்டபோதிலும் கூட, அது நீதித்துறையால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

''அரியானா உயர் நீதிமன்ற நீதிபதிகள், அந்நிய முதலீட்டாளர்

கடந்த ஜனவரி 15 முதல் 31 வரை கைத்தால் நகரிலிருந்து டெல்லி வரை முதலாளித்துவ பயங்கரவாதத்துக்கு எதிராகக் குடும்பத்தோடு நடைப்பயணப் பிரச்சாரத்தை மேற்கொண்ட மாருதி தொழிலாளர்கள்.



களின் தரகர்களாகவே உள்ளனர். இன்றைய அரசியலமைப்பு முறை முதலாளிகளுக் கானதாக உள்ளது. இந்தியாவில் தொழிலாளர் பிரச்சினை வராது என்று உத்திரவாதம் அளித்து அந்நிய முதலீட்டாளர்களை ஆட்சி யாளர்கள் அழைக்கிறார்கள். அவர்கள் முதலாளிகளது நிகழ்ச்சி நிரலின்படியே செயல்படுகிறார்கள். மாருதி தொழிலாளர் குடும்பங்கள் பட்டினியில் பரிதவிக் கின்றன. அவர்களது குழந்தைகள் பள்ளிக்குக் கூடச் செல்ல முடியாத அவலம் தொடர்கிறது.


நடைப்பயணப் பிரச்சாரத்தின் நிறைவாக டெல்லி ஜந்தர் மந்தரில் ஜனவரி 31 அன்று மாருதி தொழிலாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் –

''சி.பி.எம். கட்சியில் உறுப்பினராக இருந்த நான், அதன் செயல்பாடுகளைக் கண்டு வெறுப்படைந்து அக்கட்சியிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளேன். சி.பி.எம். என்பது காங் கிரசு ஆதரவு கட்சியாகிவிட்டது. 2004 லிருந்து 2009 வரையிலான காலத்தில் நாடாளுமன்றத்தில் 62 எம்.பி.க்களை இடதுசாரி முன்னணி பெற்றிருந்த போதிலும், தொழிலாளர் சட்டங்களில் எந்த சாதகமான மாற்றத்தையும் அக்கட்சி செய்யவில்லை. தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் தொழிலாளர்களின் வாழ்வில் எந்த மாற்றமும் ஏற்பட்டுவிடாது.

''நமது நாட்டுக்கு ஒரு புரட்சி தேவைப்படுகிறது. அது தொழிலாளர் வர்க்கத்தின் தலைமையில் விவசாயி களை அணிதிரட்டி நடத்தப்பட வேண்டியுள்ளது. இதற்கு தொழிலாளர்கள் ஓரணியில் திரள வேண்டும்'' என்று கூறியுள்ள அவர், இன்றைய மறுகாலனியாதிக்கச் சூழலையும் முதலாளித்துவப் பயங்கரவாதத்தின் கோரத்தையும் இப்பேட்டியின் வழியாக நம் கண் முன்னே கொண்டுவந்து நிறுத்தியுள்ளார்.

இன்றைய அரசியலமைப்பு முறை முதலாளிகளின் நலனுக்கானது என்பதைத் தமது சொந்த அனுபவத் தினூடாகப் புரிந்து கொண்டுள்ள மாருதி தொழி லாளர்கள், கடந்த ஜனவரி 15 முதலாக கைத்தால் நகரி லிருந்து டெல்லி வரை (ஏறத்தாழ 300 கி.மீ.) நீதி கேட்டு நடைப்பயணப் பிரச் சாரத்தை மேற்கொண் டனர். வேலைநீக்கம் செய்யப்பட்ட மாருதி தொழிலாளர்கள் தமது குடும்பத்துடன் அணிதிரண்டு வழி யெங்கும் கிராமங் களிலும் சிறு நகரங் களிலும் ஆலை களிலும் அரசு அலு வலகங்களிலும் பிரச்சாரம், கலை நிகழ்ச்சியுடன் இந்த நெடும் பயணத்தை நடத்தி யுள்ளனர். வழிநெடுகிலுமுள்ள உழைக்கும் மக்கள் அவர்களுக்கு உணவும், இரவில் தங்குவதற்கு ஏற்பாடு களும் செய்துகொடுத்து, நிதியுதவியும் செய்து ஆதரித் துள்ளனர். எழுச்சியுடன் நடந்த இந்தப் பிரச்சார நடைப் பயணம், 16 நாட்களுக்குப் பின்னர் ஜனவரி 31 அன்று டெல்லி ஜந்தர்மந்தரில் ஆர்ப்பாட்டத்துடன் நிறை வடைந்தது. பின்னர் அரசுத் தலைவரிடம் நீதிகேட்டுப் போராடும் தொழிலாளர்கள் மனு கொடுத்தனர்.

வழக்குரைஞர் ராஜேந்திர பதக்.



தீவிரமாகிவரும் முதலாளித்துவ பயங்கரவாதத் தாக்குதலுக்கு எதிராக அனைத்துத் தொழிலாளர்களும் உழைக்கும் மக்களும் ஓரணியில் திரண்டு, இன்றைய அரசியலமைப்பு முறையை வீழ்த்த வேண்டிய அவசியத்தையே மாருதி தொழிலாளர்களின் இப்புதிய போராட்டம் மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது.

● அன்பு


**''புதிய ஜனநாயகம்'' உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள் படிவம் IV (விதி 8-இன் படி)**

1. வெளியிடும் இடம் : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.
2. வெளியிடும் காலம் : மாதம் ஒருமுறை
3. அச்சிடுபவர் பெயர் : இரா. சண்மு கராசு
   இந்தியக் குடிமகனா? : ஆம்
   முகவரி : எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.
4. உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர் : இரா. சண்முகராசு,
   இந்தியக் குடிமகனா? : ஆம்
   முகவரி : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.
5. ஆசிரியர் பெயர் : இரா. சண்மு கராசு
   இந்தியக் குடிமகனா? : ஆம்
   முகவரி : 110, இரண்டாம் தளம், மாநகராட்சி வணிக வளாகம், 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024.


இரா. சண்முகராசுவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

(ஒப்பம்) இரா. சண்முகராசு,
1.3.2014 வெளியிடுபவர்.

## நிடோ டானியம் படுகொலை:

# இந்து - இந்திய தேசியத்தின் இனவெறி!

அருணாச்சலப் பிரதேசத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரின் மகனும், கல்லூரி மாணவருமான நிடோடானியம் தலைநகர் டெல்லியில் இனவெறி பிடித்த பெட்டிக்கடைக்காரர்களால் கடந்த ஜனவரியில் அடித்தே கொல்லப்பட்டுள்ளார். டானியத்தின் தலைமுடியலங்காரத்தை ஏளனம் செய்து வம்புக்கு இழுத்து அவர்கள் தாக்கியதில், மறுநாள் அவர் மரணமடைந்துள்ளார்.



இனவெறியர்களால் அடித்துக் கொல்லப்பட்ட நிடோ தானியம்.

நிடோ டானியம் கொல்லப்பட்டதை எதிர்த்து அருணாச்சலப் பிரதேச மாணவர்களும் பிற ஜனநாயக சக்திகளும் போராட்டங்களை நடத்திய பிறகு, டெல்லி உயர் நீதிமன்றம் தானே முன்வந்து இப்படுகொலையை வழக்காகப் பதிவு செய்து விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. அதன் பின்னரே போலீசார் கொலைக் குற்றவழக்கைப் பதிவு செய்துள்ளனர்.

பெட்டிக்கடைக்காரர்களின் கிண்டல்-கேலிக்கு அடிப்படையாக இருந்தது, அம்மாணவரின் மங்கோலிய வர்ண இனத் தோற்றம். திபெத்திய-மங்கோலிய வர்ண இனத்தைச் சேர்ந்த வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த மக்களை ''சிங்கி'' (சீனவம்சாவளியினர்), ''மோமோ'', சப்பை மூக்கன் என்றெல்லாம் ஏளனம் செய்வது டெல்லியில் சர்வசாதாரணமாக உள்ளது. இம்மக்களது உடை மற்றும் உணவுப் பழக்கங்களை வைத்து வெளிப்படையாகவே கேலி செய்வதும், சீனாவின் கூட்டாளிகள், கைக்கூலிகள், அந்நியர்கள் என்று அவதூறு செய்வதும், போலீசார் கண்டும் காணாமல் இருப்பதும் டெல்லியில் பொதுப்போக்காக உள்ளது.

கடந்த ஜனவரி 29 அன்று டெல்லியில் நடந்த நிடோடானியம் மீதான தாக்குதலை விதிவிலக்கானதாக ஒதுக்கிவிட முடியாது. அதே டெல்லியில், கடந்த பிப்ரவரியில் மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு சிறுமி பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்பட்டார். மணிப்பூரைச் சேர்ந்த சுசப்சிகரண் என்ற இளைஞர் கத்தியால் குத்தப்பட்டுள்ளார். அதைத் தொடர்ந்து அடுத்தடுத்து மணிப்பூர் இளைஞர்கள் தாக்கப்பட்டுள்ளனர். இவற்றுக்கு முன், வடகிழக்கு மாநிலத்தைச் சேர்ந்த ரிச்சர்டு லோயிதம் பெங்களூரிலும், தனா சங்மா குர்கானிலும் கொல்லப்பட்டனர். வடகிழக்கிந்திய மக்களை ஆக்கிரமிப்பாளர்களாகவும் அந்நியர்களாகவும் அவதூறு செய்வதோடு, அவர்கள் மீது இனவெறி, சமூகப் புறக்கணிப்பு, பாலியல் வன்முறைத் தாக்குதல்கள், அச்சுறுத்தல்கள் தீவிரமடைந்து வருகின்றன.

ஏற்கெனவே வடகிழக்கு மாநில மக்கள் மீது இந்திய இராணுவத்தின் காட்டுமிராண்டித் தாக்குதல்கள், வண்புணர்ச்சி, குற்றமிழைத்த இராணுவத்தினரைக் காப்பாற்றும் ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் ஆகியன தொடர்கின்றன. இந்நிலையில் அடுத்தடுத்து நடக்கும் இத்தகைய தாக்குதல்கள் அவர்களை மேலும் அச்சத்திலும் பீதியிலும் ஆழ்த்தியுள்ளன. ''நாங்கள் இந்தியக் குடிமக்கள், நாட்டுப்பற்று கொண்டவர்கள். ஆனாலும் நாங்கள் இரண்டாம்தரக் குடிமக்களாகவே நடத்தப்படுகிறோம்'' என்கிறார், அருணாச்சலப் பிரதேச மகளிர் ஆணையத்தின் உறுப்பினரும், வடகிழக்கு மாநிலங்களில் சமூக சேவையாற்றியதற்காக பத்மசிறீ விருது பெற்றவருமான பின்னி யங்கா.

உ.பி, பீகார் மாநிலக் கூலித் தொழிலாளர்கள் மீது மகாராஷ்டிர நவநிர்மாண் சேனா கடந்த 2008-ஆம் ஆண்டில் நடத்திய கொலைவெறித் தாக்குதலால் வட இந்திய உழைக்கும் மக்கள் அங்கிருந்து தப்பியோடியதைப் போலவே, கடந்த ஆண்டில் வடகிழக்கிந்திய மாணவர்களும் தொழிலாளர்களும் தாக்கப்படுவோம் என்ற பீதியால் தென் மாநிலங்களிலிருந்து வெளியேறிய அவலம் நடந்தது. தாராளமயத்தாலும், உலகமயத்தாலும் வடகிழக்கிந்தியர்கள் இந்தியாவின் பிற பகுதி

இனவெறித் தாக்குதலை எதிர்த்து, நீதிகேட்டு டெல்லியில் போராடும் வடகிழக்கிந்திய மாணவர்கள்.



களில் பிழைப்புக்காகக் குடியேறுவது அதிகரித்துவரும் நிலையில், மறுகாலனியாதிக்கத்தால் தீவிரமாகும் வேலையின்மை, விலையேற்றம் முதலான அனைத்துக்கும் வெளிமாநிலத்தவர்தான் காரணம் என்று குறுகிய இனவெறியை தேவைப்படும்போதெல்லாம்விசிறி விட்டு ஓட்டுக்கட்சிகளும் இனவெறியர்களும் ஆதாய மடைந்து வருகின்றனர். இனவெறியையும் பாகுபாடுகளையும் தடைசெய்வதாகச் சட்டம் அறிவித்தாலும், நடைமுறையில் தாழ்த்தப்பட்ட - பழங்குடியின மக்களும், முஸ்லிம்களும், வடகிழக்கிந்திய மக்களும் அவமதிப்பையும், தாக்குதலையும்தான் அன்றாடம் எதிர்கொள்கிறார்கள். ஆளும் வர்க்கம் தேசிய ஒருமைப்பாட்டையும் சமத்துவத்தையும் பற்றி வாய்கிழியப் பேசினாலும், சமூகத்தில் அது கந்தலாகிக் கிடப்பதையே இவையனைத்தும் நிரூபிக்கின்றன.

## சாலை சுங்க வரி:

# தனியார் முதலாளிகளின் சட்டபூர்வ வழிப்பறி!

தனியார்மயத்தின் இன்னுமொரு கொடிய கொள்ளைதான் சாலை சுங்கவரி. கத்தியைக் காட்டி வழிப்பறி நடப்பதைப் போலத்தான், நெடுஞ்சாலைகளில் வாகன ஓட்டிகளிடம் இந்த சுங்க வரியைக் காட்டி வழிப்பறி நடக்கிறது. அண்மையில் மகாராஷ்டிராவில் இத்தகைய வழிப்பறி சுங்கச்சாவடிகளை ராஜ்தாக்கரேவின் மகாராஷ்டிர நவநிர்மாண் சேனா தாக்கி சூறையாடியதையடுத்து இந்தப் பகற்கொள்ளை விவகாரம் மீண்டும் முன்னிலைக்கு வந்துள்ளது.

நாட்டிலேயே முதன்முறையாக மகாராஷ்டிராவில்தான் 1995-இல் பா.ஜ.க. - சிவசேனா கூட்டணி ஆட்சிக் காலத்தில் சாலைகள் தனியார்மயமாக்கப்பட்டன. தனியார் முதலாளிகள் சாலைகளை அமைத்துப் பராமரித்து, செலவிட்ட தொகையைக் கட்டணங்கள் மூலம் வசூலித்து முடித்த பின்னர், அவற்றை நாட்டுக்கு அர்ப்பணிப்பது எனும் ''உருவாக்கு, பயன்படுத்து, ஒப்படை'' என்ற இத்திட்டத்தின்படி, மகாராஷ்டிராவில் மொத்தம் 4,685 கி.மீ. தொலைவுக்கு அடுத்தடுத்த ஆண்டுகளில் ரூ. 15,200 கோடி மதிப்புடைய சாலை திட்டங்கள் இப்பகற்கொள்ளைக்காகவே உருவாக்கப்பட்டன.



மக்களின் குமுறலைப் பயன்படுத்திக் கொண்டு அரசியல் ஆதாயம் தேடும் முயற்சி: நெடுஞ்சாலைகளில் வாகன ஓட்டிகளிடம் சட்டபூர்வ வழிப்பறி நடத்தும் சுங்கச்சாவடிகளைத் தாக்கிச் சூறையாடும் மகாராஷ்டிர நவநிர்மாண் சேனாவினர்.

இருப்பினும், சாலை உருவாக்கத்தில் பங்கேற்ற தனியார் நிறுவனங்கள், சாலைஅமைக்கச்செலவிட்ட தொகை எவ்வளவு, ஒரு நாளைக்கு வசூல் எவ்வளவு, போட்ட முதலீட்டை இலாபத்துடன் திரும்ப எடுப்பதற்கான காலக்கெடு என்ன, எப்போது நாட்டுக்கு அர்ப்பணிக்கப்படும் என்பதற்கான எந்த வரையறையுமின்றி இச்சுங்கவரி வசூல் கொள்ளை நாடெங்கும் கேள்விமுறையின்றித் தொடர்கிறது. இது தவிர அரசு சுங்க மையங்களில் ஓட்டுப் பொறுக்கிகளின் பினாமிகளிடம் கட்டண வசூல் குத்தகைக்கு விடப்பட்டு அங்கேயும் இக்கொள்ளை கேள்விமுறையின்றித் தொடர்கிறது.

மகாராஷ்டிரா நவநிர்மாண் சேனா தனது ஊழியர்களைக் கொண்டு மும்பையின் 5 மையங்களில் ஜூன்-ஜூலை 2012 -இல் நடத்திய கணக்கீட்டின்படி, ஒப்பந்ததாரர் ரூ. 2,100 கோடி அளவுக்கு முதலீடு செய்துவிட்டு சாலை வரி மூலம் ரூ. 14, 524 கோடி அளவுக்கு 2017-க்குள் சுருட்ட முடியும் என்ற பட்டியலைப் பகிரங்கமாக அறிவித்தது. ஆனால் அரசாங்கம் இப்படி எந்த கணக்கையும் இதுவரை வெளிப்படையாக அறிவிக்க முன்வரவில்லை. காம்கோன் - ஜல்னா புறவழிச்சாலை மற்றும் மும்பை - புனே அதிவிரைவு நெடுஞ்சாலை ஆகியவற்றில் காலக்கெடு முடிந்த பின்னரும் வரி வசூலிப்பதையும், சாலை பராமரிப்பில் 60 சதவீத அளவுக்கே நடந்துள்ளதாகவும், அதேசமயம் அந்த ஒப்பந்ததாரர் போட்ட முதலீட்டுக்கும் மேலாக பல்லாயிரம் கோடிகளைச் சுருட்டியுள்ளதாகவும் மகாராஷ்டிராவின் பொதுக்கணக்குக் கமிட்டி 2013-இல் அளித்த அறிக்கை குற்றம் சாட்டியது. இதேபோல கிருஷ்ணகிரி - தொப்பூர் நாற்கர சாலைக்கு ரூ. 160 கோடி செலவிடப்பட்டதாகவும், இந்தச் சாலையில் சுங்கவரி மூலம் தனியார் நிறுவனத்துக்குச் சராசரியாக மாதத்துக்கு ரூ. 3 கோடி அளவுக்கு வசூலாவதாகவும், இத்தனியார் சுங்கத்துக்கு 25 ஆண்டுகால ஒப்பந்தம் அளிக்கப்பட்டுள்ளதென்றால், அடிக்கும் கொள்ளை எவ்வளவு என்றும் தமிழக லாரி உரிமையாளர்கள் பட்டியலிட்டுள்ளனர்.

2009-இல் பெங்களூர்-மங்களூர் நெடுஞ்சாலையில் இப்பகற்கொள்ளையை எதிர்த்து மறியல் போராட்டம்

நடந்தது. 2012-இல் யமுனா அதிவிரைவு நெடுஞ்சாலையில் உ.பி. விவசாயிகளின் டிராக்டர் வண்டிக்குக் கூட வரி கேட்பதை எதிர்த்து போராட்டம் நடந்தது. நாடு முழுவதும் ஒரே மாதிரியான சுங்கவரி தேவை என்பதை வலியுறுத்தி ஏற்கெனவே லாரி உரிமையாளர்கள் அகில இந்திய அளவில் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தினர். ஆனாலும் தனியார்மயக் கொள்ளையே அரசின் கொள்கையாக உள்ளதால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அரசு - தனியார் கூட்டு என்பது தனியார் கொள்ளைக்கானதுதான் என்பதையும், ஆளும் கட்சிக்கும் சாலை வரி வசூலிக்கும் ஒப்பந்ததாரர்களுக்குமிடையிலான கூட்டணியையும் இத்தனியார்மயமாக்கம் மீண்டும் மெய்ப்பித்துக் காட்டிவிட்டது. பகற்கொள்ளையே தனியார்மயத்தின் நியதியாகிவிட்ட நிலையில், இனி அதனைப் பறித்தெடுப்பதுதான் மக்களின் நீதியாக இருக்க முடியும்.

## பூஷண் ஸ்டீல்: முதலாளித்துவ பயங்கரவாதத்தின் கோரம்!


கடந்த நவம்பர் 13-ஆம் தேதியன்று ஒரிசாவின் தேங்கனால் மாவட்டத்தின் மேராமுண்டுலி பகுதியில் உள்ள பூஷண் எஃகு ஆலையின் கொதிகலன் வெடித்ததில் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் கதி என்னவாயிற்று என்றே யாருக்கும் தெரியவில்லை. அவர்கள் அத்தனை பேரும் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. ஆனால், 3 தொழிலாளர்கள்தான் மரணமடைந்துள்ளனர் என்றும், 38 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும், 168 தொழிலாளர்களைக் 'காணவில்லை' என்றும் அலட்சியமாக அறிவித்துள்ளது, அம்மாநிலத் தொழிலாளர் துறை. காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ள இத்தொழிலாளர்கள் இந்த விபத்தில் கொல்லப்பட்டு அவர்களின் உடல்கள் எங்கேயாவது வீசியெறியப்பட்டு, அடையாளம் தெரியாத பிணங்களாக புதர்களில் நாளை கண்டறியப்படலாம் என்றே பலரும் அஞ்சுகின்றனர்.

விபத்து நடந்த போது எத்தனை தொழிலாளர்கள் அங்கு பணியில் இருந்தனர் என்ற எந்த விவரமும் அந்த ஆலையின் பதிவேட்டிலோ, தொழிலாளர் துறையிடமோ இல்லை. 35 ஒப்பந்ததாரர்களின் பொறுப்பில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றும் இந்த ஆலையில், விபத்து நடந்தபோது 974 பேர் அங்கு பணியாற்றியுள்ளனர் என்று ஒப்பந்ததாரர்கள் கூறும் தகவலை வைத்துத்தான் இந்தக் கணக்குகூட தரப்படுகிறது. இவ்வளவு பெரிய கொடூரம் நடந்துள்ள போதிலும், நீதித்துறையோ, ஊடகங்களோ, ஓட்டுக் கட்சிகளோ இம்முதலாளித்துவப் பயங்கரவாதத்தைக் கண்டும் காணாமல் உணர்ச்சியற்றுக் கிடக்கின்றன.

இந்த ஆலையில் அற்பக் கூலிக்கு 12 மணி நேரத்துக்கும் மேலாகக் கசக்கிப் பிழியப்படும் தொழிலாளர்களுக்குச் சட்டப்படியான குறைந்தபட்சக் கூலியோ, சேமநல நிதியோ, தொழிலாளர் மருத்துவ ஈட்டுறுதியோ, போனசோ எதுவுமே கிடையாது. மேலை நாடுகளிலிருந்து கழித்துக் கட்ட எந்திரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு எவ்விதப் பாதுகாப்பு ஏற்பாடுகளுமின்றி இந்த ஆலையில் இயக்கப்படுவதால், அடிக்கடி விபத்துகள் நேருகின்றன. அரசின் அதிகார பூர்வக் கூற்றுப்படியே, 2006-ஆம் ஆண்டில் இந்த ஆலை நிறுவப்பட்டதிலிருந்து கடந்த 7 ஆண்டுகளில் வெவ்வேறு விபத்துகளில் 119 தொழிலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

சுற்றுச்சூழல்துறை, வனத்துறையிடம் முறைப்படி ஒப்புதல் பெறாமல் ஆலை இயக்கப்படுவதையொட்டி கடந்த 7 ஆண்டுகளில் இந்த ஆலை நிர்வாகத்தின் மீது பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும், இப்பயங்கரவாத முதலாளிகள் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆலை நிர்வாகத்தின் அறிவிக்கப்படாத தனியார் குண்டர் படையாகவே உள்ளூர் போலீசு இயங்குகிறது. இவையனைத்தும் மைய அரசு, மாநில அரசு, ஆலை முதலாளிகளின் கிரிமினல் கூட்டணியை நிரூபித்துக் காட்டுகின்றன. ஒரிசா மாநில மக்களிடமிருந்து அவர்களது காடுகளையும் நிலங்களையும் பறித்துக் கொண்டு அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதாக கூறும் தனியார்மய - தாராளமயத்தின் கோரமுகத்தை பூஷண் எஃகு ஆலை மட்டுமின்றி, நாடெங்கும் தொடரும் முதலாளித்துவப் பயங்கரவாதமே நிரூபித்துக் காட்டுகிறது.

தொழிலாளர்களின் உயிரைக் காவு கொண்ட பூஷண் ஸ்டீல் நிறுவனத்தின் முதலாளித்துவப் பயங்கரவாதத்துக்கு எதிராக அவ்வாலையின் முன்பாக தொழிலாளர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.



## இந்திய - ஜப்பானிய ஒப்பந்தம்:

# அமெரிக்காவின் போர்ச்சக்கரத்தில் இந்தியா

**இந்த ஒப்பந்தத்தின் மூலம், உலக மேலாதிக்க அமெரிக்காவின் போர்ச்சக்கரத்தில் பிணைக்கப்பட்டு நாடே சின்னாபின்னமாக்கப்படும் பேரபாயம் நெருங்கியுள்ளது.**

கடந்த ஜனவரி 26 'இந்தியக் குடியரசு' தினத்தன்று தலைமை விருந்தினராக ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே கௌரவிக்கப்பட்டதோடு, ஜப்பானுக்கும் இந்தியாவுக்குமிடையே சுற்றுலா, இராணுவம், தொலைத் தொடர்பு, அடிக்கட்டுமானத்துறை, மின் உற்பத்தி, அணுசக்தி உள்ளிட்ட 8 வகையான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. அதற்கு முன்னர், இந்தியாவுக்கு வந்த ஜப்பானிய இராணுவ அமைச்சர் இட்சுநோரி ஒனோடெரா-வுடனான பேச்சுவார்த்தைக்குப் பின்னர், இரு நாடுகளின் கடற்படைகளும் தொடர்ந்து முறையாகக் கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்கொள்ளும் என்றும், அவசியமானால் அமெரிக்கப் படையுடன் சேர்ந்து இந்தியாவும் ஜப்பானும் கூட்டுப் பயிற்சிகளை நடத்தும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் நாட்டின் பாதுகாப்பைக் கருதி, ஜப்பானிடமிருந்து 165 கோடி டாலர் மதிப்புள்ள ''யூஎஸ்-2ஐ'' எனும் உயர்தர போர் விமானங்களை வாங்கவும் ஜப்பானின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இந்தியாவில் போர் விமானங்களை வடிவமைக்கவும் முடிவாகியுள்ளது. ஜப்பானுடன் கையெழுத்திட்டுள்ள இந்த ஒப்பந்தங்களால் இந்தியா வலிமையும் வளமும் பெறுவதற்கான வாய்ப்புகள் பிரகாசமடைந்துள்ளதாக முதலாளித்துவ ஊடகங்கள் சித்தரித்து வருகின்றன.

ஆனால், ஜப்பானிய வல்லரசுடன் இந்தியா போட்டுக் கொண்டுள்ள இந்த ஒப்பந்தங்களின் மூலம் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்திலும் பசிபிக் கடல் பிராந்தியத்திலும் அமெரிக்காவுக்குச் சேவைசெய்யும் அடியாளாக இந்தியா மாற்றப்பட்டுள்ளது. ஆசியாவுக்கான தனது போர்த் தந்திரத் திட்டத்தின்படி, ஏற்கெனவே ஜப்பானையும் ஆஸ்திரேலியாவையும் தனது கூட்டாளிகளாகக் கொண்டுள்ள அமெரிக்கா, இந்த ஒப்பந்தத்தின் மூலம் இந்தியாவைத் தனது இளைய பங்காளியாகச் சேர்த்துக் கொண்டுள்ளது.

•••

அண்மைக்காலமாக தென்சீனக் கடல் பகுதியில் போர் பதற்ற நிலை தீவிரமாகி வருகிறது. தென்சீனக் கடலிலுள்ள ஆளில்லா சென்காகு தீவுக் கூட்டத்தில் எண்ணெய் வளம் இருப்பதாகக் கண்டறியப்பட்ட பின்னர், சீனா தனது பாரம்பரிய உரிமைகளைக் காட்டி அவற்றுக்குச் சொந்தம் கொண்டாடுகிறது. இதேபோல இத்தீவுக் கூட்டங்களுக்கு சீனாவின் அண்டை நாடுகளான ஜப்பான், பிலிப்பைன்ஸ், புருனே, மலேசியா, வியட்நாம், கம்போடியா ஆகிய நாடுகளும் உரிமை கோருகின்றன. தென்சீனக் கடலிலுள்ள தீவுகள் யாருக்குச் சொந்தம் என்பதை அந்த வட்டார நாடுகள் தான் தமக்குள் பேசித் தீர்வு காண வேண்டுமே தவிர, இதில் தலையிட்டு நாட்டாமை செய்வதற்கு அமெரிக்காவுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. ஆனால், அவ்வாறு தலையிடுவதற்கான முகாந்திரத்தைத் தேடுவதற்காகவே, தனது நட்பு நாடுகளின் பெயரால் மூக்கை நுழைக்கும் அமெரிக்கா, சீனாவின் செல்வாக்கை இப்பிராந்தியத்தில் தடுத்து தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டத் துடிக்கிறது.

இந்தியாவை அமெரிக்காவின் போர்ச்சக்கரத்தில் பிணைக்கும் ஒப்பந்தத்தை நிறைவேற்றிய பூரிப்பில் இந்திய - ஜப்பானியப் பிரதமர்கள்.



இதன்காரணமாக, தனது இராணுவ வலிமையைப் பெருக்குவதிலும் போர்ப்பயிற்சிகளை நடத்துவதிலும் சீனா இறங்கியுள்ளது. சென்காகு தீவுக் கூட்டத்தை உள்ளடக்கியுள்ள தென் சீனக்கடலின்வான்பரப்புப் பகுதியைத் தனது ''வான் பாதுகாப்புக்கு உட்பட்ட வளையம்'' என்று கடந்த ஆண்டு நவம்பர் 24-இல் அறிவித்த சீனா, இப் பகுதியில் பறக்கும் விமானங்கள் சீனாவிடம் முறைப்படி அனுமதி பெறாவிடில், அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவித்தது. இதை ஏற்க மறுக்கும் ஜப்பானுக்கு ஆதரவாக நிற்கும் அமெரிக்க வல்லரசு, நவம்பர் 26 அன்று தனது இரு பி-52 ரக போர் விமானங்களை எவ்வித முன்னறிவிப்புமின்றி அப்பகுதியில் பறக்கவிட்டு சீனாவைச் சீண்டியது.



அமெரிக்காவின் ஆசிய மேலாதிக்கப் போர்த்தந்திர திட்டத்தின்படி, சீனாவுக்கு எதிராக ஜப்பானுடன் கூட்டுச் சேர்ந்து இராணுவப் பயிற்சியை மேற்கொள்ளும் இந்தியக் கடற்படை.

இதேபோல, கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் கொரிய தீபகற்பத்தில் எந்நேரமும் போர் வெடிக்கலாம் என்ற பதற்ற நிலையை அமெரிக்கா தோற்றுவித்தது. அணு வாற்றல் கொண்ட வடகொரியாவின் அச்சுறுத்தலை முறியடிப்பது, அமெரிக்காவின் நட்பு நாடுகளான தென் கொரியா, பிலிப்பைன்ஸ் மற்றும் ஜப்பானைப் பாதுகாப்பது என்ற பெயரில், கொரிய தீபகற்பத்தில் பெரும் படைகளைக் குவித்து போர் ஒத்திகைகளை நடத்தி அமெரிக்கா அச்சுறுத்தியது. வடகொரியாவை ஆத்திர மூட்டிப் போருக்குத் தள்ளுவதன் மூலம் வட கொரியாவின் நட்பு நாடான சீனாவை இப்போரில் இழுத்துவிட்டு, அதன் மீது தாக்குதல் தொடுக்கும் நோக்கத்துடனேயே அமெரிக்கா இந்நடவடிக்கைகளை மேற்கொண்டது.

முதலாளித்துவ நாடாக வளர்ந்துள்ள சீனா, உலகமயமாக்கலைப் பயன்படுத்திக் கொண்டு உலகின் நுகர் பொருள் சந்தையில் மட்டுமின்றி, உயர் தொழில்நுட்ப உற்பத்தியிலும் போட்டியிடத் தொடங்கியுள்ளது. சீனாவின் ஏற்றுமதியில் அமெரிக்காவே முதலிடம் வகிக்கிறது; அதேபோல சீனத்தில் போடப்பட்டுள்ள அந்நிய முதலீடுகளில் அமெரிக்க முதலீடுகளே அதிகமானதாக உள்ளது; தாராளமயக் கொள்கையைத்தான் சீனா பின்பற்றுகிறது என்ற போதிலும், உலகச் சந்தையில் சீனாவின் போட்டியை பெரும் சவாலாகக் காட்டி அமெரிக்காவும் முதலாளித்துவ ஊடகங்களும் பீதியூட்டுகின்றன.

அமெரிக்க வல்லரசை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாக ஷாங்காய் கூட்டுறவு, ஆப்பிரிக்காவில் முதலீடுகள், தென்கிழக்காசியாவைத் தன்பக்கம் இழுப்பது போன்ற முயற்சிகளை சீனா மேற்கொண்டுள்ள போதிலும், அமெரிக்காவுக்கு மாற்றான ஒரு மையமாக சீனா தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவில்லை. அமெரிக்காவுடன் நேரடியாக மோதாமல், அதன் ஆத்திரமூட்டும் மேலாதிக்க நடவடிக்கைகளைத் தந்திரமாகக் கையாண்டு வரும் சீனா, அமெரிக்க ஏற்றுமதிச் சார்பிலிருந்து விடுபட்டு, உலகமயமாக்கலைப் பயன்படுத்திக் கொண்டு தனது சந்தையை விரிவாக்கிக் கொள்ளவே முயற்சிக்கிறது.

மூலப்பொருட்களுக்காகவும் சந்தைக்காகவும் எரிபொருளுக்காகவும் ஆப்பிரிக்காவில் கால்பதித்துள்ள சீனா, பொருளாதார ஒத்துழைப்பு, கட்டுமானப் பணிகள் முதலானவற்றின் மூலம் ஆப்பிரிக்க நாடுகளில் தனது செல்வாக்கைப் பெருக்கி வருகிறது. ஏகாதிபத்திய உலகமயமாக்கலின்படி அனைத்து நாடுகளும் சுதந்திரமாகப் போட்டியிடலாம் என்று கூறும் அமெரிக்கா, இதில் தனது மேலாதிக்கத்துக்குப் போட்டியாக சீனா வரக்கூடாது என்பதற்காகவே சீனாவை ''அச்சுறுத்தும் வல்லரசாகப்'' பூச்சாண்டி காட்டுகிறது.

சீன முதலாளித்துவத்தின் போட்டியையும் உலகப் பொருளாதாரத்தில் அதிகரித்துவரும் சீனாவின் செல்வாக்கையும், தனது உலக மேலாதிக்கத்துக்கு எதிரான சவாலாகக் கருதும் அமெரிக்கா, சீனாவின் உய்குர் பிராந்தியத்தில் இசுலாமிய தீவிரவாதத்தைத் தூண்டிவிடுவது, திபெத்தில் தலாய்லாமாவைப் பின்னாலிருந்து இயக்குவது, சீனாவின் அங்கமான தைவானைத் தனிநாடாக அறிவித்து அதனுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் போட்டிருப்பது, சென்காகு தீவுகள் விவகாரத்தைக் கிளறிவிடுவது, தென்கிழக்காசிய நாடுகளை சீனாவுக்கு எதிராகத் திருப்புவது, சர்வதேச கடல் விதிகளை மீறி சீனக் கடற்பரப்பில் தனது உளவு விமானங்களை வேவு பார்க்க அனுப்புவது - எனப் பலவழிகளிலும் ஆத்திர மூட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

உலகின் கடல்வழி வணிகத்தில், குறிப்பாக எண்ணெய் வர்த்தகத்தில் பாதிக்கும் மேலாக மலாக்கா மற்றும் ஹெர்மஸ் நீரிணை வழியாக நடப்பதால், 'எதிர்கால வல்லரசான' சீனாவின் மேலாதிக்கத்தில் இந்தக் கடல்வழி சிக்கிவிடக்கூடாது என்பதில் அமெரிக்கா குறியாக இருக்கிறது. அமெரிக்காவின் கூட்டாளியாக உள்ள ஜப்பானும் ஆஸ்திரேலியாவும், அமெரிக்காவின்

ஆசிய மேலாதிக்கப் போர்த்தந்திரத் திட்டத்தில் முன்னணிப் பாத்திரமாற்றுகின்றன. சந்தைக் காகவும் மூலதன விரிவாக்கத்திற்காகவும் நடக்கும் இந்த நாய்ச்சண்டையில் இப்போது இந்தியாவையும் அமெரிக்கா இளைய பங் காளியாகச் சேர்த்துக் கொண்டுள்ளது.

இதன்படியே, இந்தியப் பெருங்கடல், அரபிக்கடல் பகுதிகளில் ஜப்பானுடன் கூட்டுச் சேர்ந்து கடற்படை ஒத்திகை நடவ டிக்கைகளையும் கூட்டுப் பயிற்சிகளையும் மேற்கொண்ட இந்தியா, இப்போது போடப் பட்டுள்ள இந்திய - ஜப்பானிய ஒப்பந்தத்தின் படி, சீனா அறிவித்துள்ள வான் பாதுகாப்பு மண்டலத்தினுள் அத்துமீறி தனது போர் விமானங்களைச் செலுத்தவும் தீர்மானித் துள்ளது. இனி இந்தியாவின் தேசிய பாது காப்புக் கவுன்சிலின் அதிகாரிகள், ஜப்பானிய அதிகாரி களுடன் சேர்ந்து திட்டங்களை வகுப்பார்கள் என்று அறி விக்கப்பட்டுள்ளது.



டெல்லி அருகே நொய்டா நகரில் கடந்த டிசம்பர் 15-18 தேதிகளில் நடந்த ‘‘இந்திய - ஜப்பானிய உலகளாவிய பங்குதாரர் உச்சி மாநாடு 2013’’ : மறுகாலனியாதிக்க விரிவாக்கத்துக்கும் இந்திய - ஜப்பானிய கார்ப்பரேட் முதலாளிகளின் கூட்டுக் கொள்ளைக்குமான புதிய ஏற்பாடு.

அமெரிக்காவின் கூட்டாளியான ஜப்பான், இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து அந்நாட்டின் மீது விதிக்கப்பட்டிருந்த சட்டரீதியான கட்டுப்பாடுகளை நீக்கிவிட்டு வெளிப்படையாகவே இராணுவ பலத்தைப் பூதாகரமாக அதிகரிப்பதிலும், ஆயுத விற்பனையிலும், பிற நாடுகளுடன் கூட்டு ராணுவப் பயிற்சிகளை மேற் கொள்வதிலும் ஈடுபடத் தொடங்கியுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் போடப்பட்ட ஒப்பந் தத்தால், இதுவரை தற்காப்புப் படையாக இருந்த ஜப்பானிய இராணுவம், இனி முழு அளவிலான தாக்குதல் திறன்மிக்கதாக மாற்றியமைக்கப்படும் என்று சீனாவுக்கு எதிராகத் தேசியவெறியூட்டி வருகிறார், ஜப் பானியப் பிரதமர் அபே. இரண்டாம் உலகப் போரில் காலனியாதிக்க அடக்குமுறையிலும் அட்டூழியங் களிலும் ஈடுபட்ட ஜப்பானின் முதல்தர போர்க்குற்ற வாளிகளின் கல்லறைகள் அமைந்துள்ள யாசுகுனி வழி பாட்டுத் தலத்துக்குச் சென்று ஜப்பானின் உயர்மட்டத் தலைவர்கள் வழிபடுவதை சீனாவும், வட - தென்கொரிய நாடுகளும், இதர தென்கிழக்காசிய நாடுகளும் கடுமையாக எதிர்க்கின்றன. இருப்பினும், சீனாவை ஆத்திரமூட்டவும் ஜப்பானிய மேலாதிக்கத்தைப் பெருமைப்படுத்தவும் கடந்த டிசம்பர் 26 அன்று பிரதமர் அபே அங்கு சென்று அஞ்சலி செலுத்தியுள்ளார்.

> ஜப்பானிய வல்லரசுடன் இந்தியா போட்டுக் கொண்டுள்ள ஒப்பந்தங்களின் மூலம் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்திலும் பசிபிக் கடல் பிராந்தியத்திலும் அமெரிக்காவுக்குச் சேவை செய்யும் அடியாளாக இந்தியா மாற்றப் பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஆசியப் போர்த்தந்திரத் திட்டத்தின் படியே ஜப்பான், ஆஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகள் மட்டுமின்றி, சீனாவைச் சுற்றியுள்ள நாடுகளது இராணுவ வலிமையும் அதிகரிக்கப்பட்டு வருகின்றன. உலகில் அதிக அளவில் ஆயுதக் கொள்முதல் நடக்கும் பிராந்தியமாக தென்கிழக்காசியா மாறியுள்ளது. ஏற்கெனவே கடந்த 2007-2011 வரையிலான காலத்தில் பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள ஆயுதங்களை வாங்கிக் குவித்துள்ள இந்தியா, உலகின் ஆயுதக் கொள் முதலில் முன்னிலையிலுள்ள நாடுகளுள் ஒன்றாக வளர்ந்துள்ளது.

அமெரிக்காவின் ஆசிய மேலாதிக்கத் திட்டத்துக்கும், உலக மேலாதிக்கத்துக்கும் பயன்படும் வகையில் புவியியல் ரீதியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இந்தியா இருப்பதாலும், சீனாவின் அண்டை நாடாக இருப்பதாலும், அமெரிக்கப் போர்விமானங் களும் போர்க் கப்பல்களும் விரைந்து சென்று தாக்கு வதற்கு ஏற்ற வகையிலான ஏவுதளமாகவும் அடியாளா கவும் இந்தியாவை மாற்றியமைக்க இந்த ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்கா முயற்சிக்கிறது.

இது மட்டுமின்றி, தனது நாட்டில் புகுஷிமா பேரழிவுக்குப் பின்னர் அந்த அணுஉலையை மூடியுள்ள ஜப்பான், இப்போது தனது அணு உலைகளை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் இந்த ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இதன் விளைவாக, புகுஷிமா போன்ற பேரழிவுகளைக் கருக்கொண்டுள்ள அணு உலைகள் இந்திய நாட்டின் கடலோரப் பகுதிகளில் தொடங்கப்படும் என்பது உறுதியாகிவிட்டது.

மொத்தத்தில் தேசநலன் - பாதுகாப்பு என்ற பெயரில் உலக மேலாதிக்க வெறி பிடித்த அமெரிக்காவின் அடிமையாகவும் அடியாளாகவும் இந்தியாவை மாற்றி யிருக்கிறது, இந்த ஒப்பந்தம். இந்திய - சீன வர்த்தக உறவானது, இந்தியத் தரகு முதலாளிகளுக்குப் பொருளாதார ரீதியாக ஆதாயமானதாக இருந்த போதிலும்,

அரசியல் காரணங்களுக்காக அமெரிக்காவின் பக்கமே அவர்கள் நிற்கின்றனர். ஏற்கெனவே சீன எதிர்ப்பு இந்தியாவில் நீண்டகாலமாக நிலவி வருவதாலும், இந்துவெறியர்களும் 'தேசிய' ஊடகங்களும் சீன அபாயத்தைக் காட்டி பீதியூட்டி வருவதாலும், ஈழ விவகாரத்தில் ராஜபக்சே கும்பலுக்கு ஆதரவாக சீனா நிற்பதைக் காட்டி சீனாவை எதிரியாக தமிழினவாதிகள் சித்தரிப்பதாலும், அமெரிக்காவின் அடியாளாக இந்தியாவை மாற்றும் இந்த முக்கியமான ஒப்பந்தம் எதிர்ப்பே இல்லாமல் கையெழுத்தாகியுள்ளது.

அன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நாடு பிடிப்பதற்காக உலகெங்கும் நடத்திய ஆக்கிரமிப்புப் போர்களில் இந்தியர்கள் காலாட்படையாகச் சென்று கொல்லப்பட்டதைப் போலவே, இன்று அமெரிக்காவின் மேலாதிக்கத்துக்கான அடியாள் படையாகச் சென்று இந்திய சிப்பாய்கள் கொல்லப்படுவதும், அதிநவீன அமெரிக்க ஆயுதங்கள் மேலும் இறக்குமதி செய்யப்பட்டு, அடுக்கடுக்காக வரிவிதிப்பும், அடக்குமுறையும் அதிகரிக்கப் போவதுதான் இந்திய மக்களுக்கு இந்த ஒப்பந்தம் தரப்போகும் பரிசுகள்.

நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கக்கூடிய இந்த ஒப்பந்தம், நாடாளுமன்றத்தில் விவாதம் கூட நடத்தப்படாமல் அதிகாரிகள் மட்டத்தில் இறுதியாக்கப்பட்டு, கொல்லைப்புறமாகவே திணிக்கப்பட்டுள்ளது. இப்படித்தான் மறுகாலனியாதிக்கப் படுகுழியில் இந்தியாவைத் தள்ளிய ''காட்'' ஒப்பந்தமும், நாட்டை அமெரிக்காவின் அடிமையாக மாற்றிய அணுசக்தி ஒப்பந்தமும் நம் மீது திணிக்கப்பட்டன. நாட்டையும் மக்களையும் பேரழிவுக்குள் தள்ளும் அபாயகரமான இந்தத் தேசத் துரோகிகள் உடனடியாகத் தூக்கியெறியப்பட்டு, இந்திய - ஜப்பானிய ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவதற்கான மக்கள் போராட்டங்கள் பெருக வேண்டும். இல்லையேல், அமெரிக்காவின் போர்ச்சக்கரத்தில் பிணைக்கப்பட்டு நாடே சின்னாபின்னமாக்கப்பட்டுவிடும்.

● பாலன்

# போஸ்கோவின் கனிம வளக் கொள்ளை
# உழைக்கும் மக்களின் வாழ்வாதாரங்கள் சூறை

**சுற்றுச்சூழலையும் உழைக்கும் மக்களின் வாழ்வாதாரங்களையும் பாதுகாப்பதைவிட, கார்ப்பரேட் முதலாளிகளின் இலாபமே காங்கிரசு ஆட்சியாளர்களுக்கு முக்கியமானதாகிவிட்டது.**

புல்டோசரை வைத்து தகர்த்ததைப் போல, கார்ப்பரேட் முதலாளிகள் தொடங்கப்போகும் பெரும் திட்டங்களுக்குச் சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் விதிக்கப்பட்டிருந்த பெயரளவிலான தடைகள் அனைத்தையும் நீக்கிவிட்டு, தாராள அனுமதியளித்துள்ளார் மைய அமைச்சர் வீரப்ப மொய்லி. கடந்த டிசம்பரில் சுற்றுச்சூழல் - வனத்துறை அமைச்சரான ஜெயந்தி நடராசன் பதவி விலகிய பின்னர் அத்துறைக்குப் பொறுப்பேற்றுள்ள பெட்ரோலியத்துறை அமைச்சரான வீரப்ப மொய்லி, பதவியேற்ற 20 நாட்களில் ரூ.1.8 லட்சம் கோடி மதிப்பிலான 73 பெரும் திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் சார்பில் அடுத்தடுத்து ஒப்புதல் அளித்துள்ளார். குறிப்பாக, புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டு ஒரிசா மக்களின் கடும் எதிர்ப்பால் கடந்த 8 ஆண்டுகளாக நிலுவையில் இருந்த இந்தியாவின் மிகப்பெரிய அந்நிய முதலீட்டுத் திட்டமான போஸ்கோ இரும்பு-எஃகு ஆலைத் திட்டத்துக்கும் ஒப்புதல் அளித்துள்ளார்.


கடந்த ஜனவரியில் தென்கொரிய அதிபர் பார்க் கியூன் ஹை-யின் வருகையையொட்டி, அதற்கு முன்னதாகவே தென்கொரியாவின் போஸ்கோ திட்டத்துக்கு அவசரமாக ஒப்புதல் அளித்துள்ள அமைச்சரின் இந்த முடிவானது, கார்ப்பரேட் முதலாளிகளையே பிரமிக்க வைத்துள்ளதாக முதலாளித்துவ ஊடகங்கள் சித்தரிக்கின்றன. சுற்றுச்சூழல், வனப் பாதுகாப்பு, இத்திட்டங்களால் வெளியேற்றப்படும் மக்களுக்கு வாழ்வுரிமையளித்தல் முதலான எதைப் பற்றியும் கவலைப்படாமல், கண்ணை மூடிக்கொண்டு அவசர அவசரமாக அமைச்சர் வீரப்ப மொய்லி ஒப்புதல் அளித்திருப்பது பலரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

ஆனால், வீரப்ப மொய்லியின் அதிர்ச்சியூட்டும் இந்த அறிவிப்பு திடீரென உருவானதல்ல. மைய

தென்கொரிய அதிபரின் வருகையையொட்டி, அவசரமாக போஸ்கோ திட்டத்துக்கு சுற்றுச்சூழல் அமைச்சகம் அனுமதியளித்துள்ளதை எதிர்த்து, ''தென்கொரிய அதிபரே, வெளியேறு!'' என்ற முழக்கத்துடன் வாழ்வுரிமைப் பறிக்கப்பட்ட ஜெகத்சிங்பூர் மாவட்ட மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.



அரசின் சுற்றுச்சூழல் துறையும் பிரதமர் அலுவலகமும், கார்ப்பரேட் முதலாளிகளின் நலன்களுக்கு ஏற்ப ஏற்கெனவே நிலவி வந்த பெயரளவிலான சட்டங்களையும் விதிகளையும் கட்டுப்பாடுகளையும் நெறிமுறைகளையும் அடுத்தடுத்து நீர்த்துப்போகும் வகையில்தான் இயங்கி வந்துள்ளன. மேலும், அம்பானி உள்ளிட்ட கார்ப்பரேட் முதலாளிகளின் நோக்கங்களை உடனுக்குடன் நிறைவேற்றும் விசுவாசி என்பதை பெட்ரோலியத்துறை அமைச்சரான வீரப்ப மொய்லி நிரூபித்துக் காட்டியுள்ளதாலேயே, அவரைச் சுற்றுச்சூழல் - வனத்துறை அமைச்சகத்துக்கும் பொறுப்பேற்குமாறு மைய அரசு பணித்தது.



கார்ப்பரேட் கொள்ளைக்கு எதிரான உழைக்கும் மக்களின் போர்:
தமது வாழ்வுரிமையைப் பறிக்க வந்துள்ள போஸ்கோ நிறுவனத்தின்
கட்டுமான அலுவலகச் சுற்றுச்சுவரை இடித்துத் தள்ளி,
அதனைத் தீயிட்டுக் கொளுத்திய ஒரிசா மக்கள்.

● கடந்த டிசம்பர் 2012-இல் முதலீட்டுக்கான அமைச்சரவை கமிட்டியை பிரதமர் மன்மோகன் தலைமையில் மைய அரசு உருவாக்கியது. ரூ.1000 கோடிக்கும் மேலான முதலீட்டுத் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்தவும், இதற்குத் தடையாக உள்ள சட்டங்களை, குறிப்பாகச் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை பாதுகாப்பு, குடிமக்களை இப்பகுதியிலிருந்து வெளியேற்றுவது தொடர்பான சட்டங்களில் உள்ள விதிகளை அகற்றுவது என்று தீர்மானிக்கப்பட்டது. இக்கமிட்டியில் சுற்றுச்சூழல்-வனத்துறை அமைச்சரோ, பழங்குடியினர் நலத்துறை அமைச்சரோ சேர்க்கப்படாமல் திட்டமிட்டே ஒதுக்கப்பட்டனர். கடந்த மார்ச் 2013-இல் பல்வேறு பெரும் திட்டங்களுக்குப் பல அமைச்சகங்கள் ஒப்புதல் அளிக்காமல் இருப்பதைக் குறிப்பிட்ட மைய அமைச்சரவை, இவற்றை விரைந்து நிறைவேற்றும் வகையில் செயல்பட வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றியது.

● ஜனவரி 2012-இல் கார்ப்பரேட் முதலாளிகளின் பெரும் திட்டங்களைத் தொடங்குவதற்கு முன்னதாக இப்பகுதியிலுள்ள பழங்குடியின கிராமப் பஞ்சாயத்துகளிடம் தடையில்லாச் சான்றிதழ் பெறவேண்டும் என்ற விதி நீக்கப்பட்டு, மாநில அரசின் ஒப்புதலும் வனத்துறையின் ஒப்புதலும் இருந்தால் போதும் என்று மாற்றப்பட்டது. ஜனநாயகத்தில் பொதுமக்களின் பங்கேற்பு என்பது அவசியமானது என்று ஏற்கப்பட்டாலும், போஸ்கோ விவகாரத்தில் அது வெளிப்படையாகவே முறியடிக்கப்பட்டது.

● பிப்ரவரி 2013-இல் சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகம், சிறிய திட்டங்களுக்கு - அதாவது, சாலை போடுதல், ரயில்பாதை அமைத்தல், மின்சாரக் கோபுரங்கள் அமைத்தல், மின்கம்பித் தடங்களை அமைத்தல் முதலானவற்றுக்குப் பழங்குடியின கிராமப் பஞ்சாயத்துகளின் ஒப்புதல் அவசியமில்லை என்று அறிவித்தது. மாவோயிஸ்டுகளின் செல்வாக்கிலுள்ள 82 மாவட்டங்களில் 13 வகையான அடிக்கட்டுமானத் திட்டங்களுக்கு வனத்துறையின் ஒப்புதல் அவசியமில்லை என்று அறிவித்தது. இதன் மூலம் இப்பகுதிகளிலுள்ள காடுகள் அழிக்கப்பட்டு, பழங்குடியின மக்களின் வாழ்வுரிமை பறிக்கப்பட்டு கார்ப்பரேட் முதலாளிகளின் நலனுக்காக நெடுஞ்சாலைகள் அமைக்கும் திட்டம் தொடங்கப்பட்டது.

● ஒரே அமைச்சகத்தின் கீழ் இருந்தாலும், வனத்துறையின் ஒப்புதலிலிருந்து சுற்றுச்சூழல் துறையின் ஒப்புதல் தனியே பிரிக்கப்பட்டது. இதன் மூலம் வனத்துறையின் ஒப்புதல் கிடைக்காத போதிலும், சுற்றுச்சூழல் துறையின் ஒப்புதலைக் கொண்டு தமது பெரும் திட்டங்களைக் கார்ப்பரேட் நிறுவனங்கள் தொடங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. உச்ச நீதிமன்றமும் இந்த அநீதிக்குத் துணை நின்றது.

● ஒரிசாவின் நியாம்கிரி மலையில் பாக்சைட் கனிமத்தைக் கொள்ளையிடத் துடித்த வேதாந்தா நிறுவனம், வன உரிமைச் சட்டங்களை மீறுவதாகக் கூறிய போதிலும், பின்னர் நீதிமன்றத்தில் வாதிட்ட போது சுற்றுச்சூழல் - வனத்துறை அமைச்சகம், பல்டியடித்தது. காடுகளைச் சார்ந்துள்ள மக்களின் உரிமை மதிக்கப்பட்ட போதிலும், வளர்ச்சித் திட்டங்களுக்காக காடுகளை அழிப்பது தவிர்க்கவியலாதது என்றும், தனிநபரின் உரிமையைவிட அரசின் சமுதாயத்

தலைமைப் பாத்திரம் முக்கியமானது என்றும் வாதிட்டது. இதன் மூலம் காடுகளைச் சார்ந்துள்ள பழங்குடியின மக்களின் உரிமையை 'வளர்ச்சி'யின் பெயரால் அரசே நசுக்கியது. இருப்பினும், வேதாந்தாவின் கொள்ளைக்கு எதிராகப் போராடும் பழங்குடியின மக்களுக்கு ராகுல் காந்தி ஆதரவாக நிற்பதாக வேடம் போட்டுள்ளதால், தற்போதைக்கு கிராமப் பஞ்சாயத்துகளிடம் தடையில்லாச் சான்றிதழ் பெற வேண்டுமென்ற விதியை வலுயுறுத்தி அத்திட்டத்திற்கு இன்னும் ஒப்புதல் அளிக்காமல் சுற்றுச்சூழல் அமைச்சகம் ஒத்திப் போட்டுள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக, 2012-இல் சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சராக இருந்த ஜெயந்தி நடராசன், ''நாட்டின் வளர்ச்சித் திட்டங்களில் எமது அமைச்சகம் முக்கிய பங்கு வகிக்கிறது. வளர்ச்சித் திட்டங்களுக்கு முட்டுக்கட்டையாக சுற்றுச்சூழல் அமைச்சகம் ஒரு போதும் இருக்காது'' என்று அறிவித்தார். கடந்த ஒன்றரை ஆண்டுகளில் தனது அமைச்சகம், 828 திட்டங்களில் 754-க்கு ஒப்புதல் அளித்துள்ளதையும், 18,200 ஹெக்டேர் காட்டுப்பகுதி நிலங்கள் கையளிக்கப்பட்டுள்ளதையும், இன்னும் 57,469 ஹெக்டேர் நிலங்களைக் கையளிப்பதற்கான பரிசீலனையில் இருப்பதாகவும் அவர் பெருமையுடன் கூறினார்.



கார்ப்பரேட் முதலாளிகளின் நம்பகமான விசுவாசி: சுற்றுச்சூழல் - வனத்துறை அமைச்சகத்துக்குப் பொறுப்பேற்றுள்ள பெட்ரோலியத்துறை அமைச்சர் வீரப்ப மொய்லி.

தொழிற்துறை விரிவாக்கத்தால் ஏற்படும் பேரழிவுகளுக்கு எதிராக உலகெங்கும் ''சுற்றுச்சூழல் பாதிப்பின் மதிப்பீடு''(EIA) என்பதை அடிப்படையாக வைத்து பரிசீலனையும் ஒப்புதல் அளிப்பதும், நிராகரிப்பதும் நடந்து வருகிறது. ஆனால் இந்தியாவில், இயற்கை மூலவளங்களைப் பாதுகாக்க வேண்டிய காவலனாக இருக்க வேண்டிய சுற்றுச்சூழல்-வனத்துறை அமைச்சகம், கார்ப்பரேட் முதலாளிகளின் அப்பட்டமான தரகனாக மாறி விட்டது.

ஒரிசாவில் போஸ்கோ அமைக்கத் திட்டமிட்டுள்ள உருக்காலை ஆண்டொன்றுக்கு 1.2 கோடி டன் இரும்பை உற்பத்தி செய்யும் திறன் கொண்டது. ஆனால் இத்திட்டம் குறித்து தயாரிக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் பாதிப்பு பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் ஆய்வறிக்கையோ, ஆலையின் முதல்கட்ட உற்பத்தி இலக்கான 40 லட்சம் டன் இரும்பு உற்பத்தியை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொண்டது. அதாவது 1.2 கோடிடன் இரும்பை உற்பத்தி செய்வதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைப் பற்றி ஆய்வு செய்யாமல், அதில் மூன்றிலொரு பங்கான 40 லட்சம் டன் இரும்பு உற்பத்தியால் ஏற்படும் பாதிப்புகளை மட்டுமே பரிசீலித்து அதன்படி இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும், போஸ்கோ அமைக்கவுள்ள இரும்பு உருக்காலை, மின் உற்பத்தி நிலையம், துறைமுகம் ஆகிய மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து அவை சுற்றுச்சூழலுக்கு ஏற்படுத்தும் பாதிப்புகளை ஆராயாமல், அவற்றைத் தனித்தனி விவகாரமாகப் பிரித்து ஆய்வறிக்கையை அளித்தது.

போஸ்கோ ஆலை அமையவுள்ள பகுதியின் கிராமப் பஞ்சாயத்துகளிடம் தடையில்லாச் சான்றிதழ் பெற வேண்டுமென்ற போதிலும், ஒரிசா மாநில அரசு இப்பகுதியில் பழங்குடியினர் வாழ்ந்துவருவதையே மறைத்துள்ளதோடு, கிராமப் பஞ்சாயத்துகளுக்குப் பதிலாக ஜெகத்சிங்பூர் மாவட்ட நீதிபதியிடமிருந்து தடையில்லாச் சான்றிதழைப் பெற்று மோசடி செய்தது.

தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் இன்னமும் போஸ்கோவுக்கு ஒப்புதல் வழங்கப்படாத நிலையில், அத்தீர்ப்பாயம் 2012-இல் அளித்த இடைக்காலத் தடையை இப்போது வீரப்ப மொய்லி நீக்கியுள்ளார். போஸ்கோவின் இரும்பு - எஃகு ஆலைத் திட்டம் என்பது வேறு, துறைமுகம் அமைக்கும் திட்டம் என்பது வேறு என்று இரண்டையும் வேறானதாகக் காட்டி ஒப்புதல் அளித்துள்ளார்.

இது மட்டுமின்றி, கடந்த ஜனவரி 14 அன்று வீரப்ப மொய்லியின் சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சகம், தற்போதைய நிலக்கரிச் சுரங்கங்கள், மேலும் 50 சதவீத அளவுக்கு விரிவுபடுத்திக் கொள்வதற்கு தாராள அனுமதி அளித்துள்ளது. இத்தகைய விரிவாக்கத்தால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு, கனிமவள இழப்பு, பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்பு பற்றிய எந்த மதிப்பீடும் இதுவரை அறிவிக்கப்படவில்லை.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு தனியார்மய - தாராளமய-உலகமயக் கொள்கைகளைத் திணித்தபோது, அரசுத் துறை நிறுவனங்களும் அவற்றின் அடிப்படைக் கட்டமைப்புகளும் அடிமாட்டு விலைக்குத் தனியாருக்குத் தாரைவார்க்கப்பட்டன. இரண்டாவது சுற்றில் காடுகள், விளைநிலங்கள், கனிம வளங்கள், ஆறுகள் - நீர்நிலைகள், மின்சாரம், தொலைத் தொடர்பு உள்ளிட்ட மக்களின் வாழ்வாதாரங்கள் அனைத்தும் தாரைவார்க்கப்பட்டன. இப்போது இன்னும் மூர்க்கமாகவும் திமிராகவும் அவரச அவசரமாகவும் கார்ப்பரேட் கொள்ளைக்குக் கதவுகள் அகலமாகத் திறந்துவிடப்படுகின்றன.

கார்ப்பரேட் முதலாளிகளில் ஒரு பிரிவினர், எதிர்க்கட்சியான பா.ஜ.க.வின் பிரதமர் வேட்பாளரான மோடியை ஆதரிப்பதாலும், முதலீட்டாளர்களின் நண்பனாக பா.ஜ.க. தன்னைக் காட்டிக் கொள்வதாலும், கார்ப்பரேட் முதலாளிகளிடம் நம்பிக்கையைப் பெற்று வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் கணிசமான இடங்களைக் கைப்பற்றும் நோக்கத்துடனேயே காங்கிரசு அரசு இத்தகைய அதிரடி முடிவுகளை அறிவித்துள்ளது. மொத்தத்தில், நாட்டின் - மக்களின் பொதுச்சொத்துக்களான

நீரும் நிலமும் கனிம வளமும் எவ்விதக் கட்டுப்பாடுமின்றி கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளைக்குத் திறந்து விடப்படுவதும், வாழ்வுரிமை பறிக்கப்பட்டு கோடிக்கணக்கான மக்கள் உள்நாட்டிலேயே அகதிகளாக்கப்படுவதும்தான் இந்த அறிவிப்பின் சாரமாகும்.

வீரப்ப மொய்லியின் அறிவிப்பைத் தொடர்ந்து போஸ்கோ நிறுவனம் கட்டுமானப் பணிகளில் இறங்கத் தொடங்கியதும், ஒரிசாவின் ஜெகத்சிங்பூர் மாவட்டத்தின் நுவாகோன், கோவிந்தபூர், தின்கியா பஞ்சாயத்துகளைச் சேர்ந்த கிராம மக்கள், தங்கள் வாழ்வுரிமையைப் பறிக்கும் போஸ்கோ கட்டுமான அலுவலகத்தைத் தீயிட்டுக் கொளுத்தியதோடு, அதன் 300 மீட்டர் நீள தடுப்புச் சுவரையும் இடித்துத் தள்ளியுள்ளனர். போராடும் மக்கள் மீது மிருகத்தனமான தாக்குதலை நடத்திய அம்மாநில போலீசு, அவர்கள் மீது பொய்வழக்குகளைச் சோடித்து சிறையிலடைத்துள்ளது. நாட்டில் பெயரளவுக்கு இருந்த சட்டங்கள், விதிகள், கட்டுப்பாடுகள், நெறிமுறைகள் முதலான ஜனநாயகப் பம்மாத்துகள் அனைத்தும் கலைந்து, மூர்க்கமான கார்ப்பரேட் கொள்ளையும் அரசின் அப்பட்டமான பாசிசமும் அரங்கேற்றப்படுவதையே இவை நிரூபித்துக் காட்டுகின்றன.

**● மனோகரன்**

# கனிமவளக் கொள்ளைக் கும்பலின் பிடியில் ஒரிசா! நீதிபதி ஷா கமிசன் அம்பலப்படுத்திய உண்மைகள்

**க**ர்நாடகத்திலும் கோவாவிலும் சட்டவிரோத சுரங்க மாஃபியாக்கள் நடத்திய கனிம வளக் கொள்ளை, தமிழகத்தில் வைகுண்டராஜன் வகையறாக்களின் தாதுமணற் கொள்ளை வரிசையில் இப்போது ஒரிசாவில் நடந்துள்ள கனிம வளக் கொள்ளையும் அம்பலமாகியுள்ளது.



ஒரிசாவின் பைதாரிணி ஆற்றை ஒட்டிய பகுதியில், சட்டவிரோதமாகக் கனிமக் கொள்ளையடிக்கும் டாடா, பிர்லாக்களின் சுரங்க நிறுவனங்கள்.

இரும்பு மற்றும் இதர கனிமவளச் சுரங்க முறைகேடுகளைப் பரிசீலிக்க கடந்த நவம்பர் 2010-இல் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஷா தலைமையிலான விசாரணை கமிசன் அமைக்கப்பட்டது. கர்நாடகத்திலும் கோவாவிலும் பல்லாயிரம் கோடிகளுக்கு நடந்துள்ள கனிமவளக் கொள்ளை பற்றி ஏற்கெனவே அறிக்கை அளித்துள்ள இக்கமிசன், இப்போது ஒரிசா மாநிலத்தில் கனிமச் சுரங்க ஒதுக்கீட்டில் முறைகேடுகள் நடந்துள்ளதையும், சட்டவிரோதமாகக் கனிமங்கள் கொள்ளையிடப்பட்டதையும், இதனால் அரசுக்கு ரூ.60,000 கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதையும் அண்மையில் வெளிக்கொணர்ந்துள்ளது. இக்கொள்ளை பற்றி சி.பி.ஐ. விசாரணை நடத்த வேண்டுமெனவும் கோரியுள்ளது.

ஒரிசாவிலும் அதற்கு வெளியிலுமுள்ள பெருமுதலாளிகளும், அதிகாரிகளும், மத்திய - மாநில அரசுகளும், அரசியல்வாதிகளும் கூட்டுச் சேர்ந்து இக்கொள்ளையை நடத்தியுள்ளனர். சுரங்க முதலாளிகளுக்கு மாநில சுரங்கத்துறை அதிகாரிகள் துணையாக நின்று பல கிரிமினல் சதிகளில் ஈடுபட்டுள்ளனர். மொத்த ஆண்டு வரவு-செலவில் அகழ்வுப் பணிகளுக்கு 16 சதவீத அளவுக்கே அரசுத்துறை நிறுவனங்கள் செலவுக் கணக்கு காட்டும் போது, தனியார் நிறுவனங்கள் 62 சதவீத அளவுக்குச் செலவிட்டதாகக் கூறி இலாப விகிதத்தைக் குறைத்து காட்டி மோசடி செய்துள்ளன. நாட்டின் இயற்கை மூலவளங்களை வரைமுறையின்றிக் கொள்ளையிட்டதோடு, இரயில்வேயின் சரக்குக் கட்டணத்தில் முறைகேடுகளையும், சுங்கவரி மோசடிகளையும் செய்துள்ளனர். சுரங்கத் தொழிலாளர்கள் அற்பக் கூலிக்கு சுரண்டப்பட்டு, பழங்குடியினர் தமது வாழ்விடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

முறைகேடாக சுரங்கங்களை ஒதுக்கீடு செய்ததோடு, கொள்ளை அம்பலமான பின்னரும் மீண்டும் அந்நிறுவனங்களுக்கே ஆட்சியாளர்கள் நிபந்தனையுடன் அனுமதி அளித்துள்ளனர். கடந்த 20 ஆண்டுகளாக இந்த ஊழலும் கொள்ளையும் நடந்துள்ள போதிலும், நாட்டின் அரசியலமைப்பு முறையானது இக்கொள்ளையர்கள் முன் கைகட்டி நின்றுள்ளது - என அடுக்கடுக்காகக் குற்றம் சாட்டும் ஷா கமிசனின் அறிக்கை, தற்போதைய அரசியலமைப்பு முறையானது, ஊழலுக்கும் கொள்ளைக்கும் துணை நிற்பதை அம்பலப்படுத்திக் காட்டியுள்ளது. இயற்கை மூலவளங்களையும் பொதுச் சொத்துக்களையும் கொள்ளையடிப்பதுதான் அரசின் எழுதப்படாத பொதுக்கொள்கையாகிவிட்டதை மீண்டும் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறது, ஷா கமிசனின் அறிக்கை.

**● கதிர்**

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...



ரோட்டில் என்னை இறக்கும்போது உங்களுக்கு நான் பெண் என்று தெரியலையா? ஏன் பொம்பளைனா இரவு நேரத்துல பயணம் செய்யக் கூடாதா? அப்படிப்போனா விபச்சாரியாகவோ, ஓடிப் போறவளாகவோதான் இருக்கணுமா? முஸ்லீம் பொண்ணுன்னா ஆண்களுக்கு அடிமையாத்தான் இருக்கணுமா?'' எனப் பதிலடி கொடுத்து அவர்களின் முகத்தில் காறி உமிழ்ந்தார் பாத்திமா.

இந்நிலையில், பு.மா.இ.மு. அமைப்பைச் சேர்ந்த தோழர்கள் கொடுத்த நெருக்குதல் காரணமாக போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தனர். பெண்களுக்கெதிரான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அம்மதவெறிக் கும்பலின் மீது வழக்குப் பதிவு செய்யுமாறு போலீசை நிர்ப்பந்தித்தனர், பு.மா.இ.மு. தோழர்கள்.

த.மு.மு.க. நிர்வாகிகளும் உள்ளூர் ஜமாத்தார்களும் பாத்திமாவிடம் மிகவும் கீழ்த்தரமான முறையில் நடந்துகொண்ட இழிபிறவிகளுக்கு வக்காலத்து வாங்கினர். முதலில் பாத்திமாவை மிரட்டிப் பார்த்த அப்பெரிய மனிதர்கள் பின்னர், ''வழக்கு தொடுத்தால் உனக்குதான் அசிங்கமாக முடியும்'' என்று பீதியூட்ட முயன்றனர். இந்த அவதூறுகள், மிரட்டல்கள் அனைத்தையும் துணிவுடன் எதிர்கொண்டார் பாத்திமா.

ஒரு அதட்டல் போட்டால் அடங்கிப் போய்விடக்கூடிய அப்பாவி இசுலாமியப் பெண்ணாக பாத்திமாவைக் கருதிய த.மு.மு.க. மதவெறிக் கும்பலுக்கு, அவர் புரட்சிகர அரசியலை ஏற்றுக்கொண்ட பெண் என்பதும், அவருக்குப் பின்புலத்தில் நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகள் களமிறங்கக் காத்திருப்பதும் அப்போதுதான் உறைத்தது. அதன் பின், அதுவரை பாத்திமாவிடம் ''பிலிம்'' காட்டிய மதவெறிக் கும்பல் பம்மி, பின்வாங்கத் தொடங்கியது.

ஆப்பசைத்த குரங்கு மாட்டிக்கொண்டதைப் போலத்தாம் சிக்கிக் கொண்டிருப்பது அம்மதவெறிக் கும்பலின் மண்டையில் உறைத்த பின், சேதாரமின்றி இப்பிரச்சினையை முடித்துக்கொள்ள முனைந்தது. ''நடந்தது மொத்தமும் தவறுதான். இனி எந்தப் பெண்ணின் தனி உரிமையிலும் தலையிட மாட்டோம்'' என அவர்கள் நைச்சியமாகப் பேசினர். தவறு செய்த இளைஞர்களின் எதிர்காலம் கருதி வழக்கு இல்லாமல் சமரசமாக முடித்துக் கொள்ளுமாறு பாத்திமாவிடம் மன்றாடினர். சம்பவம் தொடங்கிய அதே கடைவீதியில், பேருந்து அலுவலகத்தில் பகிரங்க மன்னிப்பு கேட்பதாகவும் மன்னிப்புக் கடிதம் எழுதித் தருவதாகவும் கூறி, காலில் விழாத குறையாகக் கெஞ்சினர்.

> **“முஸ்லீம் பொண்ணுன்னா ஆண்களுக்கும் மதத்திற்கும் அடிமையாத்தான் இருக்கணுமா?” எனக் கேள்வியெழுப்பி இசுலாமிய மதவெறியர்களின் முகத்தில் காறி உமிழ்ந்தார் அனீஸ் பாத்திமா.**

இந்நிலையில், இந்துமதவெறி அமைப்புகள் இப்பிரச்சினையில் தலையிட முயற்சித்து, இசுலாமிய எதிர்ப்பு மதவெறிக் கலவரமாக மாற்றுவதற்கான சதியில் இறங்கின. ''இசுலாமிய மதவெறிக் கும்பலுக்கும் தக்க பாடம் புகட்ட வேண்டும்; அதேசமயம் இந்து மதவெறி அமைப்புகள் இதனைப் பயன்படுத்தி கலவரத்தை உருவாக்கவும் வாய்ப்பளித்துவிடக் கூடாது'' என்ற நோக்கிலிருந்து சமரசத்துக்கு ஒத்துக்கொண்டார் தோழர் பாத்திமா.

ஏதோ ஒரு அனீஸ் பாத்திமாவிடம் த.மு.மு.க.வைச் சேர்ந்த சில இசுலாமிய இளைஞர்கள் தவறாக நடந்து கொண்ட தனிப்பட்ட சம்பவமாக இதனைச் சுருக்கிப் பார்க்க முடியாது. இசுலாமிய மதச் சடங்குகளைப் புறக்கணித்து சீர்திருத்த முறையில் திருமணம் செய்துகொண்ட காரணத்துக்காக பு.மா. இ.மு. வைச் சேர்ந்த அலாவுதீனிடம் கீழ்த்தரமாக நடந்து கொண்டது; தொண்டி அருகே இசுலாமியக் குடியிருப்புப் பகுதியில் பால் பாக்கெட் போடும் 'இந்து' மதத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் 'இந்து' மதத்தைச் சேர்ந்த தனது காதலியுடன் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்ததை ஒரு இசுலாமியப் பெண்ணுடன்தான் பேசிக்கொண்டிருக்கிறார் எனச் சந்தேகித்து அவர் மீது கொலைவெறி தாக்குதலைக் கட்டவிழ்த்துவிட்டது; மணமேல்குடியில் திருமணமான ஒரு இசுலாமியப் பெண், இந்து மதத்தைச் சேர்ந்த குடும்ப நண்பர் ஒருவருடன் இருசக்கர வாகனத்தில் சென்றதை நோட்டமிட்டு, அவரது வீட்டிற்குள் புகுந்து அவரை இழிவுப்படுத்தியது; காரைக்குடி அருகே, சொந்த அண்ணனும் தங்கையும் கடைவீதியில் நடந்து சென்றதைக்கூடத் தவறாகச் சித்தரித்து அவர்களை இழிவுப்படுத்தியது - என த.மு.மு.க., தவ்ஹீத் ஜமாஅத் உள்ளிட்ட மதவெறிக் கும்பல்களின் அடாவடித்தனங்களைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

இசுலாமிய மக்களின் ஒட்டுமொத்த பிரதிநிதி போலவும், இசுலாமியப் பண்பாட்டைக் காப்பது என்ற பெயரிலும் முசுலீம் மக்களின் மீது தமது சர்வாதிகாரத்தைத் திணிக்க முயலும் த.மு.மு.க. உள்ளிட்ட மதவெறிக் கும்பல்களைப் புரட்சிகர - ஜனநாயக விழுமியங்களின் கீழ் நின்று துணிவுடன் எதிர்த்து நிற்பதன் மூலமும், அம்பலப்படுத்தித் தனிமைப்படுத்துவதன் மூலமும்தான் இந்தச் சவாலை நாம் எதிர்கொள்ள முடியும். பு.மா.இ.மு.வும், அனீஸ் பாத்திமாவும் அதனைச் சாதித்துக் காட்டியுள்ளனர்.

- கலைமதி

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/12-14. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/12-14

# சத்திய சோதனை!



## மம்தா - ஜெயா தயவில் பிரதமர்: மோடியின் அரசியல் பயணம்!